
கோகுலம்
GOKULAM
ஜூன் '98 ரூ. 5.00
வண்ண லேபிள்கள் இலவசம்!
பறக்கும் ரயில் படுஜோர்!



கோகுலம்

ஜூன் 1998 மலர் : 16 இதழ் : 5

அன்பார்ந்த சிறுவர் சிறுமியரே,

விடுமுறையை ஆனந்தமாகக் கொண்டாடினீர்களா? ஏதாவது புதிய இடங்களுக்குச் சென்று அபூர்வ அனுபவங்களை அடைந்திருப்பீர்களே! இந்த இதழில் பறக்கும் ரயிலில் பயணம் செய்த சிறுவனும் சிறுமியும் பேசுவதைப் படியுங்கள்! அது போல நீங்களும் உங்கள் அனுபவங்களை கோகுலத்துக்கு எழுதி அனுப்பலாம். கோகுலம் உங்கள் பத்திரிகை. நிறைய எழுதி உங்களைப் போன்ற சக மாணவ மாணவியருடன் உங்கள் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளலாம். அனுபவங்களைப் பற்றி மட்டுமின்றி உங்களுடைய சிந்தனைகளையும் எழுதலாம். நாட்டு நடப்பு குறித்து யோசிக்கலாம். சமுதாய பிரச்னைகளில் ஆர்வம் காட்டலாம். ரசமான அனுபவங்களுக்கும் கருத்துகளுக்கும் கோகுலம் நிச்சயம் வரவேற்பு அளிக்கும். உங்கள் பெயர், வீட்டு விலாசம், வயது, பள்ளி விலாசம், வகுப்பு முதலானவற்றை மறக்காமல் குறிப்பிடவும். அப்போதுதானே கோகுலம் கழல் கோப்பை பெறவும் முயற்சி செய்ததாகும்!

பள்ளிக்கூடம் திறந்ததும் நண்பர்களை மீண்டும் சந்திப்பதில் ஒரு சந்தோஷம் என்றால் மேல் வகுப்பில் அமர்வதில் ஒரு அலாதி 'திரில்'! புதிய புத்தகங்களையும் நோட்டுப் புத்தகங்களையும் வாசனை பிடிப்பீர்கள்! அட்டை போடுவீர்கள்! வருஷக் கடைசி வரை இதே போல் புத்தம் புதிதாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆசையில் தவறில்லை. அதற்காக புத்தகங்களைத் தொடாமலே இருந்து விடாதீர்கள்! இப்போது முதலே படிக்க ஆரம்பித்து விடுங்கள். தும்பை விட்டு விட்டு வாலைப் பிடித்த கதையாகி விடக்கூடாது பாருங்கள்!

கடைசியாக ஒரு முக்கிய விஷயம். அடுத்த ஜூலை இதழ் முதல் கோகுலம் ஒரு ரூபாய் விலை உயர்கிறது. என்ன செய்வது, பத்திரிகைக் காகிதத்தின் விலை கிடுகிடுவென்று ஏறும்போது பத்திரிகையின் விலையையும் கூட்டத்தான் வேண்டியிருக்கிறது. ஆறு ரூபாய் என்பது உங்கள் பெற்றோருக்கு ஒரு பெரிய விஷயமே இல்லை. ஒரு கப் காப்பிக்குக் கூட ஐந்தரை ரூபாய்க்கு பில் போடுகிறார்கள். ஒரு கொக்கோ கோலா அல்லது ஐஸ்கிரீம் விலை என்ன என்பது நான் சொல்லியா உங்களுக்குத் தெரிய வேண்டும்? கோகுலம் இதையெல்லாம் விட அதிகமான மகிழ்ச்சியை பல மணி நேரத்துக்கு அளிக்கிறதல்லவா?

பெற்றோர்களுக்கும் ஒரு வார்த்தை:

உங்கள் குழந்தைக்கு நீங்கள் வாங்கித் தரக்கூடிய மிக உயர்தரமான, அதே சமயம் மிக மலிவான பரிசு கோகுலம் தான். இரவல் பெற்றுப் படிக்கட்டுமே என்று இராமல் உங்கள் குழந்தைக்கு மாதா மாதம் கோகுலம் வாங்கிக் கொடுங்கள்.

அன்புடன்,

(ஜெ. ராஜேந்திரன்)
ஆசிரியர்




உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். — பாரதியார்

கோகுலம்

ஜூன் 1998

இந்த இதழில்...










குவாக்... குவாக்...


'கோகுலத்தில் வரும் காகித உருவங்களைத் தொடர்ந்து செய்து கொண்டு வருகிறேன். எனக்காக ரோஜாப்பூ, வாத்து செய்து காட்டுங்களேன்!'

— என். வித்யா,
எட்டாம் வகுப்பு, திருவள்ளூர்.


நிறைய பேர் தங்கள் விருப்பங்களைக் கேட்டு எழுதுகிறார்கள். ஒருவருக்கு ஒரு வாய்ப்பு என்ற அடிப்படையில் உங்கள் விருப்பத்தில் 'வாத்து' மட்டும் செய்து காட்டப்படுகிறது.




1. வழக்கம் போல் சதுர வடிவத்தாள் ஒன்றை எடுத்து படத்தில் காட்டியவாறு பிடித்துக் கொள்ளுங்கள்.




2. மேலிருந்து கீழ் நோக்கி மடியுங்கள். மீண்டும் கீழ் உள்ள முனைகளை மேலே வருமாறு மடியுங்கள்.




3. படத்தில் காட்டியபடி இடது முனையை செங்குத்தாக நிற்கும்படி மடிக்கவும்.




.. செங்குத்தாக மடிக்கப்பட்ட பகுதியின் நுனியை சிறிது மடித்து விடுங்கள்.





5. இதோ வாத்து தயார்.
மகிழ்ச்சிதானே வித்யா!



ஒளி வீசுது!



உண்டியல்

தபால்காரரின் மணிச்சத்தம் கேட்டவுடனே ஆனந்தும், மஞ்சுவும் போட்டிப் போட்டுக் கொண்டு ஓடிச் சென்று கடிதத்தை வாங்கினர்.

ஒரு வாரமாக எதிர்பார்த்திருந்த அத்தையின் கடிதம் இன்று கிடைத்ததில் இருவருக்குமே ஆனந்தம். பரபரப்பாக கடிதத்தைப் பிரித்தனர். அடுத்த மாதம் வருவதாக இருந்த அத்தை மறுநாளே வரப்போவது அறிந்தவுடன் மஞ்சுவுக்கு கொண்டாட்டம். ஆனந்துக்கோ திண்டாட்டம்.

ஆனந்தின் முகம் வருத்தத்தில் தோய்ந்து விட்டது. மெதுவாக மஞ்சுவைப் பார்த்தான்.

"நீ உண்டியலை உடைச்சுட்டியா?" என்று ஆனந்த் கேட்க மஞ்சுவின் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. "உடைச்சி எண்ணிக் கூட வச்சுட்டேன். ஐம்பத்தியொரு ரூபாயும் அறுபது காசும் இருக்குது" என்று கேலியாகச் சிரித்தாள்.

"அத்தை வந்து கேட்டாங்கன்னா, என்ன பண்ணுவே." என்று கேட்டாள் மஞ்சு. "நாளைக்குதான் வரப்போறாங்க, அதுக்குள்ளே சரி பண்ணிடறேன் பாரு" என்று சொல்லிவிட்டு அம்மாவிடம் ஓடினான் ஆனந்த்.

"அம்மா..."

"என்ன வேணும்?"

"ஒரு ஐம்பது ரூபா இருக்குதா?"

"எதுக்குடா இவ்வளவு பணம்?" என்று அம்மா கேட்க, அவன் சொல்வதற்குள் மஞ்சு முந்திக் கொண்டாள்.

"அதுவாம்மா, போன முறை பொங்கலுக்கு அத்தை வந்தாங்களே, அப்போ எங்க ரெண்டு பேருக்கும் ஆளுக்கொரு உண்டியல் தந்தாங்க. அடுத்த முறை நான் வரும்போது நீங்க இந்த உண்டியல்லே எவ்வளவு காசு சேர்த்து வச்சிருக்கீங்களோ அவ்வளவு

மொட்டை!

நந்தினி ஊருக்குச் சென்று விட்டு அன்றுதான் பள்ளிக்குத் திரும்பியிருந்தாள்.

அவள் வகுப்பு மாணவிகள் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள்.

அவர்கள் சிரிக்கக் காரணமாகயிருந்தது நந்தினியின் மொட்டைதான். அவளும் எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். பாட்டி கோயிலுக்கு மொட்டையடிக் காமல் போகக்கூடாது என்று சொல்லி விட்டு இவள் அழ, அழ மொட்டைப் போட வைத்து விட்டார்.

பக்கத்தில் உட்கார்ந்திருந்த ரேகாதான் அதிகமாகக் கிண்டல் செய்தாள்.

"நம்ம வகுப்பே ஒளி வீசுது பாருங்க,



பணம் நானும் உங்களுக்குத் தருவேன்னு சொன்னாங்க. நான் ஐம்பத்தொரு ரூபாயும் அறுபது காசும் சேர்த் திருக்கிறேன். அத்தை எனக்கு ஐம்பத்தொரு ரூபாயும் அறுபது காசும் தருவாங்க. ஆக மொத்தம் நூற்று மூணு ரூபாயும் இருபது காசும் ஆயிடும். அதற்கு அழகா ஒரு கைக்கடிகாரம் வாங்கிப்பேன். ஆனால், ஆனந்தோ நீங்க அப்பப்போ கொடுத்த காசையெல் லாம் தின்பண்டமா வாங்கி சாப்பிட்டு காலி பண்ணிட்டான். இப்போ ரவுண்டா ஐம்பது ரூபா உங்களிடம் வாங்கி டபுளாக்கி விடலாம்னு நினைக்கிறான்'' என மூச்சு விடாமல் சொல்லி முடித்தாள் மஞ்சு.

"மாதக் கடைசி, என்னிடமும் காசு இல்லையே'' என அம்மா கையை விரித்தார்.

மறுநாள் அத்தையைப் பார்த்ததும் காசையெல்லாம் எடுத்து வந்து அத்தையிடம் நீட்டினாள் மஞ்சு.

மஞ்சுவின் சிக்கனத்தையும், திறமையையும் கண்ட அத்தை மஞ்சுவுக்கு தான் கூறியபடி மேலும் ஐம்பத்தொரு ரூபாயும் அறுபது காசும் கொடுத்தார். மற்றொரு பரிசாக ஓர் அழகிய கைக்கடிகாரத்தை மஞ்சுவின் கையில் கட்டிவிட்டார்.

இதையெல்லாம் பார்த்த ஆனந்த் முகம் சோகமாகி விட, மஞ்சு அத்தை யிடம் நடந்ததையெல்லாம் கூறினான். "சரி ஆனந்த், இனிமேலாவது சிக்கனமா இரு. அடுத்த முறை வரும்போது உனக்கு கைக்கடிகாரம் வாங்கி வருகிறேன்'' என்றார்.

மஞ்சுவோ, "என்னிடமுள்ள காசுக்கு இப்போதே தம்பிக்கு கைக்கடிகாரம் வாங்கிக் கொடுங்கள் அத்தை''. என்றாள்.

— சு. கண்மணி, பிட்டூர்.

நந்தினியோட மொட்டையாலே'' என்று கூறினாள் ரேகா.

இது தவிர அடிக்கடி மொட்டையை தடவியோ, தட்டிட்டோ போயிட்டும் வந்துட்டும் இருந்தாள்.

நாட்கள் சென்றன. நந்தினிக்கு ஓரளவு முடி வளர்ந்து விட்டது.

அன்று பள்ளிக்கு வந்த ரேகாவைப் பார்த்ததும் நந்தினிக்கு திக்கென்றிருந்தது. அதற்கு காரணமும் மொட்டைதான்.


நந்தினி கிண்டல் செய்வாளோ என பயந்தபடி பார்த்தாள் ரேகா.

"ஏன் ரேகா மொட்டை போட் டுட்டே?'' என்று ஆதரவாகக் கேட்டாள் நந்தினி.

"எனக்கு பொடுகு வந்து விட்டது. டாக் டர் மொட்டையடித்தே ஆக வேண்டும் என்று கூறிவிட்டார். அதான் தலையில துணி கட்டியிருக்கேன்'' என்றாள் அழுத படியே ரேகா.

"எதுக்கு ரேகா அழறே? யாரும் எதுவும் சொல்ல மாட்டாங்க'' என்று தேற்றினாள் நந்தினி.

— . ஆர். செல்வகாயத்ரி, கக்கோலம்



வெல்ல முடியாது!



ஆமை முயலை வென்ற கதையைக் கேள்விப்பட்ட நாளிலிருந்தே நத்தையாருக்குத் தூக்கமே இல்லாமல் போய் விட்டது.

நம்மைப் போல மெதுவாக ஊர்ந்து செல்லும் ஆமையாருக்குக் கிடைத்த பெருமை நமக்குக் கிடைக்கவில்லையே என்ற வருத்தந்தான் ஒவ்வொரு நாளும் நத்தையாரைப் போட்டு வாட்டி எடுத்துக் கொண்டிருந்தது.

இரவும் பகலும் இதையே தீவிரமாக எண்ணிக் கொண்டிருந்த நத்தையாருக்கு மின்னல் போல ஒரு யோசனை தோன்றியது.

மெதுவாக ஓட்டும் 'சைக்கிள் பந்தயம்' நடைபெறுவதைப் போல மெதுவாகச் செல்லும் பந்தயம் ஒன்றை நடத்தினால் நமக்கு வெற்றி பெறும் வாய்ப்புக் கிடைக்கலாம் என்ற யோசனை நத்தைக்குத் தோன்றியது. தன்னுடன் போட்டியிட யாரை அழைப்பது என நத்தை யோசித்தது.


"நான் எல்லாப் போட்டியிலும், யாரை வேண்டுமானாலும் வென்று விடுவேன். என் உடல் பலத்தால் முடியாவிட்டாலும். அறிவால் வென்றிடுவேன். என்னை வெல்லும் தகுதி காட்டில் யாருக்கும் கிடையாது" என்று சதா தம்பட்டம் அடித்து வந்த நரியின் நினைவு நத்தைக்கு வந்தது.

தன்னோடு போட்டியிட, தற்பெருமை பேசித் திரியும் அந்த நரிதான் சரி என முடிவு செய்தது நத்தை.

மறுநாள் மாலை நரியைச் சந்தித்த நத்தை "என்னோடு போட்டி போடத் தயாரா?" எனக் கேட்டது.

அதைக் கேட்ட நரி விழுந்து விழுந்து சிரித்து விட்டு. "அப்படி என்ன போட்டி? கொஞ்சம் விளக்கமாகத்தான் சொல்லேன்" என்றது.





அதற்கு நத்தை, "இது மெதுவாகச் செல்லும் போட்டி. நம் இருவரில் யார் மிகவும்



மெதுவாகச் செல்கிறோமோ அவர்தான் வெற்றி பெற்றவர். ஆனால் ஒரு கண்டிஷன். இருந்த இடத்திலேயே இருக்காமல் வெற்றிக்கோட்டை நோக்கி நகர்ந்தபடியே இருக்க வேண்டும். சரியா?" என்றது.

தனக்கே உரிய தலைக் கனத்தாலும் அடுத்த இனத்தை அற்பமாக எண்ணும் அலட்சியப் புத்தியாலும் போட்டியில் பங்கெடுக்க நரி சம்மதித்தது.

நத்தையோடு நரி போட்டி போடும் செய்தி காட்டுத் தீயெனப் பரவியது.

எல்லா விலங்குகளும் போட்டி நடக்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தன.

தரையில் போடப்பட்டிருந்த கோட்டில் நத்தையும் நரியும் தயார் நிலையில் நின்றன.

சிங்க ராஜா விசில் ஊதி போட்டியைத் தொடங்கி வைத்தார்.

நத்தை வழக்கம்போல் மெதுவாக நகரத் தொடங்கியது.

நரியோ முன்னங்கால்களைக் கொஞ்சங் கொஞ்சமாக சிரமப்பட்டு நகர்த்திக் கொண்டிருந்தது.

வெகு நேரமாகியும் நத்தை சொற்ப தூரத்தைக்கூடக் கடந்த பாடில்லை.

அதைக் கண்ட நரிக்கு ஆத்திரம் தாங்கவில்லை; கால்கள் வலித்தன; பசியோ வயிற்றைக் கிள்ளியது; தலை சுற்றியது.


மாலை நேரம் நெருங்கியும்கூட நத்தை பாதி தூரத்தைக்கூடக் கடக்கவில்லை.

வெற்றிக் கோடோ வெகு தொலைவில் இருந்தது; போகிற போக்கைப் பார்த்தால் போட்டி எவ்வளவு நாளில் முடிவடையும் என்றே நரிக்குப் புரியவில்லை!

தன்னால், இனி மேலும் தாக்குப் பிடிக்க முடியாது என்பதை உணர்ந்து கொண்ட நரி, தான் தோற்றுப் போனதை நத்தையிடம் ஒப்புக்கொண்டு தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு ஓடியது.

நரியின் தலைக் கனத்தைத் தவிடு பொடியாக்கிய நத்தையை எல்லா விலங்குகளும் பாராட்டி மகிழ்ந்தன.

— கானா. கணேசன்



அன்புள்ள கோகுலம்
வாசகர்களின்
பெற்றோர்களுக்கு,

பத்திரிகைக் காகிதத்தின் கிடு கிடு விலை உயர்வு காரணமாக வேறு வழியின்றி கோகுலத்தின் விலையை அடுத்த ஜூலை இதழ் முதல் ஆறு ரூபாயாக நிர்ணயித்துள்ளோம்.

தொடர்ந்து நல்லாதரவு அளிக்க வேண்டுகிறோம்.

உங்களுக்குத் தெரியாதது அல்ல. ஒரு கப் காப்பியின் விலை, அல்லது ஒரு கொக்கோ கோலா விலை என்ன என்பது. அவற்றையெல்லாம் விட மிக அதிகமான மகிழ்ச்சியை நீண்ட நேரத்துக்கு அளிப்பது கோகுலம்.

மறவாதீர்கள்!
நீங்கள் உங்கள் குழந்தைக்கு அளிக்கக்கூடிய மிக மலிவான, அதே சமயம் மிகப் பயனுள்ள பரிசு கோகுலம் மட்டுமே. அவசியம் வாங்கிக் கொடுங்கள்.

பதிப்பாளர்,
கோகுலம்

அடுத்த இதழிலிருந்து
கோகுலத்தின் விலை ரூ. 6/-



சார் தபால்!

✉ கரடியிடமிருந்து தப்பிக்க நீலன் செய்த புத்திசாலித்தனமான செயல் பாராட்டுக்குரியது.

க. மணிகண்டன்,
ஒன்பதாம் வகுப்பு, பாலையம்பட்டி,
விருதுநகர் மாவட்டம்.

✉ ஈல் மீன்களின் வாழ்க்கை முறையும் உடல் அமைப்பும் விந்தையாக இருந்தது. பிறந்ததும் யாருடைய வழிகாட்டுதலும் இல்லாமல் நீண்ட தூரம் பயணம் செய்வது அதிசயம்தான்!

என். ராஜி, மேலப்பாதி.

✉ சிறியவர் முதல் பெரியவர் வரை கத்தரிக்காயைப் பயன்படுத்தி வந்தாலும் அதன் தோற்றம், உற்பத்தி, சத்துகளைப் பற்றி கோகுலமே எங்களுக்கு அறியச் செய்தது.

தேனி முருகேசன், தேனி.

✉ 'இலைகளில் உயிரியல் பூங்கா' புதிய முயற்சி. உடனே இலைகளைச் சேகரித்து செய்து பார்த்தேன்.

பி. கவிதா, ஈரோடு.

✉ டான்கிராம் விளையாட்டு மிகவும் சுவாரசியமாகவே இருக்கிறது. எங்கள் வீட்டிற்கு வந்திருந்த உறவினர்களிடமும் நண்பர்களிடமும் இதை அறிமுகப்படுத்தி செய்யச் சொன்னேன். அவர்களுக்கும் ஆர்வம் வந்து விட்டது. புதிது புதிதாக தினமும் உருவங்களை உருவாக்கி வருகிறேன். நீங்கள் நம்பவே மாட்டீர்கள்! நான் இதுவரை நாற்பது உருவங்களை உருவாக்கியிருக்கிறேன். இன்னும் செய்வேன்.

சி. மஞ்சுளா, எட்டாம் வகுப்பு,
பெரியகுளம், தேனி மாவட்டம்.

✉ கோடை விடுமுறையைக் கழிக்க மே மாத கோகுலம் பெரும் உதவி புரிந்துள்ளது.

ஆர். சஞ்சய்,
பெல் டவுன்ஷிப், திருச்சி.

✉ எங்கள் விடுமுறை அனுபவங்களை எழுதி அனுப்பலாமா? பிரசுரிப்பீர்களா?

மா. வைதேகி, ஏழாம் வகுப்பு,
ஆத்தூர், சேலம் மாவட்டம்.

விடுமுறை அனுபவங்களை எழுதி அனுப்பலாம். சுவையான அனுபவங்கள் கோகுலத்தில் இடம் பெறும்.

(– ஆர்)

✉ இந்தியா, பாகிஸ்தானின் இரண்டு 'அசார்'களுமே மேலும் மேலும் சாதனைகளைப் படைக்க எங்களின் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பா. வனிதா,
பா. நாராயணன், உளுந்தூர்பேட்டை.

✉ நான் தஞ்சையில் வசித்து வருகிறேன். என்னுடைய வயது 13. எனக்கு கிரிக்கெட்டில் சேர வேண்டும் என்று ஆசை. என் பெற்றோரிடம் கூறினேன். எங்கு சேர்ப்பது? எப்படி பயிற்சியளிப்பது என தெரியாது என்று கூறி விட்டனர். இதைப் பற்றி கட்டுரை வெளியிட்டால் என் போன்றவர்களுக்கு உதவியாக இருக்கும்.

வீ. ரகுராமன்,
தஞ்சாவூர்.

விரைவில் உங்களுக்கு பயனளிக்கும் வகையில் தகவல்களை அளிக்கிறோம். (– ஆர்)

நம்பவே மாட்டீர்கள்!



விருந்து!

எஸ்.ஆர்.ஜி. சுந்தரம்

காட்சி - 1

இடம் : மணிவேல் வீடு

(மணிவேல் நண்பன் நரேனுக்கு விருந்தளித்துக் கொண்டிருக்கிறான்.)

மணிவேல் : நரேன்! நல்லா சாப்பிடு! நாப்கினை மடியிலே சரியா விரிச்சுக்கோ. என்ன பீட்ருட் 'சூப்'லே பாதிதான் சாப்பிட்டிருக்கே!

நரேன் : மணிவேல் எவ்வளவு 'ஐடெம்ஸ்' வச்சிருக்கே. இதுவரைக்கும் சாப்பிட்டதில்லாம இன்னும் பூரி சென்னா, ரசவடை, ரசகுல்லா ஐய்யோ ரொம்ப அதிகம்! எனக்கு இருக்கிறது ஒரு வயிறுதான்!

மணிவேல் : நரேன், மூச்! இன்னிக்கு உன்னோட பிறந்தநாள். மடமடன்னு எல்லாத்தையும் உள்ளே தள்ளு!

ஜான் : ஆமாம் நரேன். மணிவேல் ஆசையா ஏற்பாடு பண்ணியிருக்கான். சாப்பிடு!

சுரேஷ் : கவிதைப் போட்டியிலே நீ கலந்துக்க இன்னும் நேரம் இருக்கு; மெதுவா சாப்பிடு!

நரேன் : மணிவேல்! வயிறு முட்ட சாப்பிட்டாச்சு! இனிமேலும் சாப்பிட்டா வயிறு வெடிச்சுடும். நான் வரேன்.

மணிவேல் : இரு நரேன்! நண்பர்களே! நமது அருமை நண்பன் நரேன் ஒரு கவிஞன். நரேனின் பிறந்த நாளான இன்று, அவன் பிற்காலத்தில் நல்லதொரு கவிஞனாக வர வாழ்த்துகிறோம்! நரேனுக்குக் கலைவாணியின் அருள் கிடைக்கும் வகையில் இந்த அழகிய கலைவாணியின் சிலையையும், மகாகவி பாரதியின் கவிதைப் புத்தகங்களையும் பரிசாக அளிக்கிறோம்! *(கை தட்டல்)*

நரேன் : மணிவேல்! உனக்கும் நண்பர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி! ஆனால், ஒவ்வொருமுறையும் என் பிறந்த நாளுக்கு உன் வீட்டிலே விருந்து தர்றமாதிரி, நானும் உன் பிறந்த நாளுக்கு என் வீட்டிலே விருந்து தர முடியல்லே. அதை நினைச்சாத்தான் வருத்தமா இருக்கு.

ஜான் : அதுக்கென்ன? அடுத்த மாதமே மணிவேலின் பிறந்த நாள் வருது. உன் வீட்டிலேயே விருந்து வச்சுக்கலாமே நரேன்.

கணேஷ் : ஆமாம்! நாங்க எல்லாரும் இப்பவே ரெடி.! சரின்னு சொன்னா நாலு நாள் பட்டினி கிடந்து வயிற்றை காலியா வச்சுக்கிட்டு வருவோம்!

நரேன் : நான் வரேன் நேரமாயிட்டுது. *(நரேன் செல்கிறான்).*

ஜான் : இந்த நரேன் ஏன் இப்படி நடந்துக்கறான்னே புரியல்லே. சாதாரணமாக் கூட வீட்டுக்கு வாங்கன்னு இதுவரை நம்ம யாரையும் கூப்பிட்டதில்லே!

சுரேஷ் : இப்ப கணேஷ் ஆசையா சொல்லி கூட, மணிவேல் பிறந்த நாள் விருந்தை தன் வீட்லே வச்சுக்க தயங்க றான்.

கணேஷ் : டேய் போன வாரம் நமக்கு அவசரமா அவனோட நோட்டுக் தேவைப் பட்டது. அதை வாங்கிக்க அவனோட வீட்டுக்கு நாம வரதா சொன்னப்போ, அவன் சாமர்த்தியமா நம்மை வர வேண் டாம்னு சொல்லிட்டான்.

ஜான் : அது மட்டுமில்லாம, அந்த நோட்டுப் புத்தகங்களை அவனே நம்ம வீட்டுக்குக் கொண்டு வந்து கொடுத்துட் டான்.

மணிவேல் : ஆக, நாம அவன் வீட் டுக்கு வருவதை அவன் விரும்பல்லே. கவலைப்படாதிங்க. காரணத்தைக் கண்டு பிடிச்சுடுவோம்!

காட்சி - 2
இடம் : நரேன் வீடு

அப்பா : நரேன்... நரேன்!

நரேன் : என்னப்பா?

அப்பா : காலையிலே வர வழியிலே உன் நண்பர்கள் மணிவேல், கணேஷ், ஜான், சுரேஷ் எல்லாரையும் பார்த்தேன். என்னை நல்லா விசாரிச்சாங்க. அன்பா பேசினாங்க.

நரேன் : உங்களை எப்படி அடை யாளம் தெரிஞ்சுக்கிட்டாங்க?

அப்பா : ரெண்டு மாசம், முன்னால பேச்சுப் போட்டியிலே நீங்க எல்லாரும் கலந்துக்கிட்டப்போ, நானும் வந்திருந்தேன் இல்லே. அப்போ பார்த்ததை நினைவிலே வச்சிருக்காங்க.

நரேன் : உங்களை நேரிலே சந்திச்சு மூலிகை பத்தி நிறைய தெரிஞ்சுக்கணும்னு கூட அவங்க ஆசையா இருக்காங்க. நான் தான் அவங்களை இன்னும் வீட்டுக்குக் கூப்பிடல்லே!

அப்பா : ஏன்?

நரேன் : அது வந்து....

அப்பா : பரவாயில்லை! அவங்க எல் லாரும் நாளை மாலையிலே நம்ம வீட் டுக்கு வருவதாகச் சொல்லியிருக்காங்க! நான் விலாசத்தைக் கொடுத்திருக்கேன்.

நரேன் : உண்மையாகவா சொல்றீங்க?

அப்பா : ஆமாண்டா, அவங்க கட் டாயம் நாளைக்கு வருவாங்க. ஆமாம், நாளைக்கு மணிவேலோட பிறந்த நாள்னு சொல்லிக் கிட்டிருந்தே இல்லே!

நரேன் : ஆமாம்ப்பா.

அப்பா : என்ன ஒரு மாதிரியா இருக்கே?

நரேன் : ஒண்ணுமில்லேப்பா!



"நம்முடன் பள்ளிக் கூடத்திலே படிச்ச 'நாகராஜன்' இப்போ என்ன பண்றான்?"

"'படம்' எடுத்துக்கிட்டிருக்கான்!"

— டி.என். பாலகிருஷ்ணன்

காட்சி - 3
இடம் : நரேன் வீடு

அப்பா : என்ன நரேன், திடீர்னு ஒட் டடை அடிச்சுக் கிட்டிருக்கே?


நரேன் : ப்ரெண்ட்ஸ் எல் லாம் வராங்களே. அதான்!

அப்பா : பாத்து மெதுவா அடி. அடுத்த வருஷந் தான் புது ஓலை மாத்தணும்! நரேன்

அவங்க வந்தா இருக்கச் சொல்லு. நான் வெளியிலே கொஞ்சம் அவசரமா போயிட்டு வந்துடறேன்.

நரேன் : சரிப்பா.

அப்பா : நரேன், உனக்குக் கவிதைப் போட்டியிலே பரிசா கிடைச்ச இருநூறு ருபாயை அப்படியே வச்சிருக்கே இல்லே. அதைக் கொண்டு வா. மளிகைக் கடைக்கு பாக்கி இருக்கு தரணும்.



நரேன் : அப்பா. இன்னிக்கு மணிவேலோட பிறந்த நாள். என்னோட ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் அவன் விருந்து தந்துக்கிட்டிருக்கான். அதனால....

அப்பா : அதனால நீயும் அவனுக்கு நம்ம வீட்லே விருந்து தரப் போறே. அவ்வளவுதானே. சரி! வரேன்!

காட்சி - 4

இடம் : நரேன் வீடு

மணிவேல் : நரேன்! நரேன்!

நரேன் : அடேடே! வாங்க! வாங்க!

ஜான் : நரேன்! நீ எங்களை உங்க வீட்டுக்கு கூப்பிடாட்டாலும், உங்க அப்பா வரச் சொல்லிட்டார்.

சுரேஷ் : ஆமாம். இப்ப உங்க அப்பாவைப் பார்க்கத்தான் வந்தோம். அப்பா வீட்டிலே இல்லையா?

நரேன் : வெளியிலே போயிருக்கார்; வந்துடுவார்.

மணிவேல் : என்ன நரேன். கை விரல்லே கட்டு?

நரேன் : எதிர் வீட்லேருந்து இந்த நாற்காலிகளைக் கொண்டு வந்து போடறப்போ அடிபட்டுடுத்து. சின்னக் காயம் ... உட்காருங்க ... இருக்கு இல்லே. இந்தாங்க ஆளுக்கொரு விசிறி! விசிறிக்குங்க.

ஜான் : நரேன், கொஞ்சம் தண்ணி கொடுடா!

நரேன் : இதோ தரேன். என்ன அப்படி பாக்கறீங்க? இந்தச் சின்னக் குடிசைதான் எங்க வீடு! ஃப்ரிட்ஜ் கிடையாது. அதனால 'ஐஸ் வாட்டர்' தர முடியாதுடா! தப்பா நினைக்காதீங்க. பானையிலே 'ஜில்'லுன்னு பானகம் இருக்கு. தரேன். இந்தாங்க!

மணிவேல் : பானகம் நல்லாயிருக்குடா! ஆமாம், அப்பா எப்போ வருவார்?

நரேன் : இப்ப வந்திடுவார். மணிவேல், இன்னிக்கு உன்னோட பிறந்த நாள். எல்லாருமா எங்க வீட்டுக்கு வந்திருக்கீங்க. ரொம்ப மகிழ்ச்சி. உன்னோட பிறந்தநாள் விருந்தும் இன்னிக்கு இங்கேதான்.

மணிவேல் : எதிர்பாராத விருந்தா? ரொம்ப மகிழ்ச்சி நரேன்!

நரேன் : கொஞ்சம் இருங்க. மாது வந்ததும் விருந்து ரெடியாயிடும்!

சுரேஷ் : நம்ம வகுப்பு மாதுதானே?

நரேன் : ஆமாம். அவன் எதிர்வீட்லேதான் இருக்கான். அவனைத்தான் ஓட்டலுக்கனுப்பி உங்களுக்குப் பிடிச்ச 'ஐடெம்ஸ்' வாங்கிக்கிட்டு வரச் சொல்லி



உலகிலேயே தன்னுடைய பெயரின் முதல் எழுத்தை தேசியக் கொடியில் கொண்டிருக்கும் நாடு 'ருவாண்டா' தான்! அக்கொடியில் 'R' என்ற எழுத்து நடுவில் இருப்பதைக் காணலாம்.

அதே போல் துப்பாக்கியைத் தன் கொடியின் அடையாளமாக வைத்துக் கொண்டிருக்கும் நாடு 'மொஸாம்பிக்' ஆகும்.

— பாரதி, மணலூர்பேட்டை.

யிருக்கேன்!

மணிவேல் : கவலைப்படாதே நரேன். மாது வரமாட்டான்.

நரேன் : என்ன சொல்றே நீ? மாது வரமாட்டானா?

மணிவேல் : எங்க எல்லாருக்கும் இன்னும் ஒரு டம்ளர் பானகம் கொடுத்திடு. அடுத்ததா என் பிறந்த நாளுக்காக நீ எழுதி வச்சிருக்கிற கவிதையை எடுத்துப்படி; அவ்வளவுதான்!

நரேன் : மணிவேல்! கவிதை விஷயம் உனக்கு எப்படித் தெரியும்?

மணிவேல் : நீ உனக்குக் கவிதைப் போட்டியிலே கிடைச்ச இருநூறு ரூபாயைத்தானே மாதுக்கிட்டே கொடுத்தனுப்பிச்சிருக்கே? உங்கப்பா மளிகைக்கடைக்காக கேட்ட அந்தப் பணத்தைதானே திடீர் விருந்துக்காகச் செலவழிக்கறே?

ஜான் : நாங்க வரவழியிலே மாதுவைப் பார்த்தோம். அவனே எல்லா விஷயத்தையும் சொல்லிட்டான்.

நரேன் : மணிவேல், உங்களுக்கு விருந்து தர வேற வழி தெரியல்லே. உங்க வீடு வசதியானது. அதெல்லாம் எங்க வீட்ல கிடைக்காது. வேண்டியதை செய்து கொடுக்க எங்கம்மாவும் இல்லே. அதனால தான்...

ஜான் : டேய் நரேன், நீ நினைச்சது, நினைக்கறது எல்லாமே தப்பு. உங்க வீடு குடிசைங்கறதுக்காகத்தானே இவ்வளவு நாளா எங்களை கூப்பிடாம இருந்தே? இது சுத்த முட்டாள்தனம்.

மணிவேல் : விருந்தோம்பலுக்கு டைனிங் டேபிள், ஃபிரிட்ஜ், டின்னர் பிளேட், இதெல்லாம் முக்கியமில்லை. உண்மையான அன்புதான் நல்ல விருந்துக்கு ஆணிவேர்.

சுரேஷ் : ஆமாம் நரேன்! நம்மையெல்லாம் ஒண்ணா சேர வைக்கவும், நட்புணர்ச்சியை வளர்த்துக்கவும்தான் இப்படி முக்கியமான தினங்கள்ளே விருந்து வச்சுக்கறோம்.

மணிவேல் : அதனால நாங்க மாதுவை தடுத்து நிறுத்தி இந்த ரூபாயையும் வாங்கிக்கிட்டு வந்துட்டோம். இந்தா உன் கவிதைப் பரிசு இருநூறு ரூபாய்!

நரேன் : நீங்க இப்படி செய்திருக்கக் கூடாது.

மணிவேல் : நீ செய்ததுதான் தவறு. இந்தக் குடிசை வீடு, விசிறி காத்து, குளிர்ந்த பானகம் எல்லாமே எங்களுக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு. மொதல்லே நீ எழுதி வச்சிருக்கிற கவிதையை எடு. படிச்சுப் பார்க்க ஆசையாயிருக்கு!

நரேன் : இந்தா மணிவேல்! உன் பிறந்த நாளுக்கு நானளிக்கும் மிகச் சாதாரணமான பரிசு.

மணிவேல் *(படித்துவிட்டு)* : நரேன்! எவ்வளவு பிரமாதமான கவிதை. என் பிறந்த நாளுக்கு என்னை வாழ்த்தி நீ உள்ளன்போடு எழுதின இந்தக் கவிதையை விடச் சிறந்த பிறந்தநாள் பரிசில்லை. உனக்கு ரொம்ப நன்றி!

ஜான் : நாங்க இனிமே அடிக்கடி இங்கே வருவோம். ஆனா பானகம் கட்டாயம் தரணும்!

நரேன் : அதோ, அப்பா வந்துட்டார். மூலிகைகளைப் பற்றியும் தெரிஞ்சுக்கிட்டுப் போயிடலாம். நான் இன்னும் கொஞ்சம் பானகம் ரெடி பண்ணி வைக்கிறேன்.


"என் சட்டையில் காந்தத்தை வைத்தால் ஒட்டிக்குமே!"
"எப்படி?"
"சட்டையைதான் 'அயர்ன்' பண்ணி போட்டிருக்கேனே!"
— தாரை மா. மகேஸ் ப்ரியன்
"அமெரிக்காவைக் கண்டு பிடித்தது யார்?"
"முதல்ல அதைத் தொலைத்தது யாருன்னு சொல்லுடா!"
— டி.என். பாலகிருஷ்ணன், சென்னை.
ஹா, ஹா, ஹா!
"என்ன உன் தம்பி கத்திச் சண்டை போடுவானா?"
"ஆமாம்! நல்லா கத்தி கத்தி சண்டை போடுவான்!"
— சிறுவயல் செயமணி
"தம்பி அஞ்சு ஏ பஸ்ல போகணும்னு சொன்னியே, ஏன் ஏறலை?"
"அதுல ஒரு 'ஏ' தானே இருந்தது!"
— தேனி முருகேசன்
"இந்த ரூம் சுவர்ல ஏன் படம் வரைஞ்சு கிறுக்கியிருக்கே?"
"இதுதான் டிராயிங் ரூம் ஆச்சே!"
— எஸ். மோகன், குணமங்கலம்.

அழகா? அணியா?

“ஓம்! நமோ! நாராயணா!” ஆகாயத்தில் பவனி வந்த நாரதர் கயிலாய மலையை அடைந்தார்!

“அப்பா! கணேசா! நலம்தானே?” என்றார் நாரதர்.

“நலம்தான்! சிறிய மாம்பழத்தைக் கொண்டு வந்து எனக்கும் என் தம்பி முருகனுக்கும் பெரிய கலகத்தை மூட்டி விட்டவரல்லவா நீர்! இன்று என்ன செய்யப் போகிறீர்!” - கேட்டார் கணேசர்!

“விக்னேசுவரா! விநாயகா! நாரதர் என்றாலே கலகம்தானா? தங்களிடம் எத்தனை பக்தி, எனக்கும் பூலோக மக்களுக்கும்! ஆனாலும் ஒரு கவலை! ம்! ம்! நான் புறப்படுகிறேன்!” கிளம்பினார் நாரதர்.

“ஏதோ கூற வந்ததை மறைப்பது போல் தெரிகிறது! சொல்லி விட்டுச் செல்லும் நாரதரே!” கணேசர் மறித்தார்.

“அதோ! பூலோகத்தைப் பாரும் விநாயகரே! ஆற்றங்கரையிலும் அரச மரத்தடியிலும் ஆனந்தமாக வீற்றிருந்து அனைவருக்கும் ஆசி வழங்கிக் கொண்டிருக்கிறீர்! ஆனால் உங்கள் தம்பி முருகனோ, பெரிய பெரிய கோயில்களில் மேனி எங்கும் தங்க வைர நகைகள் ஜொலிக்க ஆசி தந்து கொண்டிருக்கிறார். உச்சி முதல் பாதம் வரை எத்தனை வகை அணிகலன்கள்? முருகனும் தாங்களும் ஒரே தாயின் பிள்ளைகள்தாம்.

“ஆனால் தங்களுக்குக் கோயில் உண்டா? கோபுரம் உண்டா?, நகைகள் உள்ளதா? இல்லவே இல்லை!

“சின்னஞ்சிறு அருகம்புல்லை மட்டும் பக்தர்கள் தங்களுக்கு அணிவித்துச் செல்கிறார்கள். முருகனுக்கோ அறு படை வீடு! கோயிலை வலம் வரத் தங்க ரதம்! என்னமோ என் மனத்தில் பட்டதைச் சொல்லி விட்டேன்” என்று நாரதர் கிளம்பினார்.

அதுவரையிலும் ஆனந்தமாக விளையாடிக் கொண்டிருந்த கணேசர் கடுஞ் சினமுற்றார்.

சிவனும் சக்தியும் எதிர் கொண்டழைத்தனர்.

“எனக்கு மட்டும் ஏனிந்த நிலை! ஒரு

குறளைக் கண்டுபிடியுங்கள்!

ஊக்கம் மிகுந்த
முயற்சியால் ஊழைக்கூட
வெல்லலாம்!

ஊக்கத் தோடு முயன்றி டின்
ஊழைக் கூட வெல்ல லாம்
யார்க்கும் தெரிந்த உண்மையை
நானும் சொல்ல வேண்டுமோ!

ஒரே ஒரு சான்றினை
உங்க ளுக்கும் காட்டுவேன்...
உள்ளம் கொண்டு கொஞ்சம் நீர்
ஊரைச் சுற்றிப் பாருங்கள்...

தாய்க்கு நிகர் தண்ணீரின்
தன்மை என்ன சொல்லுவீர்?
பள்ளம் நோக்கிப் பாய்ந்திடும்
பண்பு தானே நீ ருக்கும்?

பொட்டுத் தங்கம் எனக்கில்லை. ஒரு நகையும் எனக்கில்லை! தம்பி முருகனுக்கு மட்டும் எத்தனையோ வித நகைகள்! வைர வைடூரிய அணிகலன்கள், என்ன நியாயம்?" சீறினார் விநாயகர்.

பகல் பொழுது மறைந்தது. பூலோகத்தில் பூஜை முடிந்தது. முருகன் கோயில் கதவுகளை இழுத்து மூடி, பூட்டிச் சென்றார்கள்.



முருகப் பெருமான் ஓடோடி வந்தார். சிவனும் சக்தியும் வரவேற்றார்கள். "தந்தையே! இரவு வந்ததும் என்னைப் பூட்டிச் சிறை வைக்கிறார்கள் பூலோக வாசிகள்! அவர்களாகவே மனம் உவந்து நகைகளால் என்னை அலங்கரிக்கிறார்கள். ஆனாலும் திருடு போய் விடக் கூடாதே என்று பயந்து தினம் தினம் என்னை அடைத்து வைக்கிறார்கள்! எனக்கெதற்கு இந்த நகை? அதனாலேயே தினமும் சிறை! அண்ணன் கணேசனைப் போல் திறந்த வெளியில் ஆனந்தமாக இரவின் சுகத்தை அனுபவிக்க வழி இல்லை! ஆயுள் கைதி போல இருட்டியதும் கதவை மூடிப் பூட்டி வைக்கிறார்கள். மீண்டும் பழனியாண்டியாகச் செல்கிறேன்!" என்று கிளம்பினார் முருகன்.

விநாயகரோ, "தந்தையே! நகைகள் சுவை அல்ல! சுமை எனப் புரிந்து கொண்டேன். வேண்டவே வேண்டாம் நகைகள்!" என்று கூறிவிட்டு மீண்டும் விளையாடக் கிளம்பினார்.

— நெல்லை ஆ. கணபதி

இறக்கம் நோக்கிப் பாய்ந்திடும்
இயல்பு கொண்ட நீரினை
ஏறி மேலே பாய்ந்திட
இன்று செய்ய வில்லையா?

மேலே நோக்கி எரிவதே
இயல்பாய்க் கொண்ட ஜோதியை
கீழே நோக்கி எரிந்திட
இன்று செய்ய வில்லையா?

இதே போல இயற்கை யின்
என் னென்னவோ விதிகளை,
இடை விடாத முயற்சி யால்
இன்று மாற்றி வைத்துள் ளோம்!

ஊக்கத் தோடு முயன்றிடின்,
ஊழைக் கூட வெல்ல வாம்!
ஏனோ இன்னும் தயக்க மே
இன்றே முயற்சி செய்கு வோம்!

— ரா. பொன்ராசன்

ஊழையும் உப்பக்கம் காண்பர் —
உலைவின்றித்
தாழா அது உழற்றுபவர்!




எறும்புகளுக்கு வியர்க்குமே!

மூச்சு வாங்க...

இரவு ஒன்பது மணிக்கு மேலாகி விட்டது. படித்துக் கொண்டிருந்த என்னிடம் "நான் மறந்தே போயிட்டேன். நாளை சமையலுக்குக் காயே இல்லை. கடை அடைப்பதற்குள் போய், காய் வாங்கிட்டு வந்துடறியா?" என்று அம்மா கேட்டார். அம்மாவிடம் பணத்தை வாங்கிக் கொண்டு ஓடினேன். கடைக்காரர் ஓடி வந்த என்னைப் புரியாமல் பார்த்தார். "கடையை மூடிடுவீங்களோ என்று மூச்சு வாங்க ஓடி வந்தேன்" என்றேன் நான். "மூச்செல்லாம் நான் விற்பதில்லை" என்றார் சிரித்தபடியே கடைக்காரர்.

ச. சுந்தர்,

துத்திப்பட்டு.




பாவம் எறும்புகள்!

வீட்டில் எறும்புகள் அதிகமாக இருந்தன. அவற்றின் மீது எறும்பு மருந்தை தூவிக் கொண்டிருந்தார் அம்மா. அப் போது வந்த மாமா "பாவம் எறும்புகளைக் கொல்லாதீர்கள்" என்றார். அம்மா சற்றும் தாமதிக்காமல் எறும்பு மருந்து வைக்கப் பட்டிருந்த வேர்க்குரு பவுடர் டப்பாவைக் காட்டி "நான் எறும்பு மருந்து தெளிக்கவில்லை. வெயில் காலம், எறும்புகளுக்கு வியர்க்குமே, அத னால வேர்க்குரு பவுடர் போடறேன்" என்று பதில் கூறினார். அம்மாவின் நகைச் சுவையை ரசித்துப் பாராட்டினோம்.

கே. சாந்தி,

மன்னார்குடி.



தபால் தலை சேகரிப்பு

விடுமுறையைக் கழிக்க என் மாமா பையன் ஊரிலிருந்து வந்திருந்தான். நானும் அவனும் ஒன்றாக சுற்றினோம். ஒருநாள் அவன் என்னிடம் "உனக்கு என்ன பிடிக்கும்"

கா...கா...

பக்கத்து வீட்டில் ஏதோ விசேஷம். காகத்திற்கு சாதம் வைத்திருந்தார்கள். அந்த வீட்டுச் சிறுமி காகத்தை நோக்கி "கா....கா....கா" என்று கத்திக் கொண்டிருந்தாள். பள்ளிக்கு நேரமாகி விட்டதாக அவள் அம்மா அழைத்தும் கத்தியபடி நின்று கொண்டிருந்தாள். சிறிது நேரத்தில் அவள் அம்மா கோபத்துடன் வந்து "பள்ளிக்கூடம் போகணும் வா" என்று கூறினார். "அம்மா நான் காக்காயைத்தானே கூப்பிட்டேன். நீங்க எதுக்கு வந்தீங்க?" என்றவுடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த எங்களுக்கு


அடிச்சிட்டு எழுது!

வசந்தி வீட்டுப்பாடம் எழுதிக் கொண்டிருந்தாள். சித்தப்பா என்னிடம் "அவள் சரியாக எழுதுகிறாளா?" என்று பார்க்கச் சொன்னார். அவள் நோட்டைப் பார்த்தேன். 'கேணி' என்று எழுதுவதற்கு பதில் 'கெணி' என எழுதியிருந்தாள். நான் அதை அடித்துவிட்டு கேணி என்று எழுதச் சொன்னேன். சிறிது நேரம் கழித்து நோட்டை வாங்கிப் பார்த்த நான், "கெணியை அடித்து எழுதச் சொன்னேன். ஏன் எழுதலை" என்றேன். "அக்கா நீ சொன்ன மாதிரி அந்த எழுத்து மேல பென்சிலால் ஒரு அடி போட்டேன்" என்றான். எனக்கு சிரிப்பு வந்தது. இதை கவனித்துக் கொண்டிருந்த சித்தப்பா, "நீ அழிச்சுட்டு எழுதுன்னு சொல்லியிருந்தால் அவள் சரியாகச் செய்திருப்பாள்" என்றவுடன்தான் எனக்குப் புரிந்தது.



எஸ். சிந்துஜா, தஞ்சாவூர்-4

என்று கேட்டான். நான் "தபால் தலை சேகரிக்கப் பிடிக்கும்" என்று கூறினேன். விடுமுறை முடிந்தது. அவனும் ஊருக்குச் சென்று விட்டான். சில நாட்களில் அவனிடமிருந்து நீளமான கடிதம் வந்தது. அந்தக் கவரில் பத்து பைசா தபால் தலைகளை வரிசையாக இரண்டு ரூபாய்க்கு ஒட்டி யிருந்தான். நான் புரியாமல் பிரித்து கடிதத்தைப் படித்தேன். அதில் 'நீ தபால்தலை சேகரிப்பில் ஆர்வம் உள்ளது என்று கூறியதால் இரண்டு ரூபாய்க்கும் பத்து பைசா தபால் தலைகளை ஒட்டி அனுப்பியிருக்கிறேன். பத்திரப்படுத்தி வைத்துக் கொள். மாதம் ஒருமுறை இதேபோல் அனுப்பி வைக்கிறேன்'




என்று எழுதி இருந்தான். எனக்கு சிரிப்பாகவும் அதே சமயம் எனக்கு உதவுவதற்காக அவன் மேற்கொண்ட முயற்சியை நினைத்து நெகிழ்ச்சியாகவும் இருந்தது.

வெ.அ.கார்த்திகேயன், வென்னோடு.

சிரிப்பு வந்து விட்டது. அவள் அம்மாவுக்கோ கோபம் வந்து விட்டது.

எல். சேகர், ஸ்ரீரங்கம்.



காட்டிலிருந்து வீட்டிற்கு

சொர்க்கம் எது?

ஹக்குயின் என்பவர் புகழ்பெற்ற புத்த மத போதகர். அவரிடம் ஜப்பானிய வீரன் ஒருவன் சந்தேகம் கேட்க வந்தான்.


"ஐயா! சொர்க்கம் என்பது எது? நரகம் என்பது எது? என்ற என் சந்தேகத்தை உம் மால் தீர்க்க முடியுமா?" என்று அதிகாரத் தோரணையில் கேட்டான்.

ஞானி உடனே அவன் கேள்விக்குப் பதில் அளிக்கவில்லை. அவனை ஒருமுறை பார்த்துவிட்டு மௌனமாக இருந்தார்.

அவன் மறுபடியும் ஞானியிடம், "குருவே! யார் யாரிடமோ என் சந்தே கத்தைக் கேட்டு விட்டேன். யாருமே எனக்கு தகுந்த பதிலைக் கூறவில்லை. தாங்கள்தான் கூற வேண்டும்" என்றான்.

இப்போது அந்த வீரனைப் பார்த்து ஞானி, "நீ யாரப்பா" என்றார்.

அவன் நான், "நமது மாண்புமிகு அரசர் சென் யானின் சிறப்புப் பாதுகாவலன்!" என்று பெருமையோடு கூறினான்.



"அட மடையனே! உன்னைப் பார்த் தால் பிச்சைக்காரன் போலல்லவா இருக் கிறது! எந்த ராஜா உன்னை வீரன் என நினைத்து பாதுகாவலனாக வைத்துக் கொண்டான்!" என்று கிண்டலாகக் கேட் டார் ஞானி.

வீரனுக்கு ஆத்திரம் பொங்கியது. கோபத்துடன் உடை வாளை உருவினான்.

புத்த ஞானி சிரித்துக் கொண்டே அவ னிடம், "இப்போது உன் கேள்விக்கு பாதி பதில் கிடைத்து விட்டது. இப்போது நீ நரகத்தின் கதவைத் திறந்து விட்டாய்!" என்று கூறினார்.

வீரன் திடுக்கிட்டு ஸ்தம்பித்தான். உருவிய வாளை உறையில் போட்டுவிட்டு மகானைப் பணிவோடு வணங்கினான்.

ஹக்குயின் சிரித்தபடி சொன்னார், "தம்பி! இப்போது உனக்கு மறுபாதி பதிலும் கிட்டிவிட்டது. இப்போது நீ சொர்க்கத்தின் கதவை திறந்து விட்டாய்! ஆம்! நரகம் என்பது கோபமும் ஆத்திர மும் நிறைந்த நம் மனமே. அதை அடக்கி அன்போடும் பணிவோடும் வாழ்வதே சொர்க்கமாகும்" என்று விளக்கினார்.

வீரனும் மகிழ்வோடு சென்றான்.

— ஜி. அசனுல்லா, அரசினர்
ஆண்கள் மேல் நிலைப் பள்ளி,
வத்தலக்குண்டு.

பூனை!

முன்னொரு காலத்தில் பூனை காட்டு விலங்குகளுடன் வசித்து வந்தது. எந்த ஒரு விலங்கு எல்லா மிருகங்களையும் விட தைரியமாகவும், சக்தியுள்ளதாகவும் இருக் கிறதோ அந்த மிருகத்தின் நண்பனாக வாழ ஆசைப்பட்டது பூனை.

ஒரு நாள் காட்டிற்குள் சிங்கம் ஒன்று வருவதைப் பார்த்தவுடன் எல்லா விலங்கு களும் பயந்து ஓடின. உடனே பூனை சிங்கம்தான் பலசாலி என நினைத்து சிங் கத்தின் நண்பனாக இருக்க ஆசைப்பட்டு அதனுடன் சேர்ந்து கொண்டது.

சில நாட்களுக்குப் பின் மதம் பிடித்த யானை ஒன்று வருவதைப் பார்த்த நரி எல்லா மிருகங்களையும் ஓடும்படியாகச் சொன்னது. இதைக் கேட்ட சிங்கம் பூனை யிடம் "நண்பா உனக்கு உயிர் மேல் ஆசை யிருந்தால் நீ ஓடி விடு" என்று கூறியது. சிங்கத்தை விட யானையே பலசாலி என்று நினைத்த பூனை யானையின் மதம் தணிந்தவுடன் அதனிடம் சென்றது. "நீ ஒரு அன்பான மிருகம்" என்று

வந்த பூனை!

யானையைப் பார்த்து பூனை கூறியது. இதைக் கேட்ட யானை மகிழ்ச்சியுடன் பூனையை நண்பனாக ஏற்றுக் கொண்டது. பூனையும் யானையுடன் சேர்ந்து வாழ்ந்தது.

சில நாள் கழித்து அதே காட்டிற்குள் ஒரு வேடன் வந்தான். வேடன் அம்பு விடுவதைப் பார்த்த யானை பூனையிடம் "நீ உயிர் வாழ வேண்டுமானால் ஓடி விடு" என்றது. இதைக் கேட்ட பூனை, இந்த வேடனே யானையைக் காட்டிலும் பலசாலி என எண்ணி வேடன் பக்கம் வந்து நின்றது. இதைக் கண்டவுடன் வேடன், "இன்று வேட்டையில் எனக்கு எதுவும் கிடைக்கவில்லை. நீயாவது எனக்குக் கிடைத்தாயே" என்று கூறி பூனையை வீட்டிற்கு எடுத்துச் சென்றான்.

வீட்டிற்குச் சென்றவுடன் வேடனிடம் அவன் மனைவி "வேட்டையில் இன்று என்ன கிடைத்தது?" என்று கேட்டாள்.



வேடன் மனைவியிடம் "இதோ பார்" என்று பூனையைக் காட்டினான். பூனையைப் பார்த்தவள், "சின்னப் புலியா இது" என்று பயந்தாள். "புலியில்லை பூனை" என்றான் வேடன். பூனை வீட்டிலிருந்ததால் எலித் தொல்லை இல்லாததைக் கண்ட வேடனின் மனைவி அன்புடன் வளர்த்தாள். இப்படி வந்த பூனை வீட்டு விலங்காகி விட்டது.

— ஜெ. மகேந்திரன்,
ரெய்ச்சூர் - 584 101.



வைக்கோல் உடை

கோபாலன் மரம் வெட்டிப் பிழைத்து வந்தான். அவ்வூரில் உள்ள பெரிய மலையில் ஒரு பூதம் வாழ்ந்து வந்தது. அந்தப் பூதத்திடம் அதிசயமான வைக்கோல் உடை ஒன்று இருந்தது. இந்த வைக்கோல் உடையை உடுத்தினால் பிறர் கண்ணுக்குத் தெரியாமல் மறையலாம். இதனை அறிந்த கோபாலன் அதை அபகரிக்கத் திட்டமிட்டான்.

அவன் ஓர் போலியான உருளையைத் தயார் செய்து மலைக்குச் சென்றான். அந்த பூதத்தின் கண்ணில் படுமாறு நின்று கொண்டு "ஆகா! பிரமாதம்!" என்று கூறினான். அதைக் கண்ட பூதம் அவனிடம் வந்து அவன் கையிலிருந்ததைப் பார்த்து அது என்னவென்று கேட்க கோபாலன், "இது வழியாகப் பார்த்தால் உலகமே தெரிகிறது" என்று கூறினான். பூதம் ஆச்சரியப்பட்டு, "எனக்கு இதைத் தந்தால் நான் உனக்கு வைக்கோல் உடையைத் தருகிறேன்" என்று கூற, கோபாலன் ஒப்புக் கொண்டு வைக்கோல் உடையை வாங்கிக் கொண்டான்.

உருளையின் வழியாகப் பார்த்த பூதம் ஒன்றும் தெரியாமல் போகவே கோப

விடுபட்ட எழுத்துகளைக் கண்டுபிடியுங்கள்! - போட்டி

இரண்டு வார்த்தைகளுக்கும் பொதுவான ஓர் எழுத்து விடுபட்டுள்ளது. அந்த எழுத்தைச் சேர்த்தால் இரண்டு வார்த்தைகள் கிடைக்கும்.

உதாரணம்:

ரா
கா — ம்
ம்

ரா
கா க ம்
ம்

1) து
அ — மி
பி

2) க
ந — றி
று

3) க
வி — து
தை

4) பா
வீ — ம்
ம்

5) கொ
அ — கா
கு

6) மி
கு — வி
கு

7) அ
வி — தை
தை

8) கி
ப — ம்
று

9) சு
கா — ல்
டு

10) மே
ப — ல்
ம்

11) க
சோ — ம்
ம்

12) பு
சா — ம்
ல்

விடுபட்ட எழுத்துக்களைச் சேர்த்து வார்த்தைகளைக் கண்டு பிடித்து எழுதி, முகவரிக் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். மறக்காமல் உங்கள் முகவரியையும் எழுதுங்கள். முடிவு தேதி 30.6.98. அயல் நாட்டு வாசகர்கள் தங்கள் இந்தியத் தொடர்பு முகவரியையும் கண்டிப்பாகத் தர வேண்டும். ஒருவருக்கு மேல் சரியான விடை எழுதினால் பரிசு குலுக்கல் முறையில். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

ஆசிரியர்,
கோகுலம்
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை — 600 098



மடைந்தது. பூதம் கோபாலனைப் பிடிக்கத் திரும்பியது. அதற்குள் வைக்கோல் உடையை அணிந்து கொண்டு மறைந்தான் கோபாலன்.

பின்னர் ஊருக்குள் நுழைந்த கோபாலன் யார் கண்ணுக்கும் தெரியாமல் உணவு விடுதிகளில் உண்பது, துணிக்கடை, நகைக் கடையில் திருடுவது என காலங் கடத்தி வந்தான்.

ஒரு நாள் தன் வைக்கோல் உடையை வீட்டில் வைத்து விட்டு வெளியூர் சென்றான். வைக்கோல் உடையின் மகிமை அறியாத அவனது மனைவி அதை எடுத்து வென்னீர் போட உபயோகித்தாள். பின்னர் வெளியூரிலிருந்து திரும்பிய கோபாலன் வைக்கோல் உடை காணாததைக் கண்டு தன் மனைவியிடம் விசாரித்தான். அவள் தான் வென்னீர் போட உபயோகித்ததைக் கூறினாள். அதனால் கோபமடைந்த கோபாலன் வைக்கோல் எரிந்த சாம்பலைக் கையால் தொட்டான். அவனது கை கண்ணுக்குத் தெரியவில்லை. உடனே கோபாலன் தன் உடல் முழுவதும் அச்சாம்பலைப் பூசிக் கொண்டான்.

பின்னர் உணவு விடுதிக்குச் சென்று பழச்சாறு பாட்டிலை எடுத்து குடிக்கத் தொடங்கினான். பழச்சாறு பட்டு அவனது உதட்டில் இருந்த சாம்பல் கரைந்தது. அவனது உதடு மட்டும் பிறர் கண்ணுக்குத் தெரிய ஆரம்பித்தது. இதைக் கண்ட சிலர் பயந்து வீட்டிற்குள் சென்று ஒளிந்து கொண்டனர். தைரியமான சிலர் அவனை விரட்டினர். அவன் ஓட ஓட வியர்வை பெருகி சாம்பல் கரைந்தது. பின்னர் கோபாலன் களைத்து விழுந்தான். மக்கள் கோபாலனைப் பிடித்து தகுந்த தண்டனை அளித்தனர்.

— ஜெ. பழனி, பன்னிரெண்டாம் வகுப்பு, அரசினர் ஆண்கள் மேல் நிலைப் பள்ளி, கோடம்பாக்கம், சென்னை.


டால்பின் வரையலாம்!

கீழே கொடுத்துள்ள குறிப்புகளின்படி எழுத்தும் எண்ணும் சேரும் இடத்தில் புள்ளி வைத்து விடுங்கள். பிறகு ஒவ்வொரு புள்ளியையும் கோட்டால் இணைத்தால் டால்பின் உருவாகி விடும். எங்கே ஆரம்பியுங்கள் பார்க்கலாம்!

உடல்: P14 → T17 → X19 → Y19 → Y18 → X15 → X14 → V11 → S8 → O6 → N5 → L4 → J4 → K5 → K6 → I7 → F11 → D19 → B21 → A23 → D22 → G22 → I23 → H21 → F19 → I13 → L13

துடுப்பு: P11 → O12 → J14 → P14 → Q13

வாய்: T14 → T15 → Y19



நன்றி: லிட்டில் ஆர்க்

● சக்தி. சரவணன், மோகனூர்.

? டாக்டர், ஊசி போடுவதன் மூலம் உண்டாகும் நுண்ணிய துவாரத்தின் வழியாக நம் உடலுக்குள் கிருமிகள் செல்லுமா?

! செல்லாது, சரவணன். ஊசி போடுவதால் உண்டாகின்ற மிக நுண்ணிய துவாரம் ஊசி போட்ட சில விநாடிகளிலேயே மூடிக் கொள்ளும் என்பதால் அதன் வழியாகக் கிருமிகள் உடம்புக்குள் நுழைய வாய்ப்பில்லை.

● ஐ.எம்.எச். ஹாரூன், வத்தலகுண்டு.

? மூக்கை பலமாகச் சிந்தினாலும் காது செவிடாகும் என்கிறான் என் நண்பன். இது உண்மையா, டாக்டர்?



! உண்மைதான், தம்பி. நம் காதின் நடுப்பகுதியையும், தொண்டையின் மேல் பகுதியையும் 'காது – மூக்குத் தொண்டைக் குழாய்' (Eustachian tube) இணைக்கிற விஷயம் உனக்குத் தெரிந்திருக்குமே! காதில் உள்ள அழுத்தத்தை வெளிக்காற்றின் அழுத்தத்திற்கு சமமாக வைத்திருக்க உதவுவது இந்தக் குழாய்தான். நாம் மூக்கை பலமாகச் சிந்தினால் தொண்டைக்குள் அழுத்தம், இயல்பு அளவுக்கு மேல் அதிகரித்து விடும். அந்த அழுத்தம் மேற்சொன்ன குழாய் வழியாக நடுக்காதுக்குக் கடத்தப்படும். விளைவு, அங்குள்ள செவிப்பறை (Ear Drum) கிழிந்து விடும்.

● காழி. ஆர். சீதாராமன், சீர்காழி.

? கண் பார்வை குறைவதை நாம் எதை வைத்துத் தெரிந்து கொள்ள முடியும்? கான்டாக்ட் லென்ஸ் பொருத்திக் கொள்வது கண்களுக்கு நல்லதா, கெடுதலா?

கண் பார்வை குறைவதை எப்படி அறியலாம்?



! அருகில் உள்ள பொருள்களையோ அல்லது தூரத்தில் உள்ள பொருள்களையோ பார்க்கும்பொழுது பார்வை தெளிவில்லாமல் – மங்கலாகத் தெரிந்தால் அது பார்வைக் குறைவை நமக்கு உணர்த்துகின்ற முதல் அறிகுறி. இதனைத் தொடர்ந்து கண்ணில் உறுத்தல், கண்ணில் நீர் வடிதல், தலைவலி போன்ற தொல்லைகள் தொடர்வது மற்ற அறிகுறிகள். பார்வைக் குறைவை உறுதிசெய்ய கண் மருத்துவரை நாடலாம். அவர் 'ஸ்நெல்லன் அட்டவணை' (Snellen chart) மூலம் கண் பார்வை எவ்வளவு குறைந்துள்ளது, கிட்டப் பார்வையா, தூரப் பார்வையா என்பதையெல்லாம் துல்லியமாகத் தீர்மானித்து விடுவார். பின்பு அதற்குரிய சிகிச்சையைத்


கேட்கட்டுமா டாக்டர்?

டாக்டர் கு. கணேசன்

தொடங்குவார். கண்ணாடி அல்லது காண்டாக்ட் லென்ஸ் அணிந்து கொள்ளும்படி பரிந்துரைப்பார். கண்ணாடி அணிய விருப்பமில்லையென்றால் தாராளமாக 'காண்டாக்ட் லென்சை' அணிந்து கொள்ளலாம்; கெடுதல் இல்லை.

● டெ. ஜோஸ்பின், ஐரேனிபுரம்.

? டாக்டர், குழந்தைகள் தலைகீழாக நின்று விளையாடினால் குடல் ஏறும் என்று பெரியவர்கள் திட்டுகிறார்கள். இது உண்மையா? தாயின் வயிற்றில் குழந்தை தலைகீழாகத்தானே இருக்கிறது. இதனால் அப்போது எந்தக் கெடுதலும் வருவதில்லையே...




இதனை விளக்குங்கள், டாக்டர்!

! தலைகீழாக நின்று விளையாடினால் குடல் ஏறும் என்று கூறுவது தவறு. இதற்கு நல்லதொரு சான்றாக 'தாயின் வயிற்றில் வளரும் குழந்தையை' நீயே ஒப்பிட்டுக் கூறியுள்ளாய். இன்னும் இரு உதாரணங்கள். யோகாசனப் பயிற்சிகளில் 'சிரசாசனம்' இத்தனை வரவேற்பு பெற்றிருக்குமா? சீனா, ரஷ்யா போன்ற நாடுகளில் 'பார் விளையாட்டுகள்' புகழ்பெற்றிருக்க முடியுமா? ஆகையால் தலைகீழாக நிற்பதற்கும் குடல் ஏறிக் கொள்வதற்கும் தொடர்பில்லை. அப்படியென்றால் எப்போது குடல் ஏறிக் கொள்ளும் என்பதையும் நீ தெரிந்து கொள்ள விரும்புகிறாயல்லவா? அதையும் சொல்லி என் பதிலை நிறைவு செய்கிறேன். குடலில் அதிக அளவில் புண் அல்லது வீக்கம் ஏற்பட்டிருந்தால், காச நோய் அல்லது புற்றுநோய்க் கட்டிகள் பாதித்திருந்தால் குடல் ஏற்றம் ஏற்பட வழி பிறக்கலாம்.

● த. பரதன், மன்னார்குடி.

? 'அப்லாஸ்டிக் அனீமியா' என்பது உயிர்க்கொல்லி நோயா? இதனைக்



குணப்படுத்த நிறைய செலவாகுமா, டாக்டர்?

! 'அப்லாஸ்டிக் அனீமியா' (Aplastic Anaemia) என்பது ரத்த சோகையில் ஒரு வகை. ஏறக்குறைய இதுவும் ஓர் உயிர்க் கொல்லி நோய்தான். ஏனென்றால் இந்த நோய் வந்து விட்டால் நோயாளியின் உடம்பில் ரத்தம் மடமடவென்று குறைந்து போகின்றது. மரணம் சீக்கிரத்தில் வந்து விடுகிறது. இதனைக் குணப்படுத்த ஒரே வழி – ரத்தம் ஏற்றுவதுதான். நோயாளிக்கு ரத்தம் குறையக் குறைய புதிதாக ரத்தம் ஏற்றப்பட வேண்டும். சுமார் 6 மாதத்திலிருந்து ஓராண்டு வரைக்கும் இப்படி ரத்தம் ஏற்றிக் கொண்டேயிருக்க வேண்டும். இதற்கு நிறைய செலவாகும்.

குறுக்கெழுத்துப் புதிர்



இடமிருந்து வலம்

1. பூஜ்ஜியத்திற்கு அடுத்த எண் (3)
5. கல்கத்தாவில் உள்ள விமான நிலையம் (4)
7. உலோகங்களில் ஒன்று. பாத்திரங்களாகப் பயன்படும் (4)
10. சிலந்தி இது பின்னும் (2)
15. பொள்ளாச்சிக்கு அருகில் உள்ள கோடை வாசஸ்தலம் (4)

வலமிருந்து இடம்

2. திருமணங்களில் இதைத் தெளித்து வரவேற்பார்கள் (4)
6. அழகி என்பதை இப்படியும் குறிப்பிடலாம் (2)
9. மாம்பழங்களில் ஒருவகை. சேலத்தில் பிரபலம் (4)
12. விளையாட்டுகளில் ஒன்று. கபடியின் தமிழ் வடிவமோ இது (4)
16. குற்றாலம் இந்த மாவட்டத்தில் உள்ளது (3)

மேலிருந்து கீழ்

1. வ.உ. சிதம்பரனார் பிறந்த ஊர் (8)
13. வீட்டில் வளரும் பிராணி. புலி இதன் குடும்பத்தைச் சேர்ந்தது (2)
14. அசோகர் இதன் ஓரங்களில் மரங்களை நட்டார் (2)

கீழிருந்து மேல்

3. மரத்தின் அடிப்பகுதியை இப்படியும் அழைக்கலாம் (2)
4. இது கிடைத்தாலும் புதன் கிடைக்காது! (2)
8. ஏழு நாட்கள் கொண்டது இது (3).
11. தண்ணீர் பிடிக்க உதவும் (3)
16. 26 வருடங்கள் சிறையில் இருந்த தென் ஆப்பிரிக்கத் தலைவர் (8)

— ம. நாகராஜ்,
ஒன்பதாம் வகுப்பு, அ.மே. நி.பள்ளி,
பெரியதச்சூர் அஞ்சல்,
திண்டிவனம் வட்டம்.

விடை - 64 ஆம் பக்கம்

சிவப்போ சிவப்பு!

கதை : பூமா


படம் : சசி





பக்கத்து நாட்டிற்கு சீன மருத்துவர் வந்திருக்கிறாராம். அவரை அழைத்து வர ஏற்பாடு செய்யுங்கள்.
உத்தரவு அரசே.
மறுநாள் –
அரசே சீன மருத்துவர் நம் நாட்டிற்கு வர மறுத்து விட்டார்.
என்ன அவமானம்! அந்த மருத்துவரை என்ன செய்கிறேன் பார்!
ஆனால் அவர் தங்கள் நோய் தீர ஆலோசனை கூறியுள்ளார்.
விரைவாகச் சொல்.
தாங்கள் பார்க்கும் இடமெல்லாம் சிவப்பாகத் தெரிய வேண்டும் என்றார்.
அப்படிச் செய்தால் குணமாகுமா?
நான்கு நாட்களில் பூரண குணம் கிடைக்குமாம்!
அரண்மனை எங்கும் சிவப்பு வண்ணம் பூசிவிடுங்கள்!


அரண்மனை முழுவதும் சிவப்பு வண்ணத்தில் ஜொலித்தது.
அரசவையில் –
மன்னா நாளை மறுநாள் நடைபெறும் திருவிழாவில் தாங்கள் அவசியம் கலந்து கொள்ள வேண்டும்.
ஆமாம்! நான் வரும் வழியில் உள்ள வீடுகளுக்கு சிவப்பு வண்ணம் பூசும்படி உத்தரவு போடுங்கள்!
அப்படியே ஆகட்டும் அரசே!
நாட்டிற்குள் –
இது என்ன அநியாயம்! திடீரென சிவப்பு வண்ணம் பூசச் சொன்னால் என்ன செய்வது?
சாப்பிடவே வழியில்லை. இதில் சிவப்பு வண்ணம் பூச முடியுமா?
என்ன செய்வது? அரச உத்தரவு ஆச்சே!
கடனை வாங்கியாவது செய்தாக வேண்டும்.


திருவிழா அன்று –
பரவாயில்லை. எல்லா வீடுகளும் சிவப்பாக மாறி விட்டனவே!
சிறிது தூரம் சென்றதும் –
என் ஆணையை மீறி அந்த வீடு சிவப்பு வண்ணம் பூசப்படாமல் உள்ளதே!
என்ன துணிச்சல்?
அந்த வீட்டுக்காரனை அழைத்து வாருங்கள்!
முதியவரை அழைத்து வந்தனர்.
ஐயா நான் வயதானவன். மிகவும் வறுமையில் இருக்கிறேன். என் பேத்தி பூ விற்றுத்தான் சாப்பிடுகிறோம்.
அதனால்?
அதனால் சிவப்பு வண்ணம் பூச என்னால் இயலவில்லை. மன்னியுங்கள்.
அதைப் பற்றிக் கவலையில்லை. உனக்கு தண்டனை நிச்சயம்.


மன்னியுங்கள் அரசே!
என் நோய் குணமாகப் பிறப்பித்த ஆணையை மதிக்காத உனக்கு மன்னிப்பே கிடையாது.
முதியவரை இழுத்துச் செல்லும்போது –
அரசே! இது என்ன அநியாயம். தாங்கள் பார்க்கும் இடம் சிவப்பாகத் தெரிய வேண்டுமானால் சிவப்புக் கண்ணாடி அணிந்து கொண்டால் போதுமே!
ஆமாம். நீ சொல்வது உண்மை தான். இதை அறியாமல் இப்படி மக்களை துன்புறுத்தி விட்டேனே! எனக்குத்தான் இந்த யோசனை தோன்ற வில்லை. அரசவையில் யாருக்குமேவா தோன்றாது! உன் பெயர் என்னம்மா?
மலர்விழி.
உனக்கு இதோ என் அன்புப் பரிசு. மக்களுக்கு ஏற்பட்ட அநாவசிய செலவுத் தொகையையும் திருப்பித் தர உத்தரவிடுகிறேன்.
மன்னன் கண்ணாடி அணிந்தபடி திருவிழாவிற்குச் சென்றான். மக்கள் மகிழ்ந்தனர்.



தூண்டுகோல்!

தமிழாசிரியர் நுழைந்ததும் வகுப்பில் அமைதி திரும்பியது. வருகை பதிவேட்டை எடுத்து முடித்தார்.

"நம் பள்ளியில் பாரதி விழா நடைபெற இருப்பது உங்களுக்குத் தெரியும். பேச்சுப் போட்டியில் பங்கேற்க விரும்புகிறவர்கள் பெயர் கொடுக்கலாம்" என்றவுடன் வழக்கம் போல் இந்துமதி தன் பெயரைக் கொடுத்தாள்.

இந்து பேசுவதில் திறமையானவள். கலந்து கொள்ளும் போட்டிகளில் எல்லாம் முதல் பரிசு வாங்கி விடுவாள்.

"வேற யாரும் பேர் கொடுக்கலையா?" என்றார் ஆசிரியர்.

"உமாவுக்கு திடீரென ஒரு யோசனை வந்தது. 'டீச்சர் கல்யாணி பேரையும் சேர்த்துக்குங்க" என்றாள்.

"உமா எதுக்கு என் பேரைக் கொடுத்தே?" என்று பயத்துடன் கேட்டாள் கல்யாணி.

"போன வருஷமே போட்டில கலந்துக்க ரொம்ப ஆசைப்பட்டே! ஆனால் உன்னோட இந்தத் தயக்கம்தான் கலந்துக்க விடாமல் தடுத்திடுச்சு. அதனாலதான் இன்னிக்கி உன் பேரைச் சொன்னேன்" என்று விளக்கமளித்தாள் உமா.

"கல்யாணி உன் பேரை எழுதிக்கட்டுமா?" என்று டீச்சர் கேட்கவும், வேறு வழியின்றி தன் சம்மதத்தைத் தெரிவித்தாள் கல்யாணி.

இந்துமதிக்கோ சிரிப்பை அடக்க முடியவில்லை. "இங்கேயே ஒரு பாராவை ஒழுங்கா படிக்க மாட்டாள். இவ போய் போட்டியில கலந்துகிறாளாம்!" என்று ஏளனம் செய்தாள்.

உமாதான் கல்யாணியைத் தேற்றினாள்.

பள்ளி முடிந்தது. "உமா எனக்கு பேச ஆசையாயிருந்தாலும் பழக்கமில்லையே" என்று தன் தயக்கத்தை வெளிப்படுத்தினாள் கல்யாணி.

"சாயங்காலம் எங்க வீட்டுக்கு வா. ரெண்டு பேருமா சேர்ந்து எழுதுவோம். எங்க அக்காகிட்ட கொடுத்து சரி பண்ணிட்டு நாளையிலேருந்து பயிற்சி செய்யலாம்" என்றாள் உமா.

பேச்சுப் போட்டிக்கான விஷயங்களை தயார் செய்தனர். இரண்டு நாட்களில் மனப்பாடம் செய்தாள் கல்யாணி.

உமா எப்படி பேச வேண்டும் என்பதைச் சொல்லிக் கொடுத்தாள். இதைப் பார்த்த கல்யாணி "உமா நீயே போட்டில கலந்துக்கோயேன்" என்றாள்.

"எனக்கு பேச்சைக் கேட்கத்தான் பிடிக்கும். அதனால் நிறையப் போட்டிகளைப் போய் பார்த்திருக்கேன். ஆனால் இந்தத் தடவை நீ பரிசு வாங்குறியோ இல்லையோ கண்டிப்பா மேடையில பேசணும்."

மறுநாள் அறிவியல் வகுப்பிற்கு டீச்சர் வராததால் வகுப்பறையில் கல்யாணியை பேசச் சொன்னாள் உமா.

கல்யாணி தட்டுத் தடுமாறி பேசி முடித்தாள்.

"ஏண்டி கல்யாணி முப்பது பேருக்கு முன்னாலேயே உன்னால ஒழுங்கா பேச முடியலையே! ஆயிரம் பேருக்கு முன்னாலேயா பேசப் போறே?" என்று கிண்டலடித்தாள் இந்துமதி.

சக மாணவிகளும் அவளுடன் சேர்ந்து கிண்டல் செய்தனர்.

"உமா, நான் கலந்துக்கப் போறதில்லடி."

"உளறாதே கல்யாணி. இன்னும் நாலு நாள் இருக்கு. பயிற்சி செஞ்சா நிச்சயம் நல்லா பேசுவே!" என்று அவளுக்கு உற்சாகத்தையும், நம்பிக்கையையும் ஊட்டினாள் உமா.

இன்று பாரதி விழா. பேச்சுப் போட்டித் தொடங்கியது. முதலில் மேடை ஏறிப் பேசினாள் இந்துமதி. எல்லோரும் கை தட்டிப் பாராட்டினார்கள். அடுத்தடுத்து நிறைய மாணவிகள் பேசினர். இறுதியாக கல்யாணியின் பெயர் அழைக்கப்பட்டது. உமா, கல்யாணியை மேடை வரை கொண்டு சென்று வாழ்த்துக் கூறி அனுப்பினாள்.

சக மாணவிகள் கல்யாணியைக் கிண்டல் செய்யத் தயாராயினர்.

ஆனால் கல்யாணி பேச ஆரம்பித்ததும் சூழ்நிலையே மாறிப் போனது. உமாவுக்கே ஆச்சரியமாக இருந்தது. கல்யாணி பேசி முடித்ததும் கரகோஷம் விண்ணைப் பிளந்தது.


முடிவுக்காக அனைவரும் காத்திருந்தனர். பேச்சுப் போட்டியின் நடுவர் மூன்றாம் இடத்தை வென்ற மாணவியின் பெயரை அறிவித்தார்.

"முதல் பரிசுக்கு இருவர் போட்டியிடுகின்றனர். ஆனால் ஒருவருக்குத்தான் அந்தப் பரிசை தர முடியும் என்பதால் ஆராய்ந்து பார்த்ததில் கல்யாணியின் பேச்சில் புதுமையான கருத்துகளும் வலுவான கருத்துகளும் இருக்கின்றன. எனவே கல்யாணியே முதல் இடத்தைப் பெறுகிறாள். இரண்டாம் இடம் இந்துமதிக்கு" என்று அறிவித்தார்.

கல்யாணியை இரண்டு நிமிடம் பேச அழைத்தார் நடுவர். முதலில் நன்றி தெரிவித்த கல்யாணி தனக்கு பரிசு கிடைக்கக் காரணமாயிருந்த உமாவைப் பற்றிக் கூறினாள்.

உமாவுக்கோ மகிழ்ச்சியில் தொண்டை அடைத்தது. ஓடிச் சென்று கல்யாணியின் கைகளைப் பிடித்துக் கொண்டாள். இதைக் கண்ட இந்துமதி தன் செயலால் வெட்கித் தலை குனிந்தாள்.

— புவனை கொடிபாலா



மாம்பழம்!

காசு போட்டு வாங்கினேன்
காசா லட்டு மாம்பழம்
தேசம் புகழும் மாம்பழம்
தித்திப் பான மாம்பழம்

கல்லாமை காசா லட்டு
காதர் பாலா மணியாம்
மல்கோவா ருமே னியா
மாம்பழத் தின்வகை களாம்


அன்னிய நாட்டிற் காகவே
அனுப்பு கின்ற மாம்பழம்
தின்னத் தின்ன இனித்திடும்
தினுசு தினுசு மாம்பழம்

முருகன் கோபங் கொண்டதும்
முதிர்ந்த மாங்கனிக் காகவே
உருண்டு திரண்ட மாம்பழம்
உச்சிக் கொம்பு மாம்பழம்

— தமிழன்பன்,
வேட்டைநல்லூர்.

ஆனிக்கு சென்ற வாரம் தேர்வு முடிந்தது. அம்மாவும் அப்பாவும் வேலைக்குச் சென்று விட ஆனியும் கோடை வகுப்புக்குக் கிளம்பி விடுவாள். அப்படியிருந்தும் வகுப்புக்குச் செல்லுவது தவிர மீதி நேரம் அவளுக்கு பொழுது போவது கஷ்டமாகவே இருந்தது!

ஆனியின் நண்பர்கள் விடுமுறையைக் கழிக்க



கிளி பேசுமா?



வெளியிடங்களுக்குச் சென்று விட்டனர்.

இன்று அப்பா வந்தவுடன் அந்த விஷயத்தைச் சொல்லி விட வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள் ஆனி.

மாலையில் பெற்றோர் வீடு திரும்பினர்.

"ஆனி எப்படி பொழுதைக் கழித்தாய்?" என்று கேட்டார் அப்பா.

"இந்த மெல்பர்ன் சிட்டியிலே எல்லோருக்கும் நல்லா பொழுது போகுது. எனக்குத்தான்...."

"என்ன இழுக்கிறே! உன் ஆன்ட்டி வீட்டிற்கு அனுப்பலாம் என்று நினைத்திருந்தேன். ஆனால் நாளை மறுநாள் இந்தியாவிற்கு



சுற்றுப் பயணம் செல்கிறார்களாம். நான் என்ன செய்ய முடியும் சொல், ஆனி?"

"உங்களால் நிச்சயம் என் பொழுது போக வழி செய்ய முடியும் டாடி."

"சொல், முடிந்தவரை செய்கிறேன்."

"எனக்கு இரண்டு கிளிகள் வாங்கிக் கொடுத்தால் அதை வளர்க்கிறதுலே பொழுது நல்லா போயிடும்."

"வேண்டாம் ஆனி. போன வருஷம் வாங்கினது என்னாச்சு? உனக்கு சரியா கவனிக்கத் தெரியலை; எங்களுக்கும் நேரம் கிடைக்கலே. கடைசியிலே நோய் வந்து இறந்தே போயிடுச்சு. அதற்குப் பின் நீ அழுத அழுகையை இன்னும் என்னால மறக்க முடியலை. நீ வேற ஏதாவது கேளு, வாங்கித் தரேன்."

"போன வருடத்தை விட இந்த வருடம் நான் பெரியவளாகி விட்டேனே! என் நண்பர்கள் ரோமியும் ஜானும் எப்படி வளர்க்கணும்னு டிப்ஸ் தந்திருக்காங்க. அதனால் நல்லா கவனிச்சுக்குவேன். டாடி ப்ளீஸ்" என்று கெஞ்சினாள் ஆனி.

"அப்பா சொல்வதைக் கேள் ஆனி. இந்தா கேக்கும் பிஸ்கெட்டும் சாப்பிடு. இன்னும் கொஞ்ச நேரத்திலே நாம் கடைக்குப் போய் டிரஸ் வாங்கிட்டு, ஹோட்டலில் சாப்பிட்டுட்டு வரப் போறோம்" என்றார் அம்மா.

ஆனிக்கு கோபமாக வந்தது. "நான் இவ்வளவு சொல்லியும் வாங்கித் தர மாட்டேங்கறீங்களே!" என்று சொல்லிவிட்டு தன் அறைக்குச் சென்று படுத்துக் கொண்டாள்.

சிறிது நேரத்தில் அப்பா வந்து

எஸ். சுஜாதா

சமாதானப்படுத்தி, கடைக்கு அழைத்துச் சென்றார்.

போகும் வழியில் யாருடனும் பேசாமல் தன் கோபத்தை வெளிப்படுத்தினாள் ஆனி.

அம்மாவும் அப்பாவும் நிறைய பொருட்கள் வாங்கினார்கள். கடைசியாக அந்த மரக்கடைக்குச் சென்றனர். ஆனிக்கு ஒன்றும் புரியவில்லை.

மரக்கடையில் இருந்த கிளிக் கூண்டை வாங்கினார் அப்பா.

அவ்வளவுதான்! ஆனிக்கு ஒரே மகிழ்ச்சி. அப்பாவிற்கும் அம்மாவிற்கும் நன்றி தெரிவித்தாள்.


அந்த மரக் கூண்டு பெரியதாக இருந்தது. நடுவில் கிளி சென்று வர



வட்டமான ஓட்டையும் இருந்தது.

அடுத்து கிளிகள் விற்கும் 'பெட் ஷாப்'பிற்குச் சென்றனர். பிறந்து ஒரு மாதமேயான இரண்டு

* ஆஸ்திரேலியக் கிளிகள் Budgerigar என்று அழைக்கப்படுகின்றன. இவை கிளிக் குடும்பத்தைச் சேர்ந்தவை. பட்ஜீஸ் (Budgies) என்று செல்லமாக அழைக்கப்படுகின்றன.
* காட்டுக் கிளிகளாக இருந்த இவை இன்று வீட்டுக் கிளிகளாக மாறி விட்டன.
* ஆஸ்திரேலியாவில் மட்டுமே வாழ்ந்த கிளிகள் இன்று உலகின் பல்வேறு நாடுகளில் வளர்க்கப்படுகின்றன.
* பெண் கிளி ஒரு முறைக்கு ஐந்து முட்டைகள் வரை இடும். குஞ்சு



கிளிகளை வாங்கிக் கொண்டு வீட்டிற்குத் திரும்பினர்.

கிளியின் உடல் பச்சை, மஞ்சள், நீலம், கறுப்புப் புள்ளிகள் என பார்ப்போரை கவரும் விதத்தில் அழகாக இருந்தது. ஆனி அன்புடனும் அக்கறையுடனும் அவற்றை கவனித்துக் கொண்டாள்.

ஒரு வாரத்தில் கிளிகள் ஆனியைத் தங்கள் தோழியாக ஏற்றுக் கொண்டன.

கிளிக்குத் தேவையான உணவை தினமும் கடைக்குச் சென்று வாங்கி வந்து கொடுத்தாள் ஆனி.

பருப்புகளை தன் அலகால் கொத்தி உடைத்துச் சாப்பிடுவதைக் கண்டு ரசித்தாள்.

கிளிகள் வந்து ஒரு மாதமாகி விட்டது. பெரிதாக வளர்ந்து விட்டன. இப்போதெல்லாம் ஆனிக்கு நேரமே போதவில்லை!

கிளிகள் விளையாடுவதற்கு இரண்டு மூன்று மரக் கம்புகளை வீட்டிற்குள் கட்டி வைத்தாள். கிளிகள் சர்க்கஸில் பார் விளையாடுவது போன்று ஒரு கம்பிலிருந்து மற்றொரு கம்பிற்கு அழகாக சிறகடித்துப் பறந்து விளையாடின.

தினமும் கிளிகளுக்கு பேசும் பயிற்சி அளிக்க ஆரம்பித்தாள் ஆனி. "ஆனி... ஆனி" என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொடுத்தாள். சில நாட்களில் கிளிகள் ஆனியைப் பெயர் சொல்லி அழைத்தன.

சந்தோஷமடைந்த ஆனி 'வெல்கம்' 'உட்காருங்கள்' போன்ற வார்த்தைகளையும் கற்றுக் கொடுத்தாள்.

கிளி பேசுவது எப்படி?

கிளிகள் சத்தத்தை கவனித்து திரும்ப அதே போல் சத்தத்தை எழுப்பும் ஆற்றல் உடையன. இந்தப் பழக்கத்தைத் தங்கள் பெற்றோரிடமிருந்தே கற்றுக் கொள்ளத் தொடங்குகின்றன. பெற்றோர் எழுப்பும் சிறிய சத்தத்தையும் கேட்டு திரும்பத் திரும்பச் செய்கின்றன.

கிளிகள் பிறந்த சில காலத்திலேயே எடுத்து வந்து வளர்க்கும் போது நாம் கற்றுக் கொடுக்கும் வார்த்தைகளை பலமுறை கற்ற பின் திருப்பிச் சொல்கின்றன. மீண்டும் மீண்டும் பயிற்சியளிக்காமல் தனியாகக் கூண்டில் வளர்த்தால் கிளி பேசாது.


பதினெட்டு நாட்களில் வெளி உலகத்தை எட்டிப் பார்க்கும். வேகமாக வளரும்.

* பருப்பு, கடலை, கேரட், பிஸ்கட் போன்ற உணவுகளை விரும்பி உண்ணும். சுத்தமான உணவு, தண்ணீரையே பருகும்.

* கூண்டு இருட்டாக இருக்க வேண்டும். தினமும் சுத்தப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் நோய் தாக்கி விடும். சூரிய வெளிச்சத்தை விரும்பாது. வாரத்திற்கொருமுறை இறக்கையை படபடவென அடித்து தண்ணீரில் நீராடும். மரக்கிளைகள், கட்டைகள், நம் கை விரல்களில் உட்காரப் பிடிக்கும்.

* கூண்டு 50 செ.மீ. நீளமும் 30 செ.மீ. அகலமும், 30 செ.மீ. உயரத்துடனும் இருக்க வேண்டும். அப்போதுதான் இறக்கையை மடித்து விரித்து மகிழ்ச்சியாக வசிக்கும். கூண்டின் அடியில் மணல் நிரப்பப்பட்டிருக்க வேண்டும்.

கிளியின் இரண்டு கால்களிலும் நான்கு விரல்கள் உண்டு. இரண்டு விரல்கள் முன்புறமாகவும், இரண்டு விரல்கள் பின்புறமாகவும் அமைந்திருக்கும். கிளிகள் பச்சை, மஞ்சள், நீலம், வெள்ளை, கறுப்பு, சாம்பல் நிறங்களில் காணப்படுகின்றன.



அன்று மாலை அலுவலகத்திலிருந்து வந்த ஆனியின் அம்மா, அப்பா விடம் ''வெல்கம், உட்காருங்கள், ஆனி வருவாள்'' என்று கொஞ்சி கொஞ்சி பேசின கிளிகள். அவர்களும் பெருமகிழ்ச்சியடைந்தார்கள். ஆனியைப் பாராட்டினர்.

"அம்மா, ரெண்டு வரி பாட்டு பாடும் கேளுங்க" என்றாள் ஆனி.

ஆனி பாடலின் முதல் வார்த்தையைச் சொல்லவும் கிளிகளும் பாட ஆரம்பித் தன.

"யானை அண்ணா பாருங்க,
இந்தக் கிளிப் பேச்சு கேளுங்க"
என்று பாடி முடித்தன.

நாட்கள் நகர்ந்தன. ஒருநாள் பெண் கிளி கூண்டுக்குள் இருந்த சிறிய பெட்டியில் ஐந்து முட்டை களை இட்டது. பதினெட்டு நாட்களில் முட்டையிலிருந்து குஞ்சுகள் வெளிவந்தன. குஞ்சுகள் முடிகளற்று பார்க் கவே ஒருமாதிரியாக இருந் தன. ஆனிக்கு விடுமுறை முடிந்து பள்ளியும் திறந் தது.

எல்லா கிளிகளை யும் கவனித்துக் கொள்ள இயலாது என்பதை விளக்கிக் கூறிய அப்பா பெரிய கிளிகளை மட்டும் வைத்துக் கொண்டு, குஞ்சுகளை நண்பர் களிடம் கொடுத்து விடும்படிக் கூறினார். ஆனி மனமில்லாமல் ஒப்புக் கொண் டாள்.

கோகுலம் க்விஸ்


1. பட்ஜீஸ் கிளிகள் எந்த நாட்டுக் காடுகளில் வாழ்ந்தன?

2. இவற்றின் கால்களில் எத்தனை விரல்கள் உள்ளன?


3. பெண் கிளி எத்தனை முட் டைகள் இடும்?


4. இவைகளின் உணவு என்ன?

5. முட்டையிலிருந்து குஞ்சு வெளிவர எத்தனை நாட்களாகும்?



கோடை விடுமுறைப் போட்டி - 2





தனித்திருப்பது எது?

இங்கே மொத்தம் பதினாறு படங்கள் இருக்கின்றன. இவைகளை மும்மூன்றாக வகைப்படுத்துங்கள். ஒன்று மட்டும் எதிலும் சேராமல் தனித்திருக்கும். வகைப்படுத்திய பொருள்களையும் தனித்திருக்கும் பொருளையும் ஒரு தபால் கார்டில் எழுதி, முகவரிக் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். மறக்காமல் உங்கள் முகவரியையும் எழுதுங்கள். முடிவு தேதி 30.6.98. அயல் நாட்டு வாசகர்கள் தங்கள் இந்திய தொடர்பு முகவரியை அவசியம் தர வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் சரியான விடையை அளித்திருந்தால் பரிசு குலுக்கல் முறையிலேயே முடிவு செய்யப்படும். ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

ஆசிரியர்
கோகுலம்
47, ஜவஹர்லால் நேரு
சாலை, ஈக்காட்டுத்தாங்கல்,
சென்னை - 600 097.





பறக்கும் ரயில்!

ராஜா, கீதா, சுரேந்தர் மூவரும் வேகமாக நடந்தார்கள். சற்று தூரம் சென்றதும் ரயில் பாலம் தென்பட்டது. உடனே மூவருக்கும் சந்தோஷம் தொற்றிக் கொண்டது. ஆமாம்! அவர்கள் மூவரும் பறக்கும் ரயிலைப் பார்க்கவும், பயணம் செய்யவும்தான் நடந்து கொண்டிருந்தார்கள்.

திருமயிலை ரயில் நிலையத்தை அடைந்தனர். டிக்கெட் வாங்கிக் கொண்டு படிகளில் தாவி ஏறி பிளாட்பாரத்திற்குச் சென்றனர்.

அங்கு ரயில் இல்லை. பக்கத்தில் இருந்த ரயில் பணியாளர்களிடம் விசாரித்தனர். "ஐந்து நிமிடத்தில் ரயில் வந்து விடும்" என்று கூறியதைக் கேட்டதும் உட்கார்ந்து கொண்டு இன்னும் கட்டட வேலை நடைபெற்றுக் கொண்டிருப்பதைப் பார்த்தனர்.

இவர்களின் பொறுமையைச் சோதிக்காமல் ரயில் வந்து நின்றது. இடம் பிடிப்பதற்காக வேகமாக ஏறினான் ராஜா. உள்ளே பார்த்தால் எல்லா இருக்கைகளும் காலியாகவே இருந்தன.

"ஏன் இவ்வளவு காலியா இருக்கு?" என்று சுரேந்தர் கேட்டான்.

"இது புதுசா விடப்பட்ட ரயில். அதோட இன்னிக்கு விடுமுறை நாள் வேறு. அதான் ரயில் நிலையத்திலும், ரயிலிலும் கூட்டமேயில்லை."

"எனக்கு பயமாயிருக்கு ராஜா. அடுத்த கம்பார்ட்டுமெண்ட்டுக்குப் போயிடலாமா?"

"ரயில் கிளம்புகிற நேரமாச்சு. உட்காரு" என்றான் ராஜா.

சிறிது நேரத்தில் ரயில் கிளம்பியது. தடதடவென்று சத்தம் கேட்க கீதாவுக்கும் சுரேந்தருக்கும் லேசாக பயம். சில நிமிடங்களில் சத்தம் குறைய ஜன்னலருகில் உட்கார்ந்தனர்.

ரயில் பாலம் மிக உயரத்தில் அமைந்திருந்தது. ஆற்றில் இருக்கும் ரயில் பாலத்தில் சென்றால் ஆறு மட்டுமே தெரியும். ஆனால் இதில் இருபுறமும் வீடுகள், சாலைகள் எல்லாம் அழகாகத் தெரிந்தன.

"கீதா அங்கே பார் அடுக்கு மாடி வீட்டுக்குப் பக்கத்திலே போகுது."

அதற்குள் கலங்கரை விளக்கம் ரயில் நிலையம் வந்தது.

"ஹையா! அங்கே பாருங்க. கடற்கரையும், கடலும் நல்லா தெரியுது."

"ஆமாம். இவ்வளவு தூரத்திலே இருந்து பார்த்தாலும் எவ்வளவு ரம்யமாக இருக்கு!" என்று பேசிக் கொண்டிருக்கும் போது ஒரு பயணி ஓடி வந்து ஏறினார்.

ரயில் கிளம்பியது, கடற்கரை மறைந்து மரம், வீடுகள், சாலை, பேருந்து, மனிதர்கள் என வரிசையாகத் தென்பட்டன.

"நீங்க எங்கே போறீங்க?" என்று பேச்சுக் கொடுத்தார் அந்தப் பயணி.

தங்களை அறிமுகப்படுத்திக் கொண்ட மூவரும், தாங்கள் பறக்கும் ரயிலில் பயணித்துப் பார்க்க வந்ததைக் கூறினர்.

"பறக்கும் ரயில் என்று ஏன் சொல்கிறோம்?" என்று கேட்டான் எதிரில்





அமர்ந்திருந்தவரைப் பார்த்து சுரேந்தர்.

"பறக்கும் ரயில் என்றவுடன் பறக்கும்னு நினைச்சிட்டீங்களா! உயரத்திலே போறதாலேயும், வேகமா போறதாலேயும் அப்படி பெயர் வைத்திருக்கலாம்."

"இதை 'எம்.ஆர்.டி.எஸ்' என்று குறிப்பிடுகிறார்களே!"

"அதிகமானவர்களை ஏற்றி விரைந்து கடந்து செல்லும் திட்டம் (Mass Rapid Transit System) என்பதைத்தான் அப்படி குறிப்பிடுகிறார்கள். இந்தியாவிலேயே முதல் முதலாக விடப்பட்ட பறக்கும் ரயில் இதுதான்!"

பேசிக் கொண்டிருக்கும் போது திருவல்லிக்கேணி நிலையம் வந்தது. மறுபடியும் கடற்கரையை ஆவலோடு பார்த்தனர்.

"இதுல ஏன் கூட்டமில்லை?" என்றாள் கிதா.

"ஒரு நாளைக்கு பத்தாயிரம் பயணிகள் வரை இப்போது பயன்படுத்தறாங்க. ஆனால் ஒரு லட்சம் பயணிகள் பயன்படுத்துவது போல் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. சிலர் ஸ்டேஷன் வசதியான இடத்திலே இல்லைன்னு காரணம் சொல்றாங்க. பஸ் சீசன் டிக்கெட்டை விட இது கொஞ்சம் அதிகம்தான். ஆனால் மைலாப்பூரிலிருந்து பாரிஸ் செல்ல பஸ்சில் ஒரு மணி நேரமாகிறது. இந்த ரயிலிலோ இருபது நிமிடத்தில் சென்று விடலாம். எனக்கு இது ரொம்ப வசதியாயிருக்கு" என்று அவர் நிறுத்தினார்.

சேப்பாக்கம் ஸ்டேடியத்தை ஒட்டி ரயில் சென்று கொண்டிருந்தது. இருக்கைகளும், மைதானத்தில் பச்சைப் புல் வெளியும் தெரிந்தன.

"அங்கிள் எவ்வளவு நேரத்திற்கு ஒருமுறை ரயில் கிளம்புது?"

"பதினைந்து, இருபது நிமிடத்திற்கு ஒரு ரயில் விடப்படுகிறது. இதே போன்று தரமணி - வேளச்சேரி வரையிலும் ரயில் விரிவுபடுத்தப்பட உள்ளது."

"அப்போ இன்னும் அதிகம் பேர் பயன்படுத்துவாங்க."

பேச்சு சுவாரசியமாக நீள, சிந்தாதிரிப்பேட்டை, பூங்கா, கோட்டை போன்ற நிலையங்களைத் தாண்டி கடற்கரை நிலையத்தில் ரயில் நின்றது.

"நீங்க இறங்கலையா?" என்று கேட்டார் அந்த மாமா.

"மாமா ரிட்டர்ன் டிக்கெட் எடுத்திருக்கோம். மறுபடியும் ஒரு ஜாலி டிரிப் அடிச்சிட்டு சேப்பாக்கத்தில் இறங்கி பீச்சுக்குப் போறோம்" என்றான் ராஜா.

அவர் விடைபெற்றுச் சென்றார். மீண்டும் ரயில் கிளம்பியது.

சேப்பாக்கத்தில் இறங்கினர். ரயில் நிலையம் பிரம்மாண்டமாக இருந்தது. இயங்கும் படிகட்டுகள் (Escalator) அமைக்கப்பட்டிருந்தன. இரண்டு முறை அதில் ஏறி, இறங்கி பார்த்து விட்டு கடற்கரையை நோக்கி நடந்தனர்.

அட்டையில் : **கே.எஸ். ராஜா, மோனிஷா**

வண்ணப்படம் : **ஸ்ரீஹரி**



முகமூடி செய்வோமா?

என்னென்ன தேவை?

1. தடிமனான அட்டை, 2. பென்சில், 3. கலர் பாக்ஸ், 4. கத்தரிக் கோல், 5. நூல்

எப்படிச் செய்வது?

1. படத்தில் இருப்பதைப் போன்ற உருவத்தை தடிமனான அட்டையில் வரையுங்கள். பின் அந்த உருவத்தை வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள்.

2. கண், மூக்குப் பகுதிகளை துவாரமிடுங்கள்.

3. முகமூடிக்கு வண்ணம் தீட்டுங்கள். பின் காதிற்கருகில் உள்ள துளை வழியே நூலைக் கட்டி விடுங்கள்.

முகமூடி தயார். இதே போன்று பல வித முகங்களை வரைந்து மாட்டிக் கொண்டு நண்பர்களுடன் விளையாடுங்கள்!

கோகுலம்




NAME..

STANDARD..

SUBJECT..

SCHOOL..

கோகுலம்




NAME..

STANDARD..

SUBJECT..

SCHOOL..

கோகுலம்




NAME..

STANDARD..

SUBJECT..

SCHOOL..

கோகுலம்




NAME..

STANDARD..

SUBJECT..

SCHOOL..

கோகுலம்



NAME..

STANDARD..


SUBJECT..

SCHOOL..

UNIT TRUST OF INDIA

CHILDREN'S COLLEGE
AND CAREER FUND
Because you owe it to your child.

கோகுலம்



NAME..

STANDARD..

SUBJECT..

SCHOOL..

UNIT TRUST OF INDIA

CHILDREN'S COLLEGE
AND CAREER FUND
Because you owe it to your child.

கோகுலம்



NAME..

STANDARD..

SUBJECT..

SCHOOL..

UNIT TRUST OF INDIA

CHILDREN'S COLLEGE
AND CAREER FUND
Because you owe it to your child.

கோகுலம்



NAME..

STANDARD..


SUBJECT..

SCHOOL..

UNIT TRUST OF INDIA

CHILDREN'S COLLEGE
AND CAREER FUND
Because you owe it to your child.

பூமிக்கு மட்டும் ஒரே சந்திரனா?




ஓடிச் சென்றால் ஆறு மணி நேரத்தில் சந்திரனின் ஒருபுறத்திலிருந்து மறுபுறத்துக்குச் சென்று விட முடியும். என்ன சந்தேகத்துடன் பார்க்கிறீர்கள்? உண்மைதான். ஆனால் நம் சந்திரனில் அல்ல. செவ்வாய் கிரகத்தில் உள்ள டெமிஸ் என்ற சந்திரனைக் கடந்து விட முடியும். எட்டு மைல் தொலைவேயுடையது. இதுதான் மிகவும் சிறிய சந்திரன்.




வியாழன் கிரகத்தின் கனிமேட் சந்திரன்தான் சூரியக் குடும்பத்திலேயே மிகப் பெரிய சந்திரன். 3,275 மைல் குறுக்களவு உடையது. புதன் கோளை விடப் பெரியது.

நம் பூமிக்கு ஒரே ஒரு சந்திரன் இருப்பது நமக்குத் தெரியும். ஆனால் சூரியக் குடும்பத்தில் உள்ள மற்ற கிரகங்களுக்கு ஒன்றிற்கு மேற்பட்ட சந்திரன்கள் உள்ளன.




செவ்வாய் மற்றும் நெப்டியூன் கிரகங்களுக்கு தலா இரண்டு சந்திரன்கள் உள்ளன. யுரேனஸுக்கு ஐந்து சந்திரன்களும், சனி கிரகத்திற்கு பத்து சந்திரன்களும் உண்டு.

வியாழன் மிகப் பெரிய கோள். இது பதினான்கு சந்திரன்களைக் கொண்டுள்ளது. 1975ஆம் ஆண்டுதான் கடைசி சந்திரன் கண்டுபிடிக்கப்பட்டது.



புதன், வெள்ளி கிரகங்களுக்கு சந்திரன் கிடையாது. சூரியனிலிருந்து மிகத் தொலைவில் உள்ள புளூட்டோவிற்கு ஒரு சந்திரன் இருக்கக் கூடும் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர். எனவே நமக்குத் தெரிந்தவரை ஒரே ஒரு சந்திரனைப் பெற்றுள்ளது பூமியே!



10. ரயிலில்!

சித்ராவுக்குப் பேச நா எழவில்லை. தேர்வை நன்றாகத்தான் எழுதியிருக்கிறோம் என்று அவள் எண்ணியிருந்தாள். ஆனால் அவள் படிப்பது போதாது என்பதை ரிப்போர்ட் காட்டுகிறது!

சித்ரா உருகிப் போய் விசும்பினாள்.

"சித்ரா கண்ணு, உனக்கு என்ன பண்ணணும்னு எனக்குத் தெரியும். நான் ஒரு முடிவுக்கு வந்திருக்கேன்."

சித்ரா தலையைத் திருப்பி பசுபதியைப் பார்த்தாள். அம்மா எதிர் சோபாவில் உட்கார்ந்தபடி கவனித்தார்.

"நீ பெரிய ஆளாப் போயிட்டே. உன்னைச் சுத்தி புகழறவங்க, பாராட்டறவங்க கூட்டம் அதிகமாயிடுச்சி. யாராவது தேடி வந்துக்கிட்டே இருக்காங்க. வீட்டில் இருக்கும்போது உன்னால் அரைமணி நேரம் கூடப் பொருந்தி படிக்க முடிவதில்லை. அதனால்...."

சித்ரா ஆவலாகப் பார்த்தாள் தந்தையின் முகத்தை.

"அதனால், உன்னை ஹாஸ்டலில் விடுவது என்று முடிவு பண்ணிவிட்டேன்."

சித்ராவுக்கு பகீரென்றது. மங்கை வேறொரு கோணத்தில் தவித்தார்.

"பணம் ஏராளமா செலவாகுமே? நம்மால் முடியுமா?"

"ஒன்பதாவதும் பத்தாவதும்தான் சித்ரா



ஒன்பதாம்

வின் வருங்காலத்தை முடிவு பண்ணும் அஸ்திவாரம். அதனால் என்ன செலவானாலும் பரவாயில்லை என்ற முடிவுக்கு வந்து விட்டேன். அலுவலகத்தில் கடன் கேட்டிருக்கேன். கண்டிப்பாகக் கிடைச்சிடும். ஹாஸ்டல்ல இருந்தா இந்த மாதிரி வீட்டுக்கு வரவங்க தொந்தரவு இருக்காது. படிப்பதைத் தவிர வேறு சிந்தனையே இருக்காது. சித்ராவை ஹாஸ்டலில் சேர்த்திட்டா, நாம் இந்த வீட்டைக் காலி பண்ணிட்டு, எங்க அலுவலகத்துக்குப் பக்கத்திலேயே தேனாம்பேட்டையில் ஒரு சின்ன வீட்டுக்குக் குடி போய் விடலாம். வீட்டுக்காரரும் உடனே வீட்டை காலி பண்ணச்

கண்களில் நீர் முட்டியது.

"அப்பா, நன்றாகத்தான் படிப்பதாக நான் நம்பிக் கொண்டிருக்கிறேன். இன்னும் சொல்லப் போனால் இந்த முறை நன்கு முயற்சி செய்து படித்தேன். என்னவோ இப்படி.... எனக்கே என்ன காரணம் என்பது புரியவில்லை."

பசுபதி அவளைத் தன் அருகே உட்கார வைத்துக் கொண்டு, தலையை வருடினார்.

சொல்லி ஆபீசுக்கு போன் பண்ண ஆரம்பிச்சிட்டாரே? நாம் போகப் போற வீடு ஏழாவது வீடு" என்றார் பசுபதி.

"ஹாஸ்டல் வேண்டாம்பா," என்று சித்ரா அழுதாள்.

"நான் உன் நல்லதுக்குத்தாம்மா சொல்றேன். உன்னால் எந்தக் கவலையும் இல்லாமல் முழு நேரத்தையும் படிப்பில் செலவிட முடியும். விடுமுறைகளில், பண்டிகைகளில் வீட்டுக்கு அழைச்சிட்டு வருவோம். அங்கேயும் உன்ன மாதிரி மாணவிகள் தான் இருப்பாங்கம்மா" என்று தேற்றினார் பசுபதி.

மங்கையின் கண்களிலும் கண்ணீர். ஆனாலும் பசுபதியின் முடிவு நல்லதுக்கே என்று அவரும் எண்ணினார். அதனால் சித்ராவை ஹாஸ்டல் வாசத்திற்கு தயார் பண்ணினார்.

மூன்று நாட்களில் பசுபதிக்கு முன் பணம் கிடைத்துவிட்டது. ஒரு நல்ல நாள் பார்த்து சித்ராவை அவள் பள்ளி விடுதியில் சேர்த்தனர்.

ஹாஸ்டலில் சித்ராவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. அழுகை அழுகையாக

வீடு!

வந்தது. எப்போது வீட்டுக்குப் போவோம் என்றிருந்தது. உண்மையில் முதல் இரண்டு நாள் கண்ணீர் விட்டு அழவே செய்தாள்! அறைத் தோழிகளில் ஒருத்தி "ஏன் சித்ரா அழுகிறாய்! நாங்கள் எல்லாம் உன்னுடன் இல்லையா?" என்று தேற்றினாள்.

"நீ வந்த வேளை, உதவி வார்டன் மட்டும்தான் இருந்தார். வார்டன் லீவில் போயிருக்கிறார். அவர் ரொம்பவும் நல்லவர். அன்பாகப் பழகுவார். தேவையான உதவி செய்வார். நான் போன ஆண்டிலிருந்தே இங்கேதான் இருக்கிறேன். அவரை எனக்கு ரொம்பவும் பிடிக்கும். சொந்த அம்மா மாதிரியே நடத்துவார்!" என்றாள் பத்மஜா!

அம்மா என்றும், அக்கா என்றும் வீட்டுக்கு வெளியேயும் பழக வாய்ப்பு இருப்பதை, வெளியுலகத்துக்கு வந்த சித்ரா உணர ஆரம்பித்தாள். இருந்தாலும், பெற்றோர் நினைவும் அவளுக்கு வந்து கொண்டே இருந்தது.

கோடை விழா சமயத்தில் பள்ளி வந்த அப்பா, கோமதி மேடத்திடம் சொன்னதை நினைத்துப் பார்த்தாள். தான் நன்கு படித்து என்சினீயராகவோ, டாக்டராகவோ வர வேண்டும் என்று அவர் ஆசைப்பட்டதையும் நினைத்துக் கொண்டாள்.


'நான் மட்டும் ஏன் இப்படி இருக்கிறேன்? அப்பா சொன்னபடி நடக்காதவளா?' என்று சித்ரா மனத்துக்குள் நினைத்துக் கொண்டாள். படிப்பைவிட ஓவியம் போடுவதிலேயே மனதைச் செலுத்துகிறோமா? மார்க் குறைவதற்கு என்ன காரணம்? ஒரு ஓவியரால், என்ஜினீயர் அல்லது மருத்துவர் அடையும் நிலையை அடைய முடியாதா? இந்தக் கேள்விகளுக்கு யாரிடம் கேட்டால் பதில் சொல்வார்கள்?' என்றும் நினைத்துக் கொண்டாள்.

அன்று மாலை பசுபதியும் மங்கையும் வந்து சென்றது மனதுக்குத் தெம்பாக இருந்தது. முறுக்கும், பிஸ்கெட்களும், பழங்களும் கொடுத்துவிட்டுக் கொஞ்ச நேரம் பேசிவிட்டுச் சென்றார்கள். வீடு பார்த்து முன் பணம் தந்து விட்டார்களாம். ஞாயிற்றுக் கிழமை காலி பண்ணப் போவதாகக் கூறினார் பசுபதி. புறப்படும் போது, "தைரியமாக இரு! முழு நேரத்தையும் படிப்பிலேயே செலுத்து" என்றார். 'இனி அப்படித்தான் இருக்கப் போகிறேன்' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள் சித்ரா.

மாலையில் வாட்டசாட்டமாக ஒரு பெண்மணி, சித்ராவின் அறைக்கு வந்தார். அவர்தான் ஹாஸ்டல் வார்டன் வனிதா மேடம்.

"வாங்க மேடம். இவள் சித்ரா! நீங்கள்

வெ. நல்லதம்பி



"நம்ம பையனுக்கு கல்யாணம் பண்ணணும். ஒரு நல்ல மாட்டுப் பெண்ணைப் பாருங்க!"

— சக்தி சரவணன்

ஊருக்குப் போன சமயம் நம் ஹாஸ்டலில் சேர்ந்திருக்கிறாள்!"

"வணக்கம் மேடம்" என்று கைகூப்பினாள் சித்ரா.

"அப்படியா? என்ன சித்ரா, ஹாஸ்டல் பிடித்திருக்கிறதா?"

சித்ரா தயங்கினாள்.

"ஹாஸ்டலை உனக்குப் பிடிக்கா விட்டாலும், உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது! ஏன் தெரியுமா?" வனிதா மேடம் சொல்லிவிட்டு உற்றுப் பார்த்தார்.

"நானே பதில் சொல்கிறேன். உனக்கு ஓவியத்தில் இஷ்டம்! எனக்கும் கூட ஓவியத்தில் இஷ்டம். சரியா! இனிமேலாவது கூச்சப்படாமல் பேசு! இப்போ என்னைப் பிடித்திருக்கிறதா?"

சரி என்பது போல் சித்ரா தலையாட்டினாள்.

"வெரி குட்! இது உன் வீடு மாதிரி! நான் உன் அம்மா மாதிரி! எது வேண்டுமானாலும் தயங்காமல் கேள்! உதவி செய்யத்தான் நாங்கள் இருக்கிறோம்" என்று சரமாரியாகப் பேசினார் வனிதா.

மகிழ்ச்சியுடன் தலையாட்டினாள் சித்ரா.

"தலையாட்டுகிறாயே தவிர, நிமிர்ந்து பார்க்க மாட்டேன் என்கிறாய்! நிமிர்ந்து என்னைக் கூர்ந்து பார்! நான்தான் அரிமா சங்க ஓவியப் போட்டிக்கு வந்திருந்த மூன்று நடுவரில் ஒருவர். தெரிகிறதா?"

"இப்பொழுது வார்டனை நேருக்கு நேர் பார்த்தாள் சித்ரா. அவளுக்கு, வார்டனை இப்போது ரொம்பவும் பிடித்துப் போய்விட்டது. பெற்றோர் இதே ஊரில் இருந்தும் சித்ரா ஏன் ஹாஸ்டலுக்கு வந்தாள் என்பதை வனிதா அறிந்து கொண்டார். ஆனால் சித்ரா அற்புதமான திறமை மிகுந்த ஒரு பெண். ஊக்கப்படுத்தப்பட வேண்டியவள் என்பதில் வனிதா ஒரே தீர்மானமாக இருந்தார்.

பெரிய மேடம் கோமதிக்கு போன் பண்ணி, சித்ராவின் படிப்பைப் பற்றியும், அவளுடைய புரோக்கிரஸ் ரிப்போர்ட்டையும் கேட்டு அறிந்து கொண்ட வனிதா, அவளுக்கு எந்த சப்ஜெக்ட் எல்லாம் கஷ்டமோ, மார்க் குறைந்துள்ளதோ அதையெல்லாம் தானே மாலையில் அருகே உட்கார வைத்துச் சொல்லிக் கொடுத்தார். அரையாண்டுத் தேர்வில் அதன் விளைவு தெரிந்தது. சித்ரா எல்லாப் பாடங்களிலும் 60க்கு மேல் எடுத்தாள்.

பொங்கல் நெருங்கிக் கொண்டிருந்தது. ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் விடுமுறை நாட்களின் போது ஹாஸ்டலில் சுற்றுலா போவது வழக்கம். இவ்வாண்டு பெங்களூர், மைசூர் போக இருந்தார்கள். கட்டணம் எண்ணூறு ரூபாய். வந்து சேர்ந்து ஒரு மாதமே ஆகியிருந்தும் சித்ராவும் இதில் கலந்து கொள்ள வேண்டும் என்று வனிதா மேடம் விரும்பினார்.


பசுபதியின் நிலைமை தெரிந்ததுதான். பள்ளியிலும், ஹாஸ்டலிலும் முழு நேரமும் சித்ரா படிக்க வேண்டும் என்று விரும்புவார். அப்படி இருக்க அவரிடம் சுற்றுலாவுக்குப் பணம் கட்டக் கேட்டால் தரவா போகிறார்.

ஆனால் வனிதா சித்ராவைக் கட்டாயம் சுற்றுலாவுக்கு அனுப்ப விரும்பினார். அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

வனிதா குழந்தையாக இருக்கும்போது சித்ராவைப் போல் ஓவியம் வரையக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டார். அதற்கு உதவியவர் ஓவியர் ரகுமான். இப்போது அவர் பெங்களூரில் வசிக்கிறார். அவருக்கு உலகம் முழுவதும் விசிறிகள். பெரிய கலைக் கூடம் நடத்தி வருகிறார். அண்மையில் பாரீசில் நடைபெற்ற உலக ஓவியர் மாநாட்டுக்குக் கூடச் சென்று வந்திருக்கிறார். அதை வார்டன் வனிதா பேப்பரில் படித்துத் தெரிந்து

வைத்திருந்தார்.

புகழ் பெற்ற ஓவியர் ரகுமானின் ஆசீர்வாதம் சித்ராவுக்குக் கிடைக்க வேண்டும் என்று வனிதா விரும்பினார். சித்ராவுக்கான பணத்தைத் தானேகூடத் தர அவர் தயாராக இருந்தார். ஆனாலும் சுற்றுலாவுக்கு சித்ராவை அனுப்புவது அவர் கையில் இல்லையே? பசுபதி அனுமதித்தால் தானே உண்டு. அவரையே சந்தித்து அனுமதி கேட்டால் என்ன? உடனே கிளம்பிவிட்டார்.



மாலை ஏழு மணி இருக்கும்!

வனிதாவைத் திடீரென்று தன் வீட்டு வாசலில் பார்த்ததும் மங்கைக்கு அதிசயமாக இருந்தது. "வாங்க மேடம், சித்ரா நன்றாக இருக்கிறாளா?" என்று கேட்டார். உட்காரச் சொன்னார்.

பேச்சுக் குரல் கேட்ட பசுபதி, 'வாங்க வாங்க' என்று அழைத்தவாறு முன் அறைக்கு வந்தார். சித்ராவின் படிப்பில் முன்னேற்றம் கண்டிருப்பது வனிதாவின் தனி கவனிப்பே என்பதை அவர் அறிந்திருந்ததால் அவரிடம் தனியான மரியாதை இருந்தது அவருக்கு.

"சித்ராவுக்கு ஒரு குறையும் இல்லை! எனக்குத்தான் ஒரு பெரிய குறை இருக்கிறது" என்று வனிதா ஒரு போடு போட்டார். விளையாட்டாக!

"உங்களுக்கு அப்படி என்ன குறை?" மங்கை விசாரித்தார்!

"முக்கியமான கல்விச் சுற்றுலா! பெரும்பாலான குழந்தைகள் கலந்து கொள்கிறார்கள். நம் சித்ரா போகவிட்டால் எப்படி?"

'நம் சித்ரா' என்று வனிதா சொன்ன விதம் மங்கைக்கு மிகவும் பிடித்திருந்தது. "இன்னும் கொஞ்ச நாளில் சித்ராவை 'என் சித்ரா' என்று கூடச் சொல்லிவிடுவீர்கள் போல் தெரிகிறதே!" என்றார் அவர் சிரித்துக் கொண்டே.

"உண்மைதான். அதனால்தான், நானே சித்ராவுக்குப் பணம் கட்ட ஏற்பாடு செய்திருக்கிறேன்.. உங்களுக்குச் செய்தி சொல்ல வேண்டுமே, அதனால் வந்திருக்கிறேன்!"

அனுமதி கேட்க வந்த வனிதா, தன் பேச்சுத் திறமையால் காரியத்தைச் சாதித்துக் கொண்டார்.

பசுபதியால் மறுப்புச் சொல்ல முடியவில்லை.

"சுற்றுலா முடித்து வந்த பின் சித்ராவை இங்கு அனுப்பி வைக்கிறேன்" என்று விடைபெற்றார் வனிதா.



மைசூர் பெங்களூரைச் சுற்றிப் பார்த்த மாணவிகளும் ஆசிரியைகளும் இறுதியாகத் தாங்கள் தங்கியிருந்த 'பிரிட்டோ' பள்ளிக்கு வந்து சேர்ந்தார்கள். பிற்பகல் முழுவதும் அவர்களுக்கு ஓய்வு. சுற்றிப் பார்த்து நினைவுப் பொருட்களை வாங்க மாணவிகளுக்கு அனுமதியளிக்கப்பட்டது. ஆனால் குறிப்பிட்ட அந்தத் தெருவைத் தாண்டி யாரும் செல்லக் கூடாது என்று கட்டுப்பாடு விதித்தார்கள்.

உடன் வந்திருந்த தமிழரசி டீச்சரிடம் சித்ரா, வார்டன் கொடுத்த கடிதத்தை நினைவு படுத்தினாள். அவரும் கடித்தில் கண்டுள்ள தொலைபேசிக்குப் போன் செய்தார்.

"எஸ். ரகுமான் பேசறேன்!" என்ற குரல் மறுமுனையிலிருந்து வந்தது.

"வணக்கம் சார்! நாங்கள் சென்னையிலிருந்து வந்திருக்கிறோம். உங்கள் பழைய மாணவி வனிதா உங்களைச் சந்திக்கச் சொன்னார், என் பெயர் தமிழரசி! என்னுடன் உள்ள சித்ரா ஒரு ஓவிய மாணவி" என்றார் டீச்சர்.

"ஓ. எஸ்! வனிதா எனக்குப் போன் செய்தார்! உங்களுக்கு எப்போது முடியுமோ அப்போது வாருங்கள்! கன்டோன்மென்ட் ஏரியாவுக்கு வந்து பேலஸ் ரோடில் என் பெயர்ச் சொல்லி யாரிடம் கேட்டாலும் சொல்வார்கள்" என்றார் ஓவியர் ரகுமான்.

"இன்னும் ஒரு மணி நேரத்தில் வருகிறோம் சார், நன்றி!"

சித்ராவும் தமிழரசி டீச்சரும் ஒரு ஆட்டோவில் புறப்பட்டார்கள்.

ஓவியர் ரகுமான் கலைக் கூடம்! வாசலில் இரு பெரும் தூண்கள். வரவேற்பறை மிக விசாலமாக இருந்தது. "வாங்க மேடம் தமிழரசி! சித்ரா, வெல்கம் டு யூ" என்று தமிழிலும் ஆங்கிலத்திலும் வரவேற்புக் கூறினார் ரகுமான்.

சித்ராவும் தமிழரசியும் வணக்கம் தெரிவித்தனர்.

காட்சிக்கு இனிய கலைப் பொருள்கள் அறைக்கு மேன்மேலும் மெருகூட்டின. வைத்த கண் வாங்காமல் இருவரும் பிரமித்தனர்.

வெளிநாடுகளிலும், நம் நாட்டிலும் அவருக்கு அளிக்கப்பட்ட கேடயங்கள், பாராட்டுப் பத்திரங்கள், ரிப்பன்களால் கோர்க்கப்பட்டிருந்த சிறப்பு அணிகலன்கள் போன்றவை வரிசை, வரிசையாக ஒரு அலமாரியின் மூன்று அடுக்குகளில் அலங்காரமாக வைக்கப்பட்டிருந்து.

ரகுமான் எவ்வளவு பெரிய மனிதர் என்பதை அவை ஒரு நொடியில் பார்ப்போருக்கு உணர்த்தின. அவரைச் சந்திக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்றே தமிழரசியும் சித்ராவும் நினைத்துக் கொண்டார்கள்.

"உங்களுக்கு நான் என்ன செய்யலாம்!" என்று கேட்டார் ரகுமான்.

"இந்தச் சிறுமிக்கு உங்கள் நல்வாழ்த்துகளும் ஆசியும் வேண்டும்! அதற்காகத்தான் வனிதா இங்கு எங்களை அனுப்பினார். சித்ராவுக்கு ஓவியம் வரைவதில் ஆர்வம்... உள்ளபடியே, வனிதா மேடமும் எங்களுடன் உங்களைப் பார்க்க வருவதாக இருந்தது. எதற்காகவோ வரவில்லை, காரணத்தை அவர் யாரிடமும் சொல்லவில்லை" என்றார் தமிழரசி.

"என்னிடம் சொன்னார்" என்றார் ரகுமான்.

"சித்ரா, நீயும் எனக்குப் போட்டியா படம் போடுவாயா? எங்கே எதையாவது போடு பார்க்கலாம்? அதோ பென்சில் பேனா, பேப்பர், பிரஷ் எல்லாம் இருக்கிறது" என்று தொடர்ந்து சொன்னார் ரகுமான்.

"உங்கள் முன் போட பயமாக இருக்கிறது!" என்றாள் சித்ரா.



கையைக் காட்டு" என்று சித்ராவின் கையை வாங்கிப் பிரித்தார். அதில் தன் பிரஷ் ஒன்றை எடுத்து வைத்து, "இது உனக்கு நான் தரும் பரிசு! வைத்துக் கொள்" என்றார் ரகுமான்.

சித்ராவுக்கு ஆனந்தத்தில் கண்களில் நீர் தளும்பியது. பிரபல ஓவியர் ரகுமானின் பிரஷ் தனக்குக் கிடைத்தது மாபெரும் சொத்து என்று நினைத்து மகிழ்ந்தாள். தமிழரசி டீச்சர் நடப்பவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தார்.

"ஐயா! சித்ரா வரைந்துள்ள படத்தில் தாங்கள் கையெழுத்துப் போட்டுத் தர வேண்டும்" என்று தமிழரசி டீச்சர் பணிவாகக் கேட்டார்.

ரகுமான் புன்முறுவல் பூத்தார். "என் கையெழுத்துக்கு என்ன விலை தெரியுமா?" என்று கேட்டார்.

டீச்சரும் மாணவியும் 'தெரியாது' என்பது போல ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"வனிதாவைக் கேளுங்கள் சொல்வார்! என் விசிறி யாராவது அதைப் பார்த்து விட்டால், அவரின் பண வசதிக்கேற்ற வண்ணம் பணம் கொடுத்து வாங்கிக் கொள்வர். சாதாரணமாக இருபதாயிரம் ரூபாயிலிருந்து, ஐம்பதாயிரம் ரூபாய் வரை கூட வாங்கி இருக்கிறார்கள்" என்றார் ரகுமான்.

அவர் சொன்னதைக் கேட்டு இருவரும் வாயைப் பிளந்தார்கள்.

"பயப்படாதீர்கள்! சித்ராவின் ஓவியத் திறமை வளர என் ஆசியும் உண்டு! கையெழுத்தும் உண்டு! போட்டுத் தருகிறேன்!. சித்ரா இப்படிக் கொடு" என்று கேட்டார் ரகுமான்.

சித்ரா நடுங்கும் கையால் எடுத்துப் படத்தை நீட்டினாள்.

படத்தை ஓரிரு நிமிடங்கள் உற்றுப் பார்த்து கையெழுத்துப் போட்டார்.

'பத்திரம்! பெஸ்ட் ஆஃப் லக்!" என்று வாழ்த்தி அனுப்பி வைத்தார் ரகுமான்.

என்ன நடந்தது என்பதைக் கேள்விப் பட்ட ஆசிரியர்களும் மாணவிகளும், 'ஐயோ, நாம் அந்தச் சந்தர்ப்பத்தைத் தவற விட்டு விட்டோமே' என்று ஆதங்கப்பட்டார்கள்! சித்ராவை வாழ்த்தினார்கள்.

"பயப்படாதே! உம்..." என்று ஆர்வமூட்டினார் ரகுமான். அதற்குள் ஒரு தொலைபேசி வந்தது. ரகுமான் எழுந்து உள்ளே போய் விட்டார்.


தமிழரசி டீச்சர், "சித்ரா, அவர் அவ்வளவு சொல்லும் போது உனக்கு தெரிந்ததைப் போடு! அவரிடம் கையெழுத்துக் கூட அதில் வாங்கலாம்" என்று ஊக்கப் படுத்தினார்.

அந்த வார்த்தை சித்ராவுக்கு ஊக்கம் அளித்தது. போர்டு அருகே போனாள்! கை வேலையைத் தொடங்கியது! அவரது உருவத்தையே தனக்குத் தெரிந்த வரையில் வரைந்து முடித்தாள்.

ரகுமானின் தொலைபேசி நண்பர், நெடுநேரம் பேசினார். அதை அடுத்து, அவர் உள்ளே சென்று காப்பி தயாரிக்கச் சென்றார். அவர் திரும்புவதற்குச் சற்றுத் தாமதமானது. அது சித்ராவுக்கும் நல்லதாகப் போயிற்று. தான் வரைந்த படத்திற்கு மெருகேற்றிக் கொண்டிருந்தாள்.

ரகுமான் வந்தார்! போர்டு அருகே சென்று சித்ரா வரைந்த படத்தைப் பார்த்தார். "சபாஷ் மிக நன்றாக வரைந்து இருக்கிறாய்! நான் எதிர்பார்த்ததற்கும் மேலாக அழகாக இருக்கிறது! பாராட்டுகள்! எங்கே கை கொடு பார்க்கலாம்!" என்று கை குலுக்கினார்.

சித்ராவுக்கு இமய மலையின் உச்சிக்கே சென்றது போன்ற பிரமை ஏற்பட்டது. அவர் காலைத் தொட்டு நமஸ்காரம் செய்யப் போனாள். "அதெல்லாம் வேண்டாம் குழந்தை. எங்கே உன்



"நாங்க சொந்தமா பஸ் வச்சிருக்கோம்டா?"
"என்ன பஸ்டா?"
"காம்பஸ்'தான்!"
— பா. ஜெயக்குமார்

விஜயாவும் அந்தக் கூட்டத்தில் இருந்தாள். வேண்டா வெறுப்பாக, ஒப்புக்கு அவளும் சித்ராவை வாழ்த்தி வைத்தாள்.

"சரி, காலை நான்கு மணிக்கே எல்லோரும் எழுந்து விட வேண்டும். நமக்கு வண்டி காலை ஆறு மணிக்கு! யாரும் தாமதத்துக்குக் காரணமாகிவிடக் கூடாது" என்று அம்புஜம் டீச்சர் அறிவிப்பு விடுத்தார்.

விடியற்காலை கடுமையான மழை. எப் படியோ ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தார்கள். மழை வெள்ளத்தில் ரயில் கிளம்புவதே சந்தேகம் என்றார்கள். ஒருவழியாக ஒரு மணி நேரம் தாமதமாக ரயில் கிளம்பியது.

ரயில் கிளம்பி ஆமை வேகத்தில் நகர்ந்து ஒரு மணி நேரம் கூட ஆகியிருக்காது. மழை இன்னும் சக்கைபோடு போட்டுக் கொண்டிருந்தது.

கண்ணெதிரே ரயில் தண்டவாளங்கள் வெள்ளத்தில் மிதந்ததைப் பார்த்து, டிரைவர் கலங்கினார்.

மேற்கொண்டு வண்டியை நகர்த்துவதில் ஆபத்து உள்ளது, என்று நிறுத்தி விட்டார். மீண்டும் எப்போது வண்டி புறப்படுமோ!

மாலை ஆறு மணி ஆகிவிட்டது. பயணிகளுக்குப் பொறுமை போனது. அத்துடன் பசியும் வந்தது. வண்டியில் இணைத்திருந்த 'உணவுப் பெட்டி'யிலிருந்த பொருள்கள் எல்லாம் மதியமே விற்றுத் தீர்ந்து விட்டன.

இரவு பதினோரு மணி இருக்கும்! மழை விட்டிருந்தது. ரயில் பாதையைச் சோதனையிடும் பிரிவினர் பாதையைச் சரி பார்த்து, வண்டி புறப்படலாம் என்று 'ஓகே' சொன்னார்கள்.

வண்டி ஜோலார்பேட்டையைத் தாண்டி விரைந்தது. ரயில்வே அதிகாரிகள் நிம்மதி அடைந்தார்கள்.

வித்யா உயர் நிலைப் பள்ளி மாணவிகளும் ஆசிரியைகளும் தனிப் பெட்டியில் தூங்கிக் கொண்டிருந்தார்கள். வண்டியின் இருபுறத்திலும் அவர்கள் தங்கள் பள்ளியின் பெயரைச் சாக் கட்டியில் எழுதியிருந்தது அழிந்து போய் விட்டது.

காட்பாடி ஸ்டேஷனுக்கு முன்னே பெயர் தெரியாத ஒரு ஸ்டேஷனில் வண்டி நின்றது. எங்கு பார்த்தாலும், 'கும்'மிருட்டு! ஸ்டேஷன் மாஸ்டர், ஒரு சிப்பந்தி தவிர அந்த ஸ்டேஷனில் ஆள் அரவம் தெரியவில்லை. தூரத்தில் உள்ள ஒரு பெஞ்சில் ஒருவர் படுத்து இருந்தார். கீழே இன்னொருவர் படுத்திருந்தார். வேட்டியைக் கொண்டு உடம்பை இருவரும் போர்த்தியிருந்தனர்.

வண்டி புறப்படுவதற்கு அறிகுறியாக ஒரு குரல் கத்தியது. திடீரென்று சித்ராவுக்குத் தூக்கம் போய்விட்டது போலும்! எழுந்தாள்.

"ஏன் என் படத்தை எடுத்துக் கொண்டு போகிறீர்கள்! எங்கே கொண்டு போகிறீர்கள்! கொடுங்கள்" என்று முனகியவாறே கதவுப் பக்கம் சென்றாள்! கதவைத் திறந்து கொண்டு இறங்கவும் செய்தாள்! அதற்குள் வண்டி நகர்ந்து விட்டது!

கண்களைக் கசக்கினாள் சித்ரா! தான் கண்டது கனவா! ஓவியர் ரகுமான் கையெழுத்துப் போட்டுக் கொடுத்த படத்தைத் தன் பெட்டியிலிருந்து இருவர் எடுத்துக் கொண்டு ஓடினார்கள் என்பது வெறும் மாயையா? அரிய பொக்கிஷத்தைத் தொலைத்து விடக் கூடாது என்று ஆழ் மனத்தில் எழுந்த பயமா? என்னவென்று தெரியவில்லை.

சித்ரா தூக்கம் கலைந்து புரிந்து கொள்வதற்குள் வண்டி பிளாட்பாரத்தை விட்டுப் போய் விட்டது!


சித்ரா நிலைமை அறிந்து அழ ஆரம்பித்தாள்!

(வளரும்)




பேனாவும் பூனையும்

கதை: வேணு ஸ்ரீனிவாசன்
படம்:






ஒருநாள் பிரசாத், பிரபு வைத்திருந்த பூனைக்குட்டியைப் பார்த்து~
அழகா இருக்கே எங்கிட்ட கொஞ்சம் கொடுடேன்.. அதன் பேரென்ன?
பேருமணி! தெருவிலிருந்து எடுத்து வளர்க்கிறேன்! இந்தா பிடி!
மறுநாள் பிரசாத் பிரபுவிடம் வந்து~
டேய் மணியை எனக்குக் கொடுடேன்.. ப்ளீஸ்!
என்ன பதிலே இல்லை!
..சரி..என் பார்க்கர் பேனாவை வச்சுக்கிட்டு மணியைக் கொடுக்கறியா?
சரி இந்தா!
அன்றிரவு பிரசாத், தன் வீட்டில்
இந்தா பால்... அட..என்ன, வேண்டாமா..?
மோர்? அதுவும் பிடிக்கலையா?


பிரபு குடிசையில்
மணி இல்லாமெ கஷ்டமா இருக்கும்மா!
அப்போ ஏன் கொடுத்தே?
பாடாப் போன பேனா ஆசை!
அப்போது கதவோரம் தட்டும் சத்தம்!
?
ஹை! மணி! அம்மா, மணி வந்திருச்சு!
மறுநாள் பிரசாத் வந்து
பிரபு நேற்றிலிருந்து மணியைக் காணோம்டா!
இந்தா பிரசாத் உன் பார்க்கர் பேனா!
அப்ப ஏன்னா?
மணி தானா, ராத்திரி மழையோட எங்க வீட்டுக்கு ஓடிவந்திருச்சு! எனக்கும் அதைப் பிரிந்து இருக்க முடியலை. சாரிடா!

காளமேகக் கவிராயர் சிலேடைப் பாடல்களையும், நிந்தாஸ்துதிப் பாடல்களையும் அன்னை அகிலாண்டேஸ்வரியின் அருளால் ஏராளமாகப் பாடியவர்.

திருவானைக்காவல் அகிலாண்டேஸ்வரி ஆலயத்தில் மடைப்பள்ளியில் தெய்வத்துக்கு நைவேத்யம் படைக்கும் அலுவலில் இருந்த வரதாச்சாரி கவிஞனானதே ஒரு அற்புதமான நிகழ்ச்சி.

நெடுங்காலமாக தேவி உபாசனை செய்து கொண்டிருந்த ஒரு உபாசகருக்கு வரமளிக்க அகிலாண்டேஸ்வரி அவர் எதிரே நின்றாள்.

தன் தியானத்தைக் கலைக்க வந்த யாரோ மோகினி என நினைத்துத் துச்சமாகப் பேசி அன்னையை விரட்டி அடித்தார் உபாசகர். மனம் சலித்த தேவி ஒரு மூலையில் உறங்கிக் கொண்டிருந்த வரதனுக்கு அனுக்கிரகம் செய்துவிட்டு மறைந்து விட்டாள்.'

'திருவானைக்கா உலா' பாடினான் வரதன். நீர் கொண்ட மேகம் மழை பொழிவதைப் போல் வரதன் வாய் திறந்தால் இனிக்கும் கவி மழை கொட்டியதால் 'கவிகாளமேகம்' என மக்கள் அன்புடன் அழைத்தனர்.

மன்னர் திருமலைராயனின் அரசவையில் அதிமதுரக்கவிராயர் என்ற புலவர் இருந்தார். அவரது பாடலுக்கு புகழ் கிடைக்க, கிடைக்க அவரது கர்வமும் அதிகரித்துக் கொண்டே போயிற்று.

தினமும் அவர் அரசவை செல்லும் போது பின்னால் ஒரு பல்லக்கில் அவர் எழுதிய ஏட்டுச் சுவடிகளும், பெற்ற பரிசுகளும், விருதுகளும் அவரிடம் தோற்ற புலவர்கள் சுமந்து வரு வார்கள.

இதைக் கண்ட காளமேகம் மனம் கொதித்து அரச சபைக்குச் சென்றார். அங்கே அவரை வரவேற்பா:ரில்லை. "தாயே! அகிலாண்டேஸ்வரி! இது எனக்கு நேர்ந்த அவமானமல்ல! தமிழுக்கு, புலமைக்கு, ஏன், சதா என் நெஞ்சத்தில் குடியிருக்கும் உனக்கு நேர்ந்த தலை குனிவு! இதைப் போக்குவதும் உன்னால்தான் முடியும்" என்று தியானித்த, மறு நிமிஷம் சிம்மாசனம் ஒரு பக்கம் வளர்ந்தது.


அனைவரும் பிரமித்திருக்க காளமேகப் புலவர் 'விடு விடு'வென்று போய் அதில்



காளமேகக்

அமர்ந்தார். நிறைந்த சபையில் திருமலை ராயன் கோபத்துடன், "எனக்கு சரியாக ஆசனம் வரவழைத்து உட்கார்ந்து கொள்ளும் நீங்கள் யார்? உங்கள் ஊரும், பேரும் என்ன, தொழில் எது? சித்து வேலை தெரிந்தவரா? மந்திர மாயங்கள் கற்றவரா?" என்று கேட்டான்.

"அரசே! புலவர்களைப் பெருமைப்படுத்தும், திருமலைராயரின் சபையில் ஐந்து நாழிகைக்குள் தூதும், ஆறு நாழிகைக்குள் உலாவும், அந்தாதியும் பாடிப் பரிசு பெற வந்தவன். எனது ஊர் ஸ்ரீரங்கம். ஆதியில் கோயில் பரிசாரகன். அன்னை அகிலாண்டேஸ்வரியின் அருளால் கவி பாடும் பேறு பெற்றவன்" என்று



தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார் காளமேகப் புலவர்.

அதிமதுரக்கவிராயர் சினத்துடன் "அரிகண்டம் பாடுவீர்களா?" என்று கேட்க, "எமகண்டமே பாடுவேன்" என்றார் காளமேகம்.

கழுத்தில் கத்தியின் அறுக்கும் பகுதியைக் கட்டிக் கொண்டு புலவர் பாட வேண்டும். பாடலில் தவறு ஏற்பட்டால் கத்தியை இணைத்திருக்கும் கயிற்றை இழுப்பார்கள். கழுத்து அறுபட்டு புலவர் மடிவார். இது அரிகண்டம்.

கீழே கொதிக்கும் எண்ணெய்க் கொப்பரை. அதற்கு நேராக விட்டத்தில் கட்டித் தொங்கும் பலகை மீது புலவர் அமர்ந்து பாட வேண்டும். பாடலில் பிழை ஏற்பட்டால் பலகைக் கயிற்றை அறுத்து விடுவார்கள். புலவர் கொதிக்கும் எண்ணெய்க் கொப்பரையில் விழுவார். இது எமகண்டம்.

காளமேகப் புலவர் மனதில் அகிலாண்டேஸ்வரியைத் தியானித்து எமகண்டம்

கவி

ஆர். பொன்னம்மாள்



பழங்களுக்குரிய இலைகளைக் கண்டுபிடியுங்கள்! – போட்டி முடிவு

இந்தப் போட்டி உங்களை நிறைய யோசிக்க வைத்திருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. நிறைய பேர் மாதுளை, எலுமிச்சை இலைகளில் தவறு செய்திருந்தார்கள். சரியான விடைகளை எழுதியவர்களில் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

ரூபாய் பத்து பரிசு பெறுவோர்

1. ப. விஜயன், திண்டுக்கல் - 1
2. கே. நரசிம்மன், களமருதூர் வழி, பாண்டூ (அஞ்சல்), விழுப்புரம் மாவட்டம்
3. ஜா. ஜெனித்தா, சம்பத் நகர், ஈரோடு
4. என். ரத்னா, தைக்காடு, திருவனந்தபுரம், கேரளா
5. ப. மருதமணி, கரிவலம் வந்தநல்லூர், நெல்லை மாவட்டம்
6. ஜெ. தனலட்சுமி, நாலு வேதபதி (தெற்கு), வேட்டைக்காரனிருப்பு (வழி), வேதை தாலுக்கா
7. என். விக,. கூறைநாடு, மயிலாடுதுறை
8. கே. காயத்ரி, மச்சுவாடி, புதுக்கோட்டை மாவட்டம்
9. ஜெ. இந்துமதி, 5ஆம் வகுப்பு, எஸ்.ஜெ.எச். பள்ளி, லால்குடி
10. வி. பிரசாந்த், விருகம்பாக்கம், சென்னை - 92
11. பி.எம். சஜீனா, நாகர்கோயில் - 1
12. ஜெ. ரத்ன தீபா, சேலம் - 15
13. பி. எஸ்தர் சௌந்தர்யா, பி.என். புதூர் (அஞ்சல்), கோயமுத்தூர்
14. ஜய. ஆர்த்தி, கோட்டுச்சேரி
15. தே. காயத்திரி, மதுரை - 1

சரியான விடை

1. மாதுளை - 6, 2. எலுமிச்சை - 5, 3. மா - 4, 4. புளி - 3, 5. திராட்சை - 2, 6. பலா - 1

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

பாடினார். வெற்றி பெற்றதும் இது "குட்டிச் சாத்தானை வசியம் பண்ணி செய்கிற மாயம்; அம்பிகையாவது! அருளாவது!" என்று அதிமதுரக்கவிராயர் அரசன் மனதைக் கலைக்க, அரசர் அவர் சொல்லை நம்பி காளமேகத்தைப் பரிசளித்துப் பாராட்டவில்லை.

"அகிலாண்டேஸ்வரி! உன் கருணையையே அலட்சியம் செய்த திருமலை ராயனின் அரண்மனையில் மண்மாரி பொழியச் செய்" என காளமேகம் வேண்ட மணல் மழை பெய்து மக்கள் அல்லாடினர்.

காளமேகத்திடம், "உங்களின் மகிமை அறியாமல் அகம்பாவமாய் இருந்தது குற்றம்தான். அன்னையின் அருளால் மணல் மாரியை நிறுத்துங்கள்" என்று கொற்றவனும், புலவரும் வேண்டினர்.

அடுத்த விநாடி காளமேகப் புலவர் அம்பிகையைப் பாட மண்மாரி நின்று நகரம் பிழைத்தது.

திருமலைராயன் காளமேகப் புலவருக்கு ஏராளமான பரிசளித்தான்.

ஒரு முறை கடுங்கோடையில் புலவர் வழி நடந்தார். எதிரே ஒரு மங்கை மோர் விற்றுக் கொண்டு வந்தாள். புலவர் அவளிடம் தாகத்துக்கு மோர் வாங்கிக் குடித்தார். மோரில் அதிகம் தண்ணீர் ஊற்றி இருந்தாள் அந்த நங்கை.

"மேகத்தில் இருக்கும் போது உன் பெயர் கார்; பூமிக்கு வரும் போது உன் பெயர் மழை; இந்தப் பெண்ணின் பானைக்குள் வரும்போது உன் பெயர் மோர்! நீரே, உனக்குத்தான் எத்தனை பேர்" என்று பாடினார்.

அந்தப் பெண் நாணித் தலை கவிழ்ந்தபடி, "சாமி! இனிமே இவ்வளவு தண்ணி ஊத்தமாட்டேன்; என்னை மன்னிச்சுடுங்க"என்று சொல்லி விட்டுச் சென்றாள்.

நகைச்சுவையோடு மக்களைத் திருத்தியவை காளமேகப் புலவரின் சிலேடைப் பாடல்கள்.

பிருந்தாவனக் கவியரங்கம்


தாமிரபரணி

எங்கள் ஊரு சேரையில்
எழிலும் மிக்க நதியுண்டே.
நதியின் பெயர் பொருணைதான்
தாணி போற்றும் ஆறுதான்!

பொதிகை தந்த பொருணையிலே
ஒளியே தந்திடும் மின்சாரம்
உன்னால் கிடைக்கும் அணையிலே
உவப்பு அடைந்தது நெல்லையே!

அகத்தியர் தந்த தமிழையே
அன்னை பொருணை தந்தாளே.
அம்மா உன்னைப் போற்றுகிறேன்
அகிலம் செழிக்கச் செய்வாயே!

— சி.டி. ஸ்ரீகாந்த் (7), சேரன்மகாதேவி.



கோலம்

புள்ளி வைத்துப் போடலாம்
பூ பூவாய் போடலாம்.

மாவினாலும் போடலாம்
மணலில் கூட போடலாம்

வெள்ளையாகப் போடலாம்
வேண்டிய வண்ணம் கொடுக்கலாம்.

— ஜெ. தேன்மொழி, தாசுகுப்பம்.




எங்கள் பாரத நாடு

தங்கமெனச் செந்நெல்
தழைத்தோங்கும் நாடு!
சங்கம் வைத்து மொழிவளர்த்த
சான்றோர் நிறைந்த நாடு!

வரம்பில்லா புகழுடைய
வளம்மிக்க நாடு!
அறத்தை நிலை நாட்டுகின்ற
அருமையான நாடு!

நன்றி மறவாப் பண்புள்ள
நல்லோர் நிறைந்த நாடு!
என்றும் மாறா புகழ் கொண்ட
எங்கள் பாரத நாடு!

— ஜி. கௌரிப்ரியா, எட்டாம் வகுப்பு,
ஸ்ரீ வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளி,
சேலம்.





Mythology -
REAL or MYTH?

SONS, BEWARE!


FREE LABELS

GOKULAM

The monthly magazine for children

JUNE '98
Rs. 5/-

47, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal,
Chennai - 600 097



மரங்களுக்கு மத்தியில் அமைந்திருந்த குருநாதரின் குடில் வாசலில் மன்னர் விமலேந்திரன் குதிரையிலிருந்து கீழே இறங்கினார். ஆசனத்தில் அமர்ந்திருந்த குருநாதரை பணிவோடு வணங்கினார். ''குருவே! என் மனம் குழப்பம் அடைந்த போதெல்லாம் நான் தங்களை வந்து சந்தித்து ஆலோசனை பெற்றுள்ளேன். அதே போல இப்பொழுதும்...'' மன்னர் தயங்கினார்.

"சொல் விமலேந்திரா! உன் மனக் குழப்பத்திற்கு என்ன காரணம்?'' குருநாதர் கேட்டார்.

''குருவே! புவனகிரி, மந்திரகிரி என்ற இரு நாடுகளும் எனது நாட்டின் அண்டை நாடுகள் என்றும், இரண்டுமே வலிமை மிக்க நாடுகள் என்பதும் தாங்கள் அறிந்ததே. புவனகிரி மன்னர் பூபாலன், மந்திரகிரி மன்னன் மார்த்தாண்டன் - இருவருக்குமே தாங்கள் தான் வல்லவர்கள் என்ற கர்வம். இப்போது இருவரும் தங்களுக்குள் போர் தொடுக்க தயாரான நிலையில் இருக்கின்றனர். என்னுடைய படைகளைக் கொடுத்து உதவும்படி இரண்டு நாட்டு மன்னர்களுமே தனித்தனியாக எனக்கு மடல் அனுப்பி இருக்கின்றனர். பல உயிர்கள் பலியாகும் போருக்கு உதவ எனக்கு மனமில்லை. தாங்கள்தான் எனக்கு ஒரு வழி சொல்ல வேண்டும்'' என்றார் விமலேந்திரன்.

சிறிது நேரம் யோசித்த குருநாதர், ''விமலேந்திரா! 'என்னால் முடிந்த உதவியைச் செய்கிறேன்' என்று இரண்டு நாட்டு மன்னர்களுக்கும் செய்தி அனுப்பி விடு'' என்றார்.

ஒரு வினாடி திகைத்த மன்னர், "மன்னிக்க வேண்டும் குருவே. ஒரே சமயத்தில் என்னால் எப்படி இரண்டு நாட்டு மன்னர்களுக்கும் உதவி செய்ய முடியும்?'' என்று வினவினார்.

''முடியும் விமலேந்திரா! நான் சொல்கிறபடி செய்'' என்று கூறிய குருநாதர் மன்னரிடம் என்ன செய்ய வேண்டும் என்பதை தெளிவாக விளக்கினார்.

விமலேந்திரனும் அவ்வாறே செய்வதாகக் கூறி அவரை வணங்கி விடை பெற்றுச் சென்றார்.

புவனகிரி நாட்டிற்கும் மந்திரகிரி நாட்டிற்கும் சண்டை ஆரம்பித்த முதல் நாள் மாலை.

த. ஜானகி

இரண்டு பக்கங்களிலும் வீரர்கள் இறந்தும், காயமுற்றும், கை கால்கள் அடி பட்டும் கிடந்தனர். வலி தாங்காமல் முனகிய வீரர்களின் அவலக் குரல் அங்கு தினமாக எதிரொலித்துக் கொண்டிருந்தது.

முதல் நாள் சண்டையை முடித்த இரண்டு நாட்டு சேனாதிபதிகளும் எஞ்சிய வீரர்களுடன் தங்கள் பாசறைக்குச் சென்று விட்டனர்.

போர்க்களத்திற்குச் சிறிதும் சம்பந்தம் இல்லாமல் சற்றுத் தொலைவில் இருந்த அந்தப் பெரிய நிலப் பகுதியின் வாயிலில் 'அன்புப் பூங்கா' என்று எழுதப்பட்டிருந்த வெண் பட்டுத் துணி காற்றில் லேசாக அசைந்து கொண்டிருந்தது. அங்குள்ள மரங்களுக்குக் கீழ் பல கூடாரங்கள் போடப்பட்டு இருந்தன. அதன் கிழக்குப் பகுதியில் தீவட்டி விளக்கின் ஒளியில் பலர் மூலிகைகளை இடித்துக் கொண்டும், அரைத்துக் கொண்டும் இருந்தனர். வாயிற் பகுதியில் பத்துப் பதினைந்து பல்லக்குகளும், ரதங்களும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.


போர்க்களத்தில் யாரும் இல்லை என்று ஒரு வீரன் வந்து தெரிவித்தான். மறு வினாடி வெள்ளை உடை அணிந்த பல இளைஞர்கள் பல்லக்குகளையும் ரதங்களையும் எடுத்துக் கொண்டு போர் நடைபெற்ற இடத்திற்கு விரைந்தனர். காயம்பட்டு துடித்துக் கொண்டிருக்கும் இரு நாட்டு வீரர்களையும் பல்லக்குகளிலும் ரதங்களிலும் ஏற்றிக் கொண்டு வேகமாக அன்புப் பூங்காவிற்குள் நுழைந்தனர். அங்கு குழுமி இருந்த மருத்துவர்கள் தயாராக அரைத்து வைக்கப்பட்டிருந்த மூலிகை மருந்தை வீரர்களின் உடலில் காயம் பட்ட பகுதியில் தடவி விட்டு கட்டுப் போட்டனர். பிறகு மெதுவாக அவர்களை கூடாரத்திற்குள் படுக்க வைத்தனர். இரவு முழுவதும் மருத்துவப் பணி தொடர்ந்தது.

இப்பணி ஒரு நாள் மட்டுமில்லை. கிட்டத்தட்ட பத்து நாட்கள் வரை தொடர்ந்தது.

போரின் கடைசி நாள். அன்று தான் பூபாலனும் மார்த்தாண்டனும் குதிரையின் மீது அமர்ந்தபடி நேருக்கு நேர் மோதிக் கொண்டனர். இரண்டு தரப்பிலும் வீரர்கள் கடும் சண்டையில் ஈடுபட்டனர். நேரம் ஆக ஆக இரண்டு பக்கத்திலும் சண்டை போட்டுக் கொண்டிருந்த வீரர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வந்தது.


மார்த்தாண்டன் தோற்க வேண்டும் என்ற வெறியோடு தாக்கினார் பூபாலன். புவனகிரியை தன் நாட்டோடு இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற பேராசையோடு வாளை வேகமாகச் சுழற்றினார் மார்த்தாண்டன். கடும் சண்டை. வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் சண்டை. பேராசைக்கும் போராசைக்கும் சண்டை!

எதிர்பாராது மார்த்தாண்டன் குதிரையின் கால் தடுக்கி விடவே குதிரை கீழே சாய, மார்த்தாண்டனும் கீழே சாய்ந்தார். அந்த நிலையிலும் பூபாலன் தன்னை நோக்கி வாளை வீச முயல்வதைக் கண்ட மார்த்தாண்டன் சமாளித்த படி குறி தவறாது கண்



"எங்க வீட்டுல எலிபாசாணம் எங்கேன்னு கேட்டதை எலி காதுல வாங்கிடிச்சு போலிருக்கு!"
"எப்படி சொல்றே?"
"என் வீட்டுப் பக்கம் எலியே வர மாட்டேங்குதே!"
— காழி. ஆர். சீதாராமன்

இமைக்கும் நேரத்தில் வாளை பூபாலனின் மார்பை நோக்கி வீசலானார். குறி தவறவில்லை. சொல்லி வைத்தாற் போல இருவரின் வாள்களும் ஒரே சமயத்தில் எதிராளிகளின் உடம்பில் பட்டது. சில வினாடிகளில் அவர்கள் மயங்கி தரையில் சாய்ந்தனர். இதைக் கண்ட வீரர்கள் செய்வது அறியாது திகைத்து அஞ்சி ஓடி விட்டனர்!



மறுநாள் காலை மெதுவாக கண் விழித்த மன்னர் பூபாலனுக்கு முதலில்தான் எங்கிருக்கிறோம் என்றே தெரியவில்லை. சுற்றும் முற்றும் பார்த்தார். புதிய இடம். ஒன்றுமே புரியவில்லை. சிறிது நேர சிந்தனைக்குப் பிறகு முதல் நாள் போரில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் நினைவுத் திரையில் பளிச் என எட்டிப் பார்க்கவே மெதுவாக எழுந்து உட்கார்ந்து கொண்டார். தன் மார்பில் போடப்பட்டிருந்த கட்டுகளைப் பார்த்துக் கொண்டே இருந்த அவரின் பார்வை தனக்கு மிக அருகில் கண் மூடிய நிலையில் மார்பில் கட்டுகளோடு படுத்துக் கிடந்த மார்த்தாண்டனின் மீது சென்றது.

"என் அருகில் என் விரோதியா?" - உள்ளம் கொதித்தது. வாளை எடுத்து வீச கைகள் பரபரத்தன.

அப்போது -

"மன்னரே! தங்கள் உடம்பு எப்படி இருக்கிறது? நன்றாக உறங்கினீர்களா?" - என்ற குரல் கேட்டு திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்தார்.

எதிரே மன்னர் விமலேந்திரன்!

"விமலேந்திரரே! நீங்கள் ஒரு மோசக்காரர். உங்கள் படைகளை எனக்கு கொடுத்து உதவி இருந்தால் நான் கட்டாயம் ஜெயித்திருப்பேன்" - என்று கூச்சலிட்டார் பூபாலன்.

"இல்லை விமலேந்திரரே! உங்கள் படைகள் உரிய சமயத்தில் என்னிடம் வந்திருந்தால் நான்தான் வெற்றி வாகை சூடியிருப்பேன்" - சுய நினைவிற்கு வந்த மார்த்தாண்டன் சீற்றத்தோடு கர்ஜித்தார்.

"என்னால் முடிந்த உதவியைச் செய்வேன்; என்று சொல்லி விட்டு என்னை ஏமாற்றி விட்டீர்கள்" - பூபாலன்.

"நான் உங்கள் இருவரையும் ஏமாற்றவில்லை. என்னால் முடிந்த உதவி களைச் செய்து கொண்டுதான் இருக்கிறேன்."

"பொய்! என்ன உதவி செய்தீர்கள்?" - சேர்ந்தாற்போல் பூபாலனும் மார்த்தாண்டனும் கேட்டனர்.

"என்னால் முடிந்த உதவிகளைச் செய்கிறேன் என்று சொன்னால் படைகள் கொடுத்து உதவுவதாக நீங்கள் எண்ணி விட்டீர்கள் இல்லையா! மன்னர்கள் தங்கள் பேராசைக்காக, தங்கள்

வீரத்தைப் பறை சாற்றிக் கொள்வதற்காக நடத்திய சண்டையில் பலியாக இருந்த விலை மதிக்க முடியாத பல உயிர்களை இயன்றவரை போராடி பிழைக்க வைக்க முயற்சிப்பது உதவி இல்லையா? சொல்லுங்கள்" என்றார் விமலேந்திரன்.

மார்த்தாண்டனும் பூபாலனும் அமைதியாக இருந்தனர்.

"நான் நினைத்திருந்தால் குற்றுயிராய் நீங்கள் போர்க்களத்தில் விழுந்து கிடந்த போதே உங்கள் இருவரையும் என் வாளுக்கு இரையாக்கி விட்டு, உங்கள் நாடுகளையும் நானே கைப்பற்றிக் கொண்டிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யாது உங்கள் நாட்டை நீங்களே ஆள வேண்டும் என்று நினைத்து இருவரின் உயிரையும் காப்பாற்றினேன். உயிரை அழிப்பது உதவியா? காப்பது உதவியா? நீங்களே சொல்லுங்கள்" என்றார் விமலேந்திரன்.

சில நிமிடங்கள் கழிந்தன. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். முதலில் தன்னை சமாளித்துக் கொண்டு பேசியவர் பூபாலன்தான்.

"விமலேந்திரரே! நீங்கள் என் கண்களைத் திறந்து விட்டீர்கள். உண்மையிலேயே நீங்கள் செய்த உதவியை என்னால் மறக்க முடியாது."

"விமலேந்திரா! என்னாலும் உன் உதவியை மறக்க முடியாது. இதற்கு என்ன கைமாறு செய்யப் போகிறேன் என்றே தெரியவில்லை" என்றார் உணர்ச்சிப் பெருக்குடன் மார்த்தாண்டன்.


"நீங்கள் இருவரும் சொல்வது உண்மை என்றால் நான் தங்களிடம் ஒரு உதவி கேட்பேன். செய்வீர்களா?"

"நிச்சயம் செய்வோம்!"

"நீங்கள் இருவரும் உங்கள் விரோதத்தை மறந்து இன்றிலிருந்து அன்புடனும் நட்புடனும் இணைந்து வாழ வேண்டும்" என்று கூறியபடி இரு மன்னர்களின் கரங்களையும் இணைத்தார் விமலேந்திரன்.

குறுக்கெழுத்துப் புதிர் விடை

1 ஒ	ன்	று	■	ர்	னீ	ன்	2 ப	■
ட்	■	■	■	3 தூ	■	4 பொ	■	லா
5 ட	ம்	ட	ம்	■	ம்	■	■	டே
ப்	■	■	■	தி	6 ர	■	■	ண்
7 பி	த்	த	ளை	■	8 வா	கோ	ல்	9 ம
டா	■	■	10 வ	லை	■	■	■	ன்
ர	■	■	11 கு	■	டு	கு	டு	12 ச
ம்	■	13 பூ	■	14 சா	■	■	■	ல்
■	15 ஆ	ணை	ம	லை	■	லை	ல்	16 நெ



தந்தை பெரியாரின் கதை, கருமாரன், பக். 96 - ரூ. 20/- ஜீவா பதிப்பகம், 36,சசாஸிமூர்த்தி கோவில் தெரு, திருவொற்றியூர், சென்னை - 19.

சீர்திருத்தச் செம்மல் பெரியார் ஈ.வே.ராவின் வாழ்க்கை வரலாற்றை மிக எளிமையான நடையில், முக்கியமானவற்றை ஒதுக்கி விடாது, சிறுவர்களுக்கு ஏற்ற முறையில் ஆசிரியர் தந்திருக்கிறார். பெரியாருடைய வாழ்க்கை வரலாறு சிறுவர்க்கு ஏற்றபடி வந்துள்ள முதல் நூல் என்ற பெருமையை இதற்குத் தரலாம். மனித நேயம் மிக்க சில நிகழ்ச்சிகளைப் படிக்கும்போது நாமே நெகிழ்கிறோம். குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய போட்டியில் பரிசு பெற்றதில் எந்த வியப்பும் இல்லை. மருதுவின் உயிர்த்துடிப்பான ஓவியங்கள் நூலுக்கு மெருகூட்டுகின்றன. தரமான தயாரிப்பு.

பந்தும் பாப்பாவும், தேவி நாச்சியப்பன், பக். 64 - ரூ. 18/- பழனியப்பா பிரதர்ஸ், சென்னை - 14.

சிறுவர்க்காக எழுதும் பெண் எழுத்தாளர்கள் மிகக் குறைவு. அவர்களில் ஒருவரின் படைப்பு இது. கோகுலத்தில் வெளிவந்த அருமையான பத்துச் சிறுகதைகளின் தொகுப்பு. வெளிவந்த

கின்னிக் கோழி கின்னிக் கோழி என்ன கேட்கிறாய்?

போதே வாசகர்களின் பாராட்டைப் பெற்றவை. ராமுவின் படங்கள் மெருகூட்டுகின்றன. தரமான படைப்பு. பரிசளிக்க ஏற்றது.

அம்பேத்கரின் அமுத மொழிகள், வீ. மணிவண்ணன், பக். 104, ரூ. 20/- மணி மேகலைப் பிரசுரம், 4, தணிகாசலம் சாலை, சென்னை - 17.

அரசியல் மேதை அண்ணல் அம்பேத்கரின் பொன் மொழிகளைத் தொகுத்துத் தந்திருக்கிறார்கள். உண்மையான சகோதரத்துவம், கூட்டுறவு, அறியாமை, தேசத்தை மதிப்பது என்பது போன்ற பல தலைப்புகளில் இவை கலவைமாகத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. எளிய நடையில் இவை இருப்பது நூலுக்குச் சிறப்பு. சிறுவர்க்கு மட்டுமல்ல பெரியவர்களுக்கும், பேச்சாளர்களுக்கும் கூட பயன்படக் கூடியது.

பாடும் பறவைகளே! முனைவர் வாகிஜெயரத்னம், பக். 100, ரூ. 22/- பாவலன் பதிப்பகம், 35, சாரங்கபாணி தெரு, சென்னை - 33.

குழந்தைகளுக்கென எழுதப்பட்ட 80 அழகுப்பாடல்களின் கனமான தொகுப்பு. தலைப்புகளில் பெரும்பாலானவை வழக்கம் போன்றவையே. இருப்பினும் புதிய பொருள்களிலும் பாடல்கள் உள்ளன உ.ம். 'எங்கள் நாட்டின் பூங்காவனம்' என்ற காஷ்மீர் பற்றிய பாடல் (காஷ்மீர் என்றதும் நேருவின் நினைவு வர வேண்டாமா? இல்லையே!) இன்சாட், சிக்கனம் பிடிப்போம், ஞானபீட நாயகன் அகிலன், செஞ்சிலுவைச் சங்கம், ஆவின், கின்னிக் கோழி, போன்ற பாடல்களுக்கு எளிய சொற்களால் பின்னப்பட்ட சந்தம் புது வேகம் தருகின்றன. உதாரணம்:

''கின்னிக் கோழி
கின்னிக் கோழி
என்ன கேட்கிறாய்?''
''கொத்திக்
கொத்தித் தின்பதற்குத்
தீனி கேட்கிறேன்.''


அட்டைப்படமும், உள்ளே படங்களும் வித்தியாசமாக உள்ளன. பெருமைப்பட வேண்டிய தயாரிப்பு.

பட்டாம் பூச்சி, அகிலன் கண்ணன், பக். 80, ரூ. 15/- பாவலன் பதிப்பகம், 35, சாரங்கபாணி தெரு, சென்னை - 17.

படிக்க வைப்பதுடன் சிந்திக்க வைக்கும் அருமையான ஆறு சிறுகதைகள் இதில் உள்ளன. மனிதாபிமானம், மனசாட்சி, தூய நட்பு போன்ற உயர் குணங்களைக் கதைகள் உணர்த்துகின்றன. குழந்தைக் கவிஞரின் ஆசியும், கதைகள் பற்றிய சிறுமி கீர்த்தியின் கருத்தும் உள்ளன. எளிமையான நடை, பெருமை தரும் தரமான தயாரிப்பு.

— ரே

பிருந்தாவனம்



மரம் ஏறும் ஆடு!

ஆடுகள் மரம் மற்றும் செடிகளில் தாவித் தாவி பறித்துச் சாப்பிடும். ஆனால் மரம் ஏறாதல்லவா?

மொரொக் கோஸியா வெள்ளாடுகள் மரங்களின் மேலே ஏறி இலைகளைத் தின்பதுடன், குரங்குகளைப் போன்று கிளைக்குக் கிளை லாவகமாகத் தாவிச் செல்கின்றன!

உலகிலேயே மரம் ஏறும் ஆடுகள் இந்த ஆடுகள் மட்டுமே!

காவல்கார மர்மாட்


பெருச்சாளி வகையைச் சேர்ந்தவை 'மர்மாட்கள்'. இவைகள் மொத்தமாக இரை தேடக் கூட்டமாக வரும்போது அதில் ஒரு மர்மாட் மட்டும் காவல் காக்கிறது.

தம்மை ஏதாவது மிருகமோ அல்லது பறவையோ தாக்க வருவதைக் கண்டால் காவல் காக்கும் மர்மாட் உரக்கக் கத்தும். இதன் சத்தத்தைக் கேட்டதும் ஏதோ ஒரு ஆபத்து என்று எண்ணி எல்லா மர்மாட்களும் வளைக்குள் ஓடி மறைந்து கொள்ளும். ஆபத்து விலகியதும் எல்லாம் வெளியே வந்துவிடும்.

வாயினால் சுவாசம் ?

'கார்மொராண்ட்' என்னும் பறவைக்கு மூக்குத் துவாரமே கிடையாது! பிறகு சுவாசிப்பது எப்படி? இந்த இனப் பறவைகள் சுவாசிப்பது வாயினால் மட்டுமே!





பிறந்ததும் பறக்கும்!


உலகில் உள்ள எந்தப் பறவையின் குஞ்சும் முட்டையை விட்டு வெளி வந்ததும் பறக்கத் தொடங்காது. ஆனால் ஆஸ்திரேலியாவிலுள்ள 'பிரஷ்டர்க்கி' எனும் ஒருவகை பறவையின் குஞ்சு மட்டும் முட்டையை விட்டு வெளியே வந்ததும் பறக்கும் ஆற்றலைப் பெற்று விடுகிறது.

ஆர். ஆர். பூபதி, கன்னிவாடி.



விசிறிகள்

ஏதேனும் சிறப்புகள் உடைய ஒரு மனிதரின் ரசிகரை விசிறிகள் (FANS) என்று கூறுகிறோம். இது FANATIC என்ற வார்த்தையிலிருந்து வந்திருக்கக் கூடும் என்று கருதப்படுகிறது. இந்த வார்த்தைக்கு ஒரு பொருளின் மீது அல்லது ஒருவர் மீது அளவுக்கதிகமான, அர்த்தமற்ற ஆர்வம்



உடையவர் என்பது பொருள்.

இங்கிலாந்தில் விக்டோரியா மகாராணி ஆண்ட காலத்தில் மின் விசிறிகள் கிடையாது. மக்களிடையே பிரபலமான மனிதர்களின் ரசிகர்கள் அவர்களுக்குத் துணியால் செய்த விசிறிகளால் விசிறிக் கொண்டிருப்பார்களாம். இவர்களுக்கு FAN-MAN என்ற பெயரே இருந்தது. இதிலிருந்து விசிறிகள் (FANS) என்ற வார்த்தை தீவிர ரசிகர்கள் என்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

அளவான காலணி!

தற்போது காலணிகள் அவரவர்களின் அளவுகளுக்கேற்ற வகையில் கிடைக்கிறது அல்லவா? ஆனால் காலணிகள் உபயோகப்படுத்த ஆரம்பித்த காலகட்டங்களில், தற்போது உள்ளது மாதிரி



அளவுகள் கிடையாது. பிரான்ஸ் நாட்டில் கி.பி. 1300ல் காலணிகளை காலில் கட்டிக் கொண்டு நடந்தார்களாம். இப்படிக் கட்டுவதைத் தவிர்த்து இரண்டு கால்களுக்கும், தனித் தனியாக அளவெடுத்து, தயாரித்து அணிந்து கொண்டவர் இரண்டாம் எட்வர்ட் மன்னர்தான். கி.பி. 1324ம் ஆண்டில் இவர் காலணிகளை சரியான அளவுடன் தயாரித்து அணிந்து கொண்டார்!

முதல் செயற்கை உறுப்பு

பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த டைகோப்ராஹே என்ற வானவியல் நிபுணர் எதிரியுடன் நடத்திய ஒரு வாக்குவாதத்தில் தன் மூக்கை இழந்தார். அதற்குப் பதிலாக உலோக மூக்கு ஒன்றை அணிந்து கொண்டார். அந்த உலோக மூக்கே உலகில் மனிதன் பயன்படுத்திய முதல் செயற்கை உறுப்பு என மருத்துவ உலகம் கூறுகிறது.

– ஈழம் மலர்மன்னன்



பிரமிக்க வைக்கும்

பிரமிடுகள்!




• ஸ்பிங்க்ஸ் சிலை

பிரமிடின் ஒரு மாதிரி வடிவமைப்பை யாரிடமாவது காட்டி அது என்ன என்று கேளுங்கள். பெரும்பாலும் 'பிரமிடு' என்ற சரியான பதிலே கிடைக்கும். ஏனெனில் பிரமிடுகள் மிகவும் புகழ் பெற்றவை. உலகில், பல்வேறு இடங்களில் பிரமிடுகள் உள்ளன. இருந்தாலும், எகிப்தில் உள்ள 'தி கிரேட் பிரமிடு' (The Great Pyramid) தான் பிரமிடு என்றதும் நம் நினைவுக்கு வரும். அதற்கு மட்டும் ஏன் இத்தனைச் சிறப்பு?

எகிப்தின் கெய்ரோ நகருக்கு அருகே, நைல் நதியின் வடதிசையில் மிகவும் பிரம்மாண்டமாக வீற்றிருக்கும் பிரமிடுதான் 'தி கிரேட் பிரமிடு'. கி.மு. 26ஆம் நூற்றாண்டில் எகிப்திய பேரரசர் கூஃபிற்காகக் கட்டப்பட்டதுதான் இப் பிரமிடு. எகிப்திய பேரரசர்களை 'பாரோ' என்றழைப்பது மரபு. இப் பிரமிடுக்கு அருகே காஃப்ரே மற்றும் மென்காரே அரசர்களுக்காகவும் இரு பிரமிடுகள் கட்டப்பட்டுள்ளன. இம்மூன்று பிரமிடுகளும் பல நூற்றாண்டுகளாக நிலைத்து நின்று நம்மை பிரமிக்கச் செய்கின்றன.

சுமார் 450 அடி உயரம் உள்ள 'தி கிரேட் பிரமிடு' 22½ இலட்சம் (2¼ மில்லியன்) சுண்ணாம்புக்கல் பாளங்களால் ஆனது. ஒவ்வொரு பாளத்தின் எடையும் சுமார் 2½ மெட்ரிக் டன். பிரமிடின் உள்ளே இருக்கும் அரசர் அறையின் கிரானைட் தளம் சுமார் 50¾ மெட்ரிக் டன் எடையுடையது. இப் பிரமிடின் மொத்த எடை சுமார் 60 இலட்சம் மெட்ரிக் டன்களுக்கும் அதிகம். எந்தவொரு நவீன கருவியையும் பயன்படுத்தாமல், பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இவையத்தனையும் சாத்தியமானது அற்புதம்தான்!




பிரமிடின் வடிவமைப்பு மிகத் துல்லியமாக இருக்கிறது. செயற்கையாக சமதளமாக்கப்பட்ட இடத்தில் இது கட்டப்பட்டுள்ளது. இந்த சமதளம் முழுமையான, சமதளத்தில் இருந்து அரை அங்குலம் மட்டுமே வேறுபடுகிறது. அதைப் போலவே இதன் அடிப்பகுதி (Base) முழுமையான சதுரத்திற்கு சில அங்குலங்கள் மட்டுமே வித்தியாசமாய் அமைந்துள்ளது. இதன் ஒவ்வொரு பக்கமும் ஒவ்வொரு திசையை மிகச் சரியாக நோக்கி உள்ளன.

இதன் வடப்பக்கத்தில் மிகக் குறுகிய, சிறிய நுழைவாயில் ஒன்று உள்ளது. இந் நுழைவாயில் கிராண்ட் காலரி

என்னும் 153 அடி நீளப் பாதையில் சேர்கிறது. கிராண்ட் காலரி நம்மை 140 அடி உயரத்தில் உள்ள அரசரின் அறைக்கு அழைத்துச் செல்கிறது. அரசர் அறை அமைந்துள்ள உயரம் பிரமிடின் மொத்த உயரத்தில் மூன்றில் ஒரு பங்கு. இவ்வாறு அமைத்ததில் தனிப்பட்டக் காரணங்கள் இருக்கலாம். இவ்வுயரத்தில் அற்புத சக்தி இருப்பதாக சிலர் நம்புகின்றனர். இதனடிப்படையில், கோவையில் ஒரு பள்ளியில் பிரமிடின் மாதிரியொன்று கட்டப்பட்டு உள்ளது!

மூன்று பெரிய பிரமிடுகளைத் தவிர சிறிய பிரமிடுகள் சிலவும் இங்கு காணப்படுகின்றன. இவை பாரோவின் மனைவியருக்கும்,



அரசு உயர் அதிகாரிகளுக்கும் உரியனவாக இருக்கலாம்.

ஸ்பிங்ஸ் என்ற சிலை போன்ற உருவமைப்பு இப் பிரமிடுகளைக் காவல் காப்பது போல உள்ளது. இது காஃப்ரோவினால் கட்டப்பட்டது. இதில் உள்ள முகம் அவரைக் குறிப்பதாகக் கருதுகின்றனர். உடல் சிங்கத்தைப் போன்றும் முகம் மனிதனைப் போன்றும் ஸ்பிங்ஸ் அமைந்துள்ளது. இதன் உயரம் 66 அடி, நீளம் 240 அடி. முகத்தின் அகலம் 13¾ அடி. முகத்தில் அரச குடும்பத்திற்கான முடி அமைப்பு, நெற்றியில் அரசச் சின்னமான நல்ல பாம்பு ஆகியவை உள்ளன. இதன் மூக்குப் பகுதி சேதமுற்றுள்ளது; தாடிப்பகுதியைக் காணவில்லை.

ஸ்பிங்ஸுக்கு அருகே கல்வெட்டு அமைப்புகள் உள்ளன. அதில் ஒரு சுவையான குறிப்பு காணப்படுகிறது. துமோஸ் என்ற அரசர், ஒருமுறை இதன் நிழலில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தாராம். அப்போது, இந் நினைவுச் சின்னத்தின் மீது உள்ள மண லைச் சுத்தம் செய்தால் எகிப்திய அரச மணிமுடி கிடைக்கும் என கனவு கண்டார். அக்கனவின் படி அவரும் செய்ய, எகிப்திய மணிமுடியும் கிடைத்ததாம்!

எல்லோரையும் பிரமிக்க வைக்கும் இப் பிரமிடுகள், உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படுவதில் வியப்பில்லைதானே!

— **கோ. சதீஷ்குமார்.**

எட்டாவது அதிசயம்!


அப்பு, குப்பு இருவரும் நல்ல நண்பர்கள். யார் வீட்டில் விசேஷம் என்றாலும் அழைப்பில்லாமலே ஆஜராகி விடுவார்கள்.

அப்புவுக்கு இலை நிறைய பரிமாறியதைப் பார்க்கப் பார்க்க மகிழ்ச்சி உண்டாகும். அதன் பிறகே சாப்பிட ஆரம்பிப்பார். சாப்பிடுவதைவிட இன்னும் என்னென்ன வருகிறது என்று தெரிந்து கொள்வதில்தான் விருப்பம் அதிகம்.

குப்புவோ அவருக்கு நேர் எதிர். இலையில் விழுந்த உடனேயே பழம், வடை, இனிப்பு எல்லாவற்றையும் சாப்பிட்டு விடுவார்.

ஒரு நாள் இருவரும் கல்யாணத்துக்குச் சாப்பிடச் சென்றார்கள். வழக்கம் போல் அப்பு உள்ளே இருந்து வரும் பட்சணங்களைப் பார்த்துக் கொண்டிருக்க குப்பு பரிமாறி இருந்த மாம்பழத்தைச் சாப்பிடத் தொடங்கினார்.

"அப்பு! மல்கோவா மாம்பழம்... ரொம்ப அற்புதமாயிருக்கு! சாப்பிட்டுப் பாரேன்" என்று நச்சரித்தார் குப்பு.



சொந்தத்தில் மாந்தோப்பே இருந்ததால் முழு மாம்பழங்களையே பரிமாறினார்கள்.

அப்பு பரிமாறுவதை நோட்டமிட்டபடி மாம்பழம் சாப்பிட்டார்.

குப்பு மாம்பழத்தின் ருசியை விட மனமில்லாமல் கொட்டையைச் சப்பிக் கொண்டிருந்தார். கொட்டை 'சரே'லென வழுக்கி அப்புவின் இலையில் விழுந்தது. அருகிலும், எதிரிலும் சாப்பிட அமர்ந்திருந்தவர்கள் இந்த அவலத்தைப் பார்த்து நமட்டுச் சிரிப்புச் சிரித்தனர். குப்பு திருட்டு விழி விழித்துக் கொண்டிருந்தார்.

அப்பு இதொன்றையும் அறியாதபடி மாம்பழம் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். சாப்பிட்டு முடித்து அடுத்து வரும் அவியல் பக்கெட்டைப் பார்த்தபடி கொட்டையை இலையில் வைத்தார்.

இதற்குள் அவியல் பரிமாற வந்தவர் இலையைப் பார்த்து விட்டு, "என்ன அதிசயம்! ஒரு மாம்பழத்திலே ரெண்டு கொட்டை பார்த்தியா" என்று வியந்தார்.

குப்பு, "அதைவிட அதிசயம்! என் மாம்பழத்திலே கொட்டையே இல்லே..." எனவும் அனைவரும் கொல்லென்று சிரிக்க, குப்புவின் முகத்தில் அசடு வழிந்தது.

– மாலதி

இரவு எட்டு மணி. எக்ஸ்பிரஸ் இரயில் வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. பெஞ்சில் எதிர் எதிரே அமர்ந்தபடி, பல்லவியும், ஜனனியும் இரவு உணவை முடித்துக் கொண்டிருந்தார்கள்.

கைகளைத் துடைத்துக் கொண்டே வந்த அம்மா, அவர்கள் எதிரேயிருந்த இருக்கையில் அமர்ந்து, "இன்னுமா சாப்பிடறீங்க. சீக்கிரம்! தண்ணீர் நின்னுடப் போகுது" என்றார்.

"ரெண்டு பேரும் மெதுவாப் போங்க... வண்டி ஒரே ஆட்டமா



ஓடும் இரயிலிலே...

யிருக்கு பாரு. ஜாக்கிரதையாக் கழுவிட்டு வாங்க. வாஷ்பேஸின் பக்கத்திலே ஒரு ஆள் கதவோரமா மூட்டை முடிச்சுகளோடு தூங்கி விழுந்துகிட்டு வர்றான். பாவம்... அவன் மேலே தண்ணி படப் போகுது" என்று எச்சரித்தார் அப்பா.

"நேத்து ராத்திரிகூட அந்த ஆளு மூட்டையோடு மூட்டையாக சுருண்டு கிட்டிருந்தாரு" என்றார் அம்மா.

பல்லவியும் ஜனனியும் கை கழுவப் போனார்கள்.

அவர்கள் சொல்லியிருந்தபடியே ஒருவர், கதவைத் திறக்க முடியாதபடி மூட்டை முடிச்சுகளோடு ஒருமாதிரி சாய்ந்து உட்கார்ந்த நிலையில் கண்களை மூடிக் கொண்டு இருந்தார்.

"ஜனனி! குழாயை அதிகமாத் திறக்காதே. வேகமாகத் தண்ணி கொட்டினா கையைக் கழுவறபோது, பாவம் அந்த ஆளு மேலே தெறிக்கும்" என்றாள் பல்லவி.

"சரி... குழாயை நீயே திறந்து விடு" என்றாள் ஜனனி.

இருவரும் ஜாக்கிரதையாகவே கைகளைக் கழுவிக் கொண்டார்கள். பல்லவி மட்டும் ஞாபகமில்லாமல் கைகளை வேகமாக உதறி விட்டாள்.

அவள் கையிலிருந்த நீர்த்துளிகள் ஜனனியின்மீது மட்டுமல்ல, கீழேயிருந்த அந்த ஆளின் மீதும் விழுந்து விட்டன.

பயமும் பரிதாபமும் போட்டியிட, அவர் முகத்தைப் பார்த்தாள் பல்லவி.

அவர் திடுக்கிட்டு விழித்துக் கொண்டவரைப் போல் தோன்றவில்லை. மெதுவாகவே விழிகளைத் திறந்தார். தம் உடலில் போர்த்தியிருந்த கம்பளிப் போர்வையால் முகத்தைத் துடைத்துக் கொண்டே அந்தச் சிறுமிகளைப் பார்த்தார். அப்போதுதான் அவர் இராணுவ உடுப்போடு இருந்தது தெரிந்தது.

அவர் திட்டுவாரோ, அடிக்க வருவாரோ என்றெல்லாம் எண்ணிக்

பூவை அமுதன்

கொண்டு, வேகவேகமாக நெஞ்சு துடிப்பதையும் பொறுத்துக் கொண்டு தவிப்போடு நின்றிருந்தார்கள் இருவரும்.

அவர் சரியாக நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு அவர்களைப் பார்த்து சிரித்தார்.

அதற்குப் பிறகுதான் பல்லவிக்குச் சற்றுப் பயம் குறைந்தது. "சாரி சார்!" என்றாள் மெதுவாக.

ஜனனி பல்லவியின் கையை அழுத்திப் பிடித்துக் கொண்டு, "போகலாங்கா!" என்றாள்.

'பரவாயில்லேம்மா, நீங்க போங்க!' என்பது போல் வாயைத் திறந்து ஏதும் வார்த்தைகளால் சொல்லாமல் சைகையாகவே தலையசைத்துத் தெரிவித்தார் அந்தப் பட்டாளத்துக்காரர்.

வருத்தமாக இருந்தது இருவருக்கும். பல்லவி அவரைப் பார்த்துக் கைகளைக் கூப்பினாள். ஜனனியும் அவளைப் போலவே கை குவித்து வணக்கம் தெரிவித்தாள். அவர் முகத்தில் சிரிப்பு தெரிந்தது.

"என்னம்மா இவ்வளவு நேரம்? கூட்டமா?" என்றார் அம்மா.

"பாவம்மா! அங்கே படுத்துக் கொண்டிருப்பவர் ஒரு இராணுவ வீரர்ம்மா!" என்றாள் பல்லவி.

"நான் டெல்லி ஸ்டேஷனிலேயே பார்த்தேன். கடைசி நேரத்திலே ஓடிவந்து, கஷ்டப்பட்டு சாமான்களோடு சாமான் மாதிரி உள்ளே வந்து விழுந்தார். இது ரிசர்வேஷன் கம்பார்ட்மெண்ட் இல்லையா? டிடிஆர் டிக்கெட் கேட்டார். அவரும் காட்டினார். அதற்கப்புறம் ரெண்டு பேரும் இந்தியிலே ஏதோ பேசிக்கிட்டாங்க. அப்புறம் என்ன... உள்ளே உட்காரவோ, படுக்கவோ இடம் இல்லே. கடைசியிலே அந்த இடத்திலேயே உட்கார்ந்துட்டாரு" என்றார் அப்பா.

"நாட்டைக் காக்கிற சிப்பாய், வீட்டுக்குப் போறபோது ஒழுங்கா ரிசர்வேஷன் செய்துகிட்டுக் கிளம்பியிருந்தால் என்ன?" என்று கேட்டார் அம்மா.

"பாவம்! அவருக்கு என்ன நிலமையோ? வீட்டிலிருந்து திடீர்னு தகவல் வந்திருக்கும். உடனே புறப்படும்படி நேர்ந்திருக்கும். நமக்குத் தெரிஞ்சு, இன்றோடு ரெண்டு ராத்திரி... சரியாப் படுத்துத் தூங்காமல் உட்கார்ந்தபடியே தவிச்சிக்கிட்டு வர்றாரு மனுஷன்!" என்று அப்பா உருக்கமாகச் சொன்னார்.

பல்லவிக்குக் கேட்கவே பரிதாபமாக இருந்தது. அவள் முகத்தில் கவலை தெரிந்தது. ஜனனிக்கும் வருத்தமாகத்தான் இருந்தது. சரியாகப் பெஞ்சில் போர்த்திக் கொண்டு படுத்திருந்தும் நேற்று இரவு அவளுக்கு விடியற்காலையில்தானே தூக்கம் வந்தது!

"நீ ஏண்டி! முகத்தை ஒருமாதிரி வச்சிக்கிட்டு நிற்கிறே? படுத்து நல்லாத் தூங்கு" என்று கண்டிப்பான குரலில் சொன்னார் அம்மா.

"எனக்கு ஒரே கவலையாயிருக்குப்பா. தூக்கமே வராது" என்றாள் பல்லவி. அவள் சொல்லி முடிப்பதற்குள்,

"உனக்கு என்னம்மா கவலை?" என்று பரிவோடு கேட்டார் பல்லவியின் தோளைப் பற்றிக் கொண்டு, அப்பா.

"பாவம்பா. அந்த இராணுவத்துக்காரர் வீட்டை விட்டுட்டு சொந்தக்காரங்களை விட்டுட்டு, நாட்டைக் காப்பாற்றுகிற பணியிலே, வெயில் மழைன்னு பாராமல்,



இராத்திரி பகலுன்னு விழிப்போடு எவ்வளவு கஷ்டப்பட்டு கடமையைச் செய்திருப்பாரு. அவருக்கு நம்மைப் போலச் சுகமா இரயில்லே பயணம் செய்ய முடியலியே" என்று சொல்லும்போதே

பல்லவிக்குத் தொண்டையை அடைத்தது.

அப்பா அவளை அப்படியே அணைத்துக் கொண்டார். "எனக்கும் கஷ்டமாத் தான் இருக்கு, நீ சொன்ன பிறகு" என்றார்.

"சரி. வருத்தப்படலாம். வேற என்ன செய்ய முடியும் நம்மாலே?'' என்றார் அம்மா.

''செய்யலாம்மா! அவர் கஷ்டத்தை நாம கொஞ்சம் குறைக்கலாம்மா!'' என்றாள் பல்லவி உறுதியான குரலில்.

"என்னடி சொல்றே நீ?'' என்றார் அம்மா.

"அம்மா! இங்கே நானும் ஜனனியும் தனித்தனியா படுத்துக் கொள்ள 'பெர்த்' இருக்கு. இதுக்கெல்லாம் கட்டணம்கூட நாம நேரடியாப் பணம் கட்டினது இல்லே. அப்பா ஆபீசிலே கொடுத்த சலுகை வருடத்துக்கு ஒருமுறை குடும்பத்தோடு இந்தியாவிலே பல இடங்களுக்குப் பயணமாப் போய்ப் பார்க்க முடியுது..."

''ஆமாம்மா! பல்லவி அக்காவும் நானும் ஒரே பெர்த்திலே சேர்ந்து படுத்துக்கறோம். அந்த இராணுவ வீரர் எங்க பெர்த் ஒண்ணுல படுத்துத் தூங்கட்டுமே!'' என்றாள் ஜனனி. ஆச்சரியமாக இருந்தது அப்பாவுக்கு!

"ஜனனி உனக்குக்கூட இதெல்லாம் புரியுதே! எங்களுக்கு இப்படித் தோணாமே போச்சே" என்றார் அப்பா.


"சீக்கிரம் போய்... அந்தச் சிப்பாய் கிட்டே சொல்லி, படுக்கக் கூட்டிக்கிட்டு வாங்கப்பா!" என்று பரபரத்தாள் பல்லவி.


இரயில் ஓடிக் கொண்டிருந்தது. அப்பா அங்கிருந்து புறப்பட்டார். பல்லவி ஜனனி இருவரும் ஆவலோடு அம்மாவின் பக்கத்திலே அமர்ந்திருந்தார்கள்.

சிறிது நேரத்தில் இராணுவ வீரர், மூட்டை முடிச்சுகளோடு அப்பாவின் பின்னே வந்து கொண்டிருந்தார்.

பல்லவியும் ஜனனியும் சிரித்துக் கொண்டார்கள்.


சோர்வாக இருந்த இராணுவ வீரரின் முகத்திலேயும் சிரிப்பு தவழ்ந்தது.





துப்பாக்கி எங்கே?


கிறுக்கா?



பள்ளி உணவு இடைவேளையின் போது பேசிக் கொண்டிருந்தோம். அப்போது என் தோழி, ''உங்கள் வீட்டில் எப்படி செல்லமாகக் கூப்பிடுவார்கள்?'' என்று வரிசையாகக் கேட்டாள். நாங்களும் சொல்லிக் கொண்டு வந்தோம். கடைசியாக ருக்மணியிடம் கேட்டாள் தோழி. ''என்னை கிருக்குன்னு கூப்பிடுவாங்க'' என்றாள். நாங்கள் அனைவரும் சிரிக்க ஆரம்பித்தோம். சுதாரித்துக் கொண்ட ருக்மணி ''இனிசியலைச் சேர்த்துச் சொல்லி பழகிட்டேன். அதான் கிருக்கா யிடுச்சி. ருக்குன்னு கூப்பிடுவாங்க'' என்றாள்.

— வ. உமாசங்கரி, ராங்கியம்,
புதுக்கோட்டை மாவட்டம்.

ஒரே கொசு!




வகுப்பில் ஒரு மாணவன் கை, கால்களைச் சொறிந்து கொண்டே இருந்தான். இதை கவனித்த நான், ''ஏண்டா இப்படி சொறியறே?'' என்று கேட்டேன். ''வீட்டில் ஒரே கொசு. அதனால் தான் இப்படி'' என்று பதிலளித்தான். பக்கத்திலிருந்த இன்னொரு மாணவன், ''ஒரே கொசுதானேடா. லபக் குன்னு பிடிச்சு, டபக்குன்னு அடிக்காமல், கடிக்க விட்டுட்டு வேடிக்கை பார்த்தியாக்கும்'' என்று சொன்னவுடன் அனைவரும் சிரித்தோம்.

— எஸ். நீரஜாக்ஷி, பெரியார் நகர்,
சென்னை - 82.


செய்ய வேண்டியது என்ன?

தமிழாசிரியர் ''மகனுக்கு கல்வி அளிப்பதே தந்தை செய்யும் முக்கிய உதவி'' என்று பாடம் நடத்திக் கொண்டிருந்தார். கவனிக்காமல் ஒரு மாணவன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். அவனை எழுப்பி, ''தந்தை மகனுக்குச் செய்ய வேண்டியது என்ன?'' என்று கேட்டார் ஆசிரியர். சிறிதும் தயங்காமல் ''மகன் கேட்கும் தின்பண்டங்களை வாங்கித் தர வேண்டும்'' என்றானே பார்க்கலாம்!

— க. பெரியநாயகி, ஐந்தாம் வகுப்பு,
ஊ.ஒ.தொ. பள்ளி, கூத்தனூரர்,
வேட்டனூரர் அஞ்சல்.



நான் எடுக்கவில்லை!



முதல் நாள் நடத்திய திருக்குறளை பார்க்காமல் எழுதச் சொன்னார் தமிழாசிரியர். எல்லோரும் எழுதிக் கொடுத்தோம். ஆசிரியர் திருத்திக் கொடுக்க ஆரம்பித்தார். என் நண்பனின் முறை வந்தது. அவன் 'துப்பார்க்குத் துப்பாய துப்பார்க்குத் துப்பாய் தூவும் மழை' என்று எழுதியதைப் படித்த ஆசிரியர் ''எங்கேடா துப்பாக்கி?'' என்றார். ''சத்தியமா நான் எடுக்கலை சார்'' என்றான் நண்பன். எல்லோரும் சிரித்தோம். அவன் புரியாமல் விழித்தான். உடனே ஆசிரியர், ''நான் கேட்டது இந்தக் குறளில் வரும் மூன்றாவது வார்த்தை துப்பாக்கியை'' என்று கூறியவுடன் அவனும் சிரித்தான்.

— உ. ராமு, ஊ.ஒ.தொ. பள்ளி, கூத்தனூர்,
வேட்டணூர் (அஞ்சல்).

கண்ணுக்குத் தெரியாது!




அறிவியல் ஆசிரியர் பாடம் நடத்திவிட்டு, ''பாக்டீரியாவின் படம் வரைந்து பாகங்களைக் குறி'' என்று கூறினார். நாங்கள் வரையத் தொடங்கி சிறிது நேரம் ஆகியும் ஒரே ஒரு மாணவன் மட்டும் வரையாமல் உட்கார்ந்திருந்தான். அவனை நோக்கி ஆசிரியர், ''ஏன் வரைய ஆரம்பிக்கலை?'' என்று கேட்டார். ''நான் வரைந்து விட்டேன்'' என்றான். வெறும் வெள்ளை பேப்பர்தானே இருக்கு'' என்று கோபமாகக் கேட்டார் ஆசிரியர். ''சார் பாக்டீரியா சாதாரண கண்களுக்குத் தெரியாது என்று நீங்களே சொல்லிட்டு, கேட்டால் எப்படி?'' என்றான். ''நானும் மதிப்பெண்களை கண்ணுக்குத் தெரியாமலேயே போடுறேன்'' என்று ஆசிரியர் சொன்னவுடன், மன்னிப்புக் கேட்டுவிட்டு உட்கார்ந்து வரைய ஆரம்பித்தான் அந்த மாணவன்.

— ஐ. கமால் பாஷா, வத்தலக்குண்டு.

மயங்கி விழுந்தாள்!

தமிழ் ஆசிரியர் 'வசந்த வல்லியின் அழகு' என்ற செய்யுள் பகுதியை நடத்திக் கொண்டிருந்தார். நாங்கள் ஆர்வத்துடன் கேட்க ஆரம்பித்தோம். "வசந்த வல்லியின் அழகில் மயங்காதவர் எவருமில்லை" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போது என் பக்கத்து மாணவி மயங்கி விழுந்தாள். வேகமாகத் தண்ணீர் தெளித்து விழிக்கச் செய்தோம். "ஏன் மயக்கம் வந்தது?" என்று ஆசிரியர் கேட்டார். அருகிலிருந்த ஒரு மாணவி "அவள் வசந்த வல்லியின் அழகில் மயங்கி விட்டாள்" என்று கூற வகுப்பே சிரிப்பில் ஆழ்ந்தது. காலையில் சாப்பிடாமல் வந்ததால் மயங்கி விழுந்த விஷயம் பிறகுதான் தெரிந்தது!

— கே. தீபா, அயனாவரம்,
சென்னை.



உலர்ந்த கொம்பிலே மலர்ந்த பூ எது?



1. இரவும், பகலும் ஓய்வு இல்லை படுத்தால் எழுப்ப ஆள் இல்லை.
2. உயிர் இல்லாத நீதிபதி ஒழுங்காக நியாயம் சொல்லுகிறார்.
3. உலகமெங்கும் படுக்கை விரித்து உறங்காமல் அலைகிறான்.
4. உள்ளே இருந்தால் ஓடித்திரியும் வெளியே இருந்தால் விரைவில் மடியும்.
5. ஊசி நுழையாத காட்டில் ஒரு துரை போகிறான்.
6. எட்டாத ராணி இரவில் வருவாள் பகலில் மறைந்து விடுவாள்.
7. இந்த ஊரிலே அடிப்பட்டவன் அடுத்த ஊரிலே போய் சொல்லுவான்.
8. ஏழை படுக்கும் பஞ்சணையை எடுத்து சுருட்ட ஆள் இல்லை

— எஸ்.பி. சுப்பராகவன்
திருவாரூர்.

விடைகள் :
1. இதயம்,
2. தராசு, 3. காற்று,
4. மீன், 5. புகை,
6. நிலா, 7. தந்தி,
8. பூமி

1. உலர்ந்த கொம்பிலே மலர்ந்தபூ
2. இரண்டு கிணறுக்கு ஒரு பாலம்
3. சின்னக் குதிரைக்கு நூறு கடிவாளம்
4. நரைத்த கிழவி ஊரெல்லாம் ஆடுகிறாள்
5. அடி மலர்ந்து நுனி மலராத பூ
6. வெள்ளை மாடு வாலால் நீர் குடிக்கிது
7. மொட்டை மரத்தில் முப்பது காகம்
8. அறைகள் நூறு அத்தனையும் ஓர் அளவு

— பொன் திருவரங்கன்,
மானாமதுரை.

விடைகள் :
1. குடை,
2. மூக்கு, 3. தறி,
4. புகை,
5. வாழைப்பூ,
6. விளக்குத் திரி,
7. படகு,
8. தேன்கூடு.

1. அக்கா விதைத்த முத்து. அள்ள முடியாத சொத்து.
2. கிட்ட இருப்பான்; ஆனால் எட்டிப் பார்க்க முடியாது.
3. கிணற்றைச் சுற்றி புல்.
4. யாரும் இறங்க முடியாத கிணற்றில் சந்திரன் இறங்குகிறான்.
5. ஓடுகிற குதிரைக்கு வால் குறைகிறது.
6. குளம் வற்றி; கோரை கருகுகிறது.
7. இரவில் சுமந்திடுவான்; பகலில் சுருட்டிடுவான்.

— எஸ். ராஜாரத்தி,
ஐந்தாம் வகுப்பு,
ஊ.ஒ.தொ. பள்ளி, கூத்தனூர்,
வேட்டனூர் அஞ்சல்.

விடைகள் :
1. கோலம்,
2. முதுகு.
3. கண் புருவம்,
4. அகப்பை (அ) கரண்டி,
5. நூல்,
6. விளக்கு; திரி,
7. பாய்.

தங்கம்

எங்கும் தங்கம்...!


தங்கம் எங்கு கிடைக்கிறது என்று கேட்டால், 'டக்'கென்று தங்கச் சுரங்கங்களிலிருந்து என்று சொல்வீர்கள். வேறு பதிலும் சொல்லலாம். இதோ நீங்கள் நிற்கும் இந்த இடத்திலும் கூட தங்கம் இருக்கலாம் என்று சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள்! தங்கம் உலகின் எல்லா இடங்களிலும் காணப்படுகிறது. எல்லா விதமான நிலங்களிலும், எல்லா தாதுப் பொருட்களிலும், கடல் தண்ணீரிலும் கூட தங்கம் இருக்கிறது. ஆனால் மிக மிக சொற்பமான அளவே உள்ளது. பூமியின் புற அடுக்கிலுள்ள மண்ணிலிருந்து 1 டன் மண்ணை எடுத்து அலசோ, அலசென்று அலசினால் கிடைப்பது சுமார் 4 மில்லி கிராம் தங்கம்தான். ஆனால் இதைவிட அதிகமான அளவு தங்கம், பூமியின் மேல் விழும் விண் கற்களில் இருக்கிறது. கண்ணால் காண முடியாத துகள்களிலிருந்து, பல நூறு கிலோ கிராம் எடையுள்ள கட்டிகள் வரை, வெவ்வேறு அளவுள்ள ஸ்படிக கற்களில் தங்கம் பொதிந்திருக்கிறது. பொதுவாக தங்கம் தனியாக கட்டியாக கிடைப்பது இல்லை. சில சமயம் தனித் தங்கமாகவும் கிடைக்கிறது. தங்கம் மூலவண்டல் என்னும் தாதுப் பொருளாக மலைகளின் மிக ஆழமான பகுதிகளில் காணப்படுகிறது. இதனை சுரங்கம் வெட்டித்தான் எடுக்க முடியும். தங்கம் காற்று, நீர் மற்றும் இயற்கை சக்திகளால் தாக்கப்பட்டு சிதைந்து, வண்டல் படிவாக மாறி,




ஆறுகளால் அடித்து வரப்பட்டு, ஆற்று மணலிலும், ஆற்றோரங்களின் படுகைகளில் சிறு, சிறு துகள்களாகவும் கிடைக்கிறது. வண்டல் படிவிலிருந்து தங்கத்தைப் பிரித்தெடுக்கும் முறைக்கு 'அலுவியல்' (Alluvial) என்று பெயர். உலகிலேயே மிகப் பெரிய தங்கச் சுரங்கம் தென் ஆப்பிரிக்காவிலுள்ள 'கிம்பர்லி' சுரங்கம்தான்!

உடைமையாளர் யார்?

உங்கள் அம்மா போட்டிருக்கும் தங்கத் தோட்டின் அல்லது அப்பாவின் மோதிரத்தின் ஆரம்ப கால உடைமையாளர்கள் யார்? "நம் அரசாங்கம் தான்" என்கிறீர்களா? உங்கள் வீட்டிலுள்ள தங்கம் சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன் எகிப்தில் வாழ்ந்த மன்னரின் கஜானாவிலிருந்து வந்ததாயிருக்கலாம்; அல்லது ரோம் நகரில் வாழ்ந்த சாதாரண மனிதனின் பெட்டிக்குள் இருந்த தங்கமாயிருக்கலாம்!






"நீங்க டாக்டரா இருக்கலாம்; அதுக்காக உங்க பையன் சிரஞ்சீவியை நீங்க 'சிரெஞ்ச்'னு கூப்பிடறது நல்லா இல்லே சொல்லிட்டேன்!''
– சீர்காழி வி. ரேவதி

ஏனெனில் தங்கம் அழிவில்லாதது. ஒரு முறை உற்பத்தி செய்த பிறகு, அது எக்காரணம் கொண்டும் அழிவதில்லை. ஒரு மன்னரின் கஜானாவிலிருந்து, மற்றொரு மன்னரின் பொக்கிஷத்திற்கு, ஒரு அரசரிடமிருந்து வேறொரு அரசுக்கு, ஒரு மனிதரிடமிருந்து மற்றொரு மனிதருக்கு என்று தொடர்ந்து கைமாறிக் கொண்டே வந்திருக்கிறது. தங்கத்தை மற்ற உலோகங்கள் போல பொதுவாக அழிக்க முடியாது. ஏனெனில் இதன் உருகு நிலை அதிகம். ஆக்ஸிஜனுடன் இணைந்து ஆக்ஸைடு என உருமாறாது. எனவேதான் உங்கள் வீட்டிலுள்ள தங்க நகை, நம் கோலார் தங்கச் சுரங்கத்திலிருந்து வந்திருக்க வேண்டிய அவசியமில்லை; அது எந்தக் காலத்திலோ எந்த மன்னரை அல்லது ராணியையோ அலங்கரித்த நகையாகவோ இருந்திருக்கலாம்.

தங்கத்தின் வரலாறு

உலோகங்களின் அரசன் எது தெரியுமா? தங்கம்தான். தங்கம் துருப்பிடிக்காது. பொதுவாக விதிகளின்படி தங்கமும் பிராணவாயுவும் இணைவது கிடையாது. இதனாலே இதற்கு 'புனித உலோகம்' (Noble metal) என்று பெயர். தங்கம் மனிதனால் எப்போது கண்டு பிடிக்கப்பட்டது என்று சரியாகத் தெரியவில்லை. மனிதகுல வரலாறு எழுதப்படுவதற்கு முன்பே தங்கத்தின் பயன்பாடு இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. மேலும் மனிதன் முதன் முதல் பயன்படுத்திய உலோகம் தங்கம்தான் என சில குறிப்புகள் தெரிவிக்கின்றன. ஏனெனில் தங்கம் எதனுடனும் சேராமல், தனியான தாதுக்களாக கிடைத்ததால், மனிதன் இதனை வெகு எளிதாக கண்டுபிடித்திருக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது. எனினும் தங்க உற்பத்தியின் வரலாறு 6,000 வருடங்களைக் கடந்ததாகும். எகிப்தியர்கள் தான் 5000 ஆண்டுகட்கு முன்பு முதன் முதலில் சுரங்கங்கள் அமைத்து தங்கத்தை எடுத்தனர் என சான்றுகள் தெரிவிக்கின்றன. கிரேக்க மற்றும் ரோமானிய அரசர்கள் மற்ற நாடுகளிலிருந்து கொள்ளையடித்தும், அடிமைகள் மூலம் தங்கச் சுரங்கங்களிலிருந்தும், தங்கத்தைப் பெற்றனர் என்பதும் தெரிகிறது. உலகின் தங்க உற்பத்தி ஆண்டுக்கு 12,000 – 13,000 டன்களாகும். தென்னாப்பிரிக்கச் சுரங்கங்களில் சுமார் 4,00,000 தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். அங்கு வருடந்தோறும் 700 – 800 டன்கள் தங்கம் வெட்டியெடுக்கப்படுகிறது. ஒரு தொழிலாளி சராசரியாக 2 கிலோ தங்கத்தை எடுக்கிறார். இன்று தங்க உற்பத்தியில் முக்கிய இடம் வகிப்பது பெரு நாடுதான். இது கடந்த மூன்றாண்டுகளில் 84 சதவீதம் அதிக உற்பத்தி செய்துள்ளது.




— மோகனா


அனகோண்டா பைத்தான் போவா


ஆழி

அனகோண்டா, பைத்தான், போவா மூன்றுமே மலைப்பாம்புகள். ஒன்றுக்கொன்று பழக்கங்களில் சிறிது மாறுபடும். இவற்றுக்கு விஷப்பற்கள் கிடையாது. இரையை வலிமை மிக்க தன் உடலால் இறுக்கிக் கொள்ளும். இரைப் பிராணியின் உயிர் போனபின் தான் பிடி நெகிழும். பிறகு தன் சுற்றைப் பிரித்து இரையின் தலையிலிருந்து தொடங்கி அதை உள்ளே இழுத்து விழுங்கும்!




உலகிலேயே பெரிய பாம்பு அனகோண்டா தான். அது சுமார் 12 மீட்டர் நீளமும், சுமார் 120 கிலோ எடையும் இருக்கும். அது ஒரு சிறுத்தையைக்கூட தன் உடலால் இறுக்கிக் கொன்று விடும்!







பசிகொண்ட அனகோண்டா சில சமயம் மனிதர்களையும் விழுங்கக்கூடும். பர்மாவில் ஒரு சமயம் 12 மீட்டர் நீளமுள்ள ஓர் அனகோண்டாவைச் சுட்டுக் கொன்றபோது, அதன் வயிற்றில் ஒரு ஜப்பானியனின் உடல் இருந்தது!

இந்த வகைப் பாம்புகளின் வாயில், வழவழப்பான திரவம் ஒன்று சுரக்கிறது. எனவேதான், இரை எவ்வளவு பெரிதாக இருந்தாலும் வழுக்கிக்கொண்டு வயிற்றுக்குள் போய்விடுகிறது. இதன் இரைப்பை நம்பமுடியாத அளவுக்கு விரிந்து கொடுக்கக் கூடியது!







பாம்புகளுக்குத் தாடைகளில் மூட்டுக்கள் இல்லை. மேல் தாடையும் கீழ்த்தாடையும் ரப்பர் போன்ற தசையால் இணைக்கப் பட்டிருக்கின்றன. அதனால் தன்னை விடப் பருமனான இரையையும் விழுங்கும்.



அனகோண்டாக்கள் தென் அமெரிக்காவில் அதிகம். அங்கே பிடிபட்டதில் அதிகம் நீளம் கொண்டது 11.43 மீட்டர் இருந்தது. அனகோண்டா நீரிலும் நிலத்திலும் வாழக்கூடியது. நீர் அருந்த வரும் வாத்துக்கள், பன்றிகள், மான்கள் முதலியவற்றை இரையாக்கிக் கொள்ளும். சுமார் 25 ஆண்டுகள் உயிர் வாழும்!

அனகோண்டா மாதம் ஒரு தடவை இரை கொள்ளும். இரை பெரிதாக இருந்தால் மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை.







போவா என்னும் மலைப்பாம்பு சுமார் 25 ஆண்டுகள் உயிர் வாழும். அமெரிக்கக் காடுகளிலும், மடகாஸ்கரிலும் அதிகம். போவாவில், மர போவா, மணல் போவா என்னும் பிரிவுகள் இருக்கின்றன. மணல் போவா பாலைவனங்களில் மணலில் புதைந்து வாழும். சுமார் 5 மீட்டர் நீளம் இருக்கும். போவாவில் 35 வகைகள் இருக்கின்றன. இரை தின்பதில் இதுவும் அனகோண்டா போலத்தான்!

பைத்தான் என்னும் மலைப் பாம்பு தன் எடையில் ¼ பங்கு எடையுள்ள இரையைக்கூட விழுங்கிவிடும்! அது தன் வாயை 180 டிகிரி அளவுக்கு ஒரு நேர் கோடு போல் திறந்து பெரிய இரையையும் விழுங்கிவிடும்!

இரை பெரிதாக இருந்தால் ஒரு பைத்தான் 2 அல்லது 2½ மாதங்களுக்குப் பிறகுதான் மறுபடியும் இரை தேடும். வயிற்றுக்குள் போன இரை ஜீரணமாகிறவரையில் அது மாதக்கணக்கில் ஒரே இடத்தில் படுத்துவிடும்!







பைத்தான், முதலையைக்கூட இறுக்கிக் கொன்று விழுங்கிவிடும். ஜீரணிக்க முடியாத நகங்கள் மட்டுமே கழிவாக வெளியேறும்.

பசி எடுத்தால் மட்டுமே தாக்கக்கூடியது பைத்தான். ஒரு தடவை வயிறார இரை உட்கொண்டுவிட்டால், அது ஒரு குழந்தையைக் கூட ஒன்றும் செய்யாது!






பைத்தான் ஒரு சமயத்தில் 100 முட்டைகளுக்கு மேல் இடும். அது தான் இடும் முட்டைகளைத் தன் உடல் சுருள்களினிடையே வைத்துக் குஞ்சு பொரிக்கும். சிறு குட்டிகள் வெளிவரும் வரை பாது காக்கும். முட்டையிலிருந்து வெளிவரும் குட்டி சுமார் 75 செ.மீ. நீளம் இருக்கும்!



ஆஸ்திரேலிய கறுப்புத்தலை பைத்தானுக்கு மிகவும் பிடித்த இரை மற்றொரு வகைப் பாம்புதான்!



காட்டுவாசிகள், ஒரு விலங்கை விழுங்கிக்கொண்டிருக்கிற மலைப்பாம்பைக் கண்டால், அதைக் கொன்று, அதன் வாயில் உள்ள விலங்கை எடுத்துக் கொண்டு போய் சமைத்துத் தின்றுவிடுவார்கள். இரையை விழுங்கிக் கொண்டிருக்கிற மலைப்பாம்பால் மற்றவர்களைத் தாக்க முடியாது!



மலைப்பாம்புகள், ஆப்பிரிக்கா, ஆசியா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளில் வாழ்கின்றன. இவை சிவப்பு, பச்சை, மஞ்சள், கருப்பு நிறங்களிலும் இருக்கின்றன. மலேசியாவில் 'இரத்த மலைப்பாம்பு' என்னும் பாம்பு 3 மீட்டர் நீளத்தில், உடலில் பெரிய சிவப்புப் புள்ளிகளுடன் இருக்கிறது.



மலைப்பாம்பின் தோல் கடினமானது. உறுதியானது. அதன் தோலில் தைக்கப்படும் செருப்புக்களுக்கு விலை அதிகம்!



மலைப்பாம்பின் மாமிசம் சீனாவில் மிகவும் விலை உயர்ந்த உணவு. மலைப்பாம்பு மாமிசம் டப்பாக்களில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது! சீனாவில் பெரிய செல்வந்தர்கள் வீட்டில் இந்த மாமிசம் மிகவும் ஆடம்பரமான உணவு!



சாதனை மன்னன் சச்சின் டெண்டுல்கர்

வயது 25; உயரம் 5 அடி 4 அங்குலம்; எடை கொஞ்சம் அதிகம்தான். இது கிரிக்கெட் உலகின் 'லிட்டில் மாஸ்டர்' சச்சின் டெண்டுல்கரின் பயோடேட்டாவிலிருந்து சில பகுதிகள்.

ஆனால் பாருங்கள் விவியன் ரிச்சர்ட்ஸ், ஆலன் பார்டர், சுனில் கவாஸ்கர், ப்ரையன் லாரா, ஜாவேத் மியாண்டாட், கிரெக் சாப்பல் ஆகிய மிக முக்கிய பேட்ஸ்மேன்களைக் காட்டிலும் அதிக டெஸ்ட் சராசரியாக இன்று ஆடிக் கொண்டிருப்பவர் சச்சின்தான்.

அண்மையில் ஷார்ஜா ஒருநாள் போட்டித் தொடர் நடைபெற்றது. அதன் இறுதிப் போட்டியில் விளையாட இந்தியா தகுதி பெறுமா என்பது பெரும் ஐயமாக இருந்தது. சச்சின் வந்தார், சவாலை எதிர்கொண்டார். 143 ரன்கள் குவித்து இந்தியாவை இறுதிப் போட்டிக்கு அழைத்துச் சென்றார். கபில் தேவும் அசாருதீனும் ஜிம்பாவேக்கு எதிராக அடித்த 175*, 153* ரன்களுக்கு அடுத்து இந்தியாவின் அதிகபட்ச மூன்றாவது தனிநபர் ரன் சாதனை இதுதான். டெண்டுல்கர் இது வரை அடித்த 14 சதங்களில் சிறந்தது இதுவே. இதற்கு முன் 1996இல் குவித்த 137 ரன்களே அவரின் சாதனையாக இருந்தது. சரி. ஒருவழியாக இறுதிப்போட்டிக்கு வந்தாயிற்று. இறுதிப் போட்டியில் சச்சினின் பங்கு இல்லாமலா இருக்கும்? 131 பந்துகளைச் சந்தித்து 134 ரன்கள். மீண்டும் மீண்டும் ஆட்ட நாயகனாகத் தேர்வு; போட்டி நாயகனுக்கான ஒபல் கார் பரிசு, வேகமான முறையில் 50 ரன்களை எட்டியதற்கான விருது, அதிக 'ஆறு'களை (9) அடித்ததற்கான விருது என பரிசு மழையில் குளித்தார் சச்சின். அன்றைய தினம் அவரின் 25-வது பிறந்த நாள். மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டோட இன்னும் காரணங்கள் வேண்டுமோ! டெண்டுல்கரின் ஒருநாள் சதங்களின் கணக்கு பதினைந்தாக உயர்ந்திருக்கிறது.

ஆஸ்திரேலிய அணியின் ஒருநாள் போட்டிகளின் கேப்டன் ஸ்டீவ் வாஹ் சொல்கிறார் "டெண்டுல்கர் தனி ஒருவராகப் போராடி அணிக்கு கோப்பையைப் பெற்றுத் தந்தார். கடைசி லீக் போட்டியிலும் இறுதிப் போட்டியிலும் அவர் அடித்த சதங்கள் சிறப்பானவை. டான் பிராட்மேனுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் சச்சினே சிறந்த ஆட்டக்காரர். பந்து வீச்சாளர் வீசும் பந்தை



சரியாகக் கணித்து மட்டையைச் சுழற்றுவதில் சச்சினே வல்லவர்." சச்சினைப் புகழாதவர்களை மட்டும் விரல் விட்டு எண்ணி விடலாம்.

இந்தியாவில் நடைபெற்ற பார்டர் – கவாஸ்கர் டிராபி டெஸ்ட் தொடரிலும் மிகச் சிறப்பாக விளையாடினார். சச்சின், இதுவரை ஆடிய 61 டெஸ்ட் மாட்ச்களில் 4552 ரன்கள் சேர்த்துள்ளார்! சச்சினின் சராசரி 54.8; தனி நபர் சாதனை ரன்கள் 179; அடித்த சதங்கள் 16.

ஆஸ்திரேலிய அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்ததிலிருந்து டெஸ்ட், ஒருநாள் தொடர் இரண்டிலும் சேர்த்து டெண்டுல்கர் 1130 ரன்களை அந்த அணிக்கெதிராக எடுத்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். ரன் குவிப்பு நாயகன் சச்சின், 'மேலும் ரன்களைக் குவிக்கவே ஆசைப்படுகிறேன்' என்கிறார்.

ஷார்ஜா இறுதிப் போட்டியில் சதமடித்ததின் விளைவாக இன்னொரு புதிய சாதனையையும் சச்சின் நிகழ்த்தியிருக்கிறார். 'அடுத்தடுத்து சதமடித்த ஒரே இந்திய ஆட்டக்காரர்' என்பதுதான் அது.

இத்தொடரில் 5 போட்டிகளில் 435 ரன்கள் குவித்த சச்சின் மேலும் ஒரு சாதனையையும் நிகழ்த்தியிருக்கிறார். உலகக் கோப்பை மற்றும் உலகத் தொடர் போட்டிகள் நீங்கலாக பிற போட்டித் தொடர்களில் அதிக ரன்கள் குவித்தவராகிறார். இதற்கு முன் பாகிஸ்தானின் அமீர் சோஹைல் 1994–95 மண்டேலா டிராபியின்போது 8 மாட்ச்களில் 432 ரன்கள் சேர்த்ததே சாதனையாக இருந்தது.

இவை தவிர, டெண்டுல்கர் சௌரவ் கங்குலியோடு இணைந்து உலகின் வெற்றிகரமான ஒருநாள் தொடக்க ஆட்டக்காரர்கள் (1742 ரன்கள்) வரிசையில் ஐந்தாவதாக வருகிறார். இப்படி சச்சினின் சாதனைப் பட்டியல் விரிந்து கொண்டே போகிறது.

16 வயதில் ஆடத் தொடங்கிய டெண்டுல்கர் 31 சர்வதேச சதங்களைச் சேர்த்திருக்கிறார். அவை 16 டெஸ்ட்களிலும் 15 ஒருநாள் போட்டிகளிலும் கிடைத்தவை. சுனில் கவாஸ்கர் (34 டெஸ்ட் சதங்கள், 1 ஒரு நாள் சதம்), விவியன் ரிச்சர்ட்ஸ் (24 டெஸ்ட் சதங்கள், 11 ஒரு நாள் சதங்கள்) ஆகிய இருவரின் சாதனையை எட்டிப் பிடிக்க சச்சினுக்குத் தேவை இன்னும் 4 சதங்களே!


விவியன் ரிச்சர்ட்ஸ் பெற்ற 31 ஆட்ட நாயகன் விருதுகள், டெஸ்ட் ஹெய்ன்ஸ் பெற்ற 26 ஆட்ட நாயகன் விருதுகள் ஆகியவற்றைத் தொடர்ந்து 26 ஆட்ட நாயகன் விருதுகளைப் பெற்ற நம் நாயகன் சச்சினின் சாதனைகள் தொடரும்!

— விளையாட்டுப் பையன்

Edited, printed and published by K. Rajendran at Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones — Editorial : 2345624; Circulation Manager : 2345623; Subscription and Advertisement : 2345622; Chief Administrative Officer : 2345621
Subscription — (Inland) Annual Rs. 60/-; Half Yearly Rs. 30/-
Overseas (Air Mail) Annual Rs. 400/-; Half Yearly Rs. 200/-




பூந்தாவனம்



எந்தப் பட்டம் யாருடையது?

பட்டாம்பூச்சிகளுக்கிடையே வித்தியாசம் என்ன?



விடை : 1. உணர் கொம்பு, 2. கண், 3. கழுத்தில் கோடுகள், 4. இறக்கையின் வடிவம், 5. வால்பகுதி கோடுகள்.

கணிதப் புதிர்

1 2 3
4 5 6
7 8 9

நான்கு மூலையிலுள்ள எண்களை மாற்றி எந்தப் பக்கம் கூட்டினாலும் 15 வருமாறு அமையுங்கள்.

– வினோத்குமார், பெரம்பூர்.

விடை :

1 2 3
9 7
4 5 6
3 1
7 8 9





எரிமலை பெயர்க் காரணம்?

எரிமலையை 'வல்கனோ' (Volcano) என்று ஆங்கிலத்தில் அழைப்பர். இப்பெயர் எப்படி வந்தது தெரியுமா? ரோமானியர்களின் நெருப்புக் கடவுள் வல்கேன் (Vulcan). அக்கடவுள் சிசிலியை அடுத்துள்ள வல்கனோ என்னும் இடத்தில் வாழ்ந்து வருவதாகக் கருதப்பட்டது. இதனையொட்டியே எரிமலைக்கு 'வல்கனோ' என்ற பெயர் ஏற்பட்டது.

ஆதாரம் : பொது அறிவுத் தேன் கூடு

– கே. ஆர். உதயகுமார், சென்னை – 1.

இந்திய கிரிக்கெட் வீரர்களைக் கண்டு பிடியுங்கள்!

– எஸ். லக்ஷ்மி, ஏழாம் வகுப்பு, அரசினர் மகளிர் மே.நிலைப் பள்ளி, நங்கநல்லூர், சென்னை.

ளே	ப்	ம்	கு	ல்	னி	அ	னி
ச	தி	க	ப்	கே	ந	சா	ங்
மே	வி	டி	ங்	ர	ண	ரு	சி
தை	க	க	க	கு	ஹு	தீ	ன்
ச	னு	னி	வ்	கே	வி	ன்	பி
ஜா	பி	ட்	வி	ரா	தி	ரு	ரா
டே	சி	க	னி	ழி	வி	பி	மு
ஜ	நி	ர்	க	ல்	டு	ண்	டெ

விடை :

ளே	ப்	ம்	கு	ல்	னி	அ	னி
ச	தி	க	ப்	கே	ந	சா	ங்
மே	வி	டி	ங்	ர	ண	ரு	சி
தை	க	க	க	கு	ஹு	தீ	ன்
ச	னு	னி	வ்	கே	வி	ன்	பி
ஜா	பி	ட்	வி	ரா	தி	ரு	ரா
டே	சி	க	னி	ழி	வி	பி	மு
ஜ	நி	ர்	க	ல்	டு	ண்	டெ

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / MS (S) 281/98 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS / (S) 14 * Registered as a Newspaper in Srilanka